சக்தி

979
3-49.

சக்தி
புரட்டாசி, 1949
அணா எட்டு

OFFICE OF THE REGISTRAR OF ...
23 SEP 1949
MADRAS
2560

பொருள் அடக்கம்

மலர் 16 : இதழ் 6

ஆசிரியர் குறிப்பு	...	ஆசிரியர்	1
பாரதி திருநாள்	...	'இரட்டையர்'	3
சரோஜினியின் நகைச் சுவை	...	அமர்நாத் ஜா	6
அல்லயன்ஸ் ஐயர்	...	தி. ஜ. ர.	8
முகப்பரு...	...	நார்மன் கோல்ட் ஸ்மித்	15
பாரிஸ்		சோமலெ. இலக்ஷ்மணச் செட்டியார்	18
"பதினாறு சுய சித்திரங்கள்"	...	ச. ராஜகோபாலாச்சாரியார்	25
குட்டிக் கதைகள்		'பொதுஜனம்'	29
படங்கள்	... .		37—40
அவன் முடிவு	...	ரா. வெ. ரங்கநாதன்	41
ஆண்மையின்மை	...	செல்வின் ஜேம்ஸ்	49
தாய்	...	ஜனோகலாஸ்	53
பார்ஸலில் வந்த மனைவி	...	வி. பி. பி.	62
கலா சிருஷ்டி	...	கார்ல் மார்க்ஸ்	63
ஆப்கானிஸ்தானம்	... ...		66
காந்தி மஹான் கதை	...	கொத்தமங்கலம் சுப்பு	68
மலேயாப் போராட்டம்	...	பி. துரோவ்	72
நிறங்களின் லீலாவிநோதம்	....	ரோலண்ட் பிளாக்பர்ன்	75

விரோதி சக்தி புரட்டாசி

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்.

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

o

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

o

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

சக்தி வெளியீடுகள்

88896
சென்னை-600 008.

செல்வம் — க. சந்தானம்

பொருளாதாரத்தைப் பற்றிய நூல். பாமரரும் புரிந்து கொள்ளக்கூடியவாறு எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. தமிழ்வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற புத்தகம். 1 8 0

லெனின் பிறந்தார் — ஆர். ராமநாதன்

ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறுதான் இந்த நூல். இந்த நூலைப் படிப்பதால் ருஷ்யப் புரட்சி சரித்திரத்தையும் கூடவே படிப்பது போல இருக்கும். 3 8 0

உலோகங்களும் நாமும் — மு. அருணசலம்

உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத்தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. ரூ. 5 0 0

உணவுப் பஞ்சம் — மு. அருணசலம்

உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது? உணவுப் பஞ்சத்தைத் தடுப்பது எப்படி? உணவுப் பஞ்சமே இனி வாராதபடி எப்படிச் செய்வது என்பது பற்றிய புத்தகம். ரூ. 1 8 0

ஐந்தாவது சுதந்திரம் — ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

இதில் பதினொன்கு கட்டுரைகள் இருக்கின்றன. சமூகத்தில் ஊறிக்கிடக்கும் ஊழல்களைப் பாரபட்சமின்றிக் கண்டிக்கும் கட்டுரைகள், நம்மவரோடு உலகத்தவரை ஒப்பிட்டு நோக்கும் கட்டுரைகள், நாட்டின் முற்போக்கு பற்றிய கட்டுரைகள், தெரியாத விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரைகள் இதில் அடக்கம். நமது அருமை தேசபக்தர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தியின் மகள்தான் இதன் ஆசிரியர் ஸ்ரீமதி லக்ஷ்மி. ரூ. 1 8 0

சக்தி காரியாலயம், சென்னை 14

விரோதி

மலர் 16

சக்தி

புரட்டாசி

இதழ் 6

மெய்ப் பொருள் காண்பது அறிவு

○

ஆசிரியர் குறிப்பு

இம்மாதத்தில் தமிழ் நாடெங்கும் பாரதியார் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதில், குறிப்பிடத்தக்க முறையில் பெரிய வைபவங்களாகக் கொண்டாடப்பட்டது, கோவை, எட்டயபுரம், சென்னை, புதுச்சேரி முதலிய ஊர்களில்தான் என்று அறிகிறோம். இந்த வருஷம் கோயமுத்தூரில் விஞ்ஞானி ஸ்ரீ ஜி. டி. நாயுடுவின் மாளிகையாகிய 'கோபால் பாக்' கில் நடைபெற்ற பாரதி விழாவுக்குப் பிரத்தியேகமான சிறப்புகள் பல இருக்கின்றன. 'பெரிய விழாவை நாங்கள் நடத்தினோம்' என்று பின்னால் சொல்லிக்கொள்ளுவதற்காக, நாட்டியக் கச்சேரி, பாட்டுக் கச்சேரி முதலிய தந்திரங்களைக் கையாண்டு ஊர்க்கூட்டத்தைக் கூட்டும் வழக்கத்தைப் பல இடங்களிலும் பார்த்திருக்கிறோம். அந்த விழாக்களில் பாரதியாரின் பாடல்களைப் பற்றிய பிரசங்கங்களோ, அல்லது பாரதியாரின் இலக்கியத்தைப் பரப்பும் முயற்சிகளோ பிரதானத்துவம் பெறாமல், பாட்டுக் கச்சேரிகளும், மற்ற தடபுடல்களும்தான் தலைமை வகிக்கும். ஆனால் கோயமுத்தூர் நகரத்தில் மேற் சொன்னவை போன்ற தந்திரங்களைக் கையாளாமலும், பாரதி விழாவின் அந்தஸ்தைக் குறைத்துவிடாமலும் மிகவும் நல்ல முறையில் விழாவை நடத்தி யிருக்கிறார்கள். பிரம்மாண்டமான ஜனக் கூட்டம் இரண்டு நாள் வைபவத்துக்கும் வந்திருந்தது. விழாவுக்கு, பாரதியாருடன் பழகியவர்களான ஸ்ரீமான்கள் பரலி சு. நெல்லையப்பர், பாரதிதாசன், வ. ரா., பாரதியாரின் குடும்பத்தார் முதலியவர்களும், ஸ்ரீமான்கள் அண்ணாத்துரை, சிவஞான கிராமணியார், ச. து. சு. யோகியார் முதலியவர்களும் மற்றும் பல எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் வந்திருந்தனர். விழாவில் ஸ்ரீ ச. து. சு. யோகியார் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது குறிப்பிடத்தக்க விஷயம். இவ்வளவு சிறப்பான முறையில் பாரதியார் விழாவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்த விஞ்ஞானி ஸ்ரீ ஜி. டி. நாயுடுவையும், அவருக்கு ஒத்தாசையாக இருந்து விழாவை வெற்றிகரமாக நடத்தி வைத்த "சிவாஜி" ஆசிரியர் ஸ்ரீ திருலோக சீதாராம், "வசந்தம்" ஆசிரியர் ஸ்ரீ ஆர். திருஞான சம்பந்தம், "பிரசண்ட விகடன்" ஆசிரியரும், தமிழ் எழுத்

தாளர் சங்கத் தலைவருமான ஸ்ரீ நாரண—துரைக்கண்ணன் முதலியோரையும் மிகவும் பாராட்டுகிறோம். அடுத்த இதழில் கோவை பாரதி விழாவைப்பற்றி ஒரு நீண்ட கட்டுரை வெளி வருகிறது என்றும் இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எட்டயபுரம் விழா நிகழ்ச்சிகள் திருச்சி ரேடியோ நிலையத்தாரால் அஞ்சல் செய்யப்பட்டன. அதன்மூலம் எட்டயபுரத்துக்குப் போகாதவர்களும் ரேடியோமூலம் விழாவின் சிறப்பை அறிய முடிந்தது. அங்கு நடைபெற்ற ஸ்ரீ அ. சீனிவாசராகவன் முதலியவர்களுடைய சொற்பொழிவுகளும், வில்லடிப் பாட்டும் பிரமாதமாக இருந்தன.

சென்னை விழாவில் பல பிரமுகர்களும் பங்கெடுத்துக்கொண்டனர். திருவல்லிக்கேணியில் பாரதியார் குடியிருந்த வீட்டை சர்க்கார் வாங்கி அதில் பாரதியார் ஞாபகார்த்த நிலையம் ஏற்படுத்தவேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். இது மிகவும் நல்ல காரியம். இந்த முயற்சிக்குத் தமிழ் நாடு ஆசீர்வதிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாரதி விழாவைப்பற்றி எழுதும்போது, ஒரு முக்கியமான விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. அதுதான் பாரதியாரின் நூல்களைப் பற்றிய விஷயம். சர்க்கார் பாரதியார் நூல்களின் உரிமையை வாங்கி விட்டது யாவரும் அறிந்ததே. ஆனால், இன்னும் பொது ஜனங்களுக்குப் பாரதியாரின் நூல்கள் கிடைக்காமல்தான் இருக்கிறது. அதனால், விரைவில், குறைந்தபக்ஷம் அடுத்த வருஷம் பாரதி விழாவுக்குள்ளாகவாவது, பாரதியின் நூல்களை எல்லாம் சிறந்த முறையில் சர்க்கார் வெளியிடவேண்டியது அவசியம் எனக் கூற விரும்புகிறோம்.

சென்ற 1948, ஜூன் மாதம் காலம் சென்ற தமிழ் எழுத்தாளர் ஸ்ரீ புதுமைப்பித்தனுடைய குடும்பத்தாருக்கு நிதி திரட்டி அளிக்க வேண்டியது அவசியம் என்பதை ஏற்கெனவே பல அறிஞர்கள் வற்புறுத்தி யிருக்கிறார்கள். சென்னை, மகாஜன சபைக் கட்டிடத்தில் ஸ்ரீ அ. சீனிவாசராகவன் தலைமையில் நிதி திரட்டும் விஷயமாக ஆலோசனை செய்ய ஒரு கூட்டமும் அப்போது நடைபெற்றது. அதன் பிறகு நிதி திரட்டும் விஷயத்தில் எல்லோரும் பூரணமான கவனம் செலுத்தவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இப்பொழுது தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ நாரண—துரைக்கண்ணன் நிதி விஷயத்தை மறுமுறையும் ஞாபகப்படுத்தியிருக்கிறார். ஒப்புயர்வற்ற சிறுகதைகளை எழுதி தமிழ் நாட்டின் வசன இலக்கியத்துக்குப் பெருமை தந்த ஸ்ரீ புதுமைப்பித்தனுடைய நிதிக்கு, தமிழ் மக்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். பணம் அனுப்ப வேண்டிய விலாசம்: ஸ்ரீ பெ. தூரன், ஆசிரியர், கலைக்களஞ்சியம், சென்னை சர்வகலாசாலை, சென்னை 5.

*

கோயமுத்தூரில் பாரதி விழாவை ஒட்டி 12-9-49-ல், ஸ்ரீ ஜி. டி. நாயுடுவின் மாளிகையில் ஸ்ரீ ச. து. சு. யோகியார் தலைமையில் ஒரு கவியரங்கம் நடைபெற்றது. அதில், ஸ்ரீ திருச்சிற்றம்பலக் கவிராயரும், ஸ்ரீ கு. அழகிரிசாமியும் 'இரட்டைய'ராகத் தம் கவியை அரங்கேற்றினார்கள். பரஸ்பரம் இருவரும் ஒருவர் அடியெடுத்துக் கொடுக்க, மற்றொருவர் முடித்துக் கொண்டு வந்தார். முதல் பாட்டின் முதல் இரண்டு அடிகள் கவிராயர் பாடியவை. அதில் பின் இரண்டு அடிகளும் அடுத்த பாட்டின் முதல் இரண்டு அடிகளும் ஸ்ரீ. கு. அழகிரிசாமி பாடியவை. பிறகு அதைத் தொடர்ந்து நான்கு வரிகளைக் கவிராயர் பாடினார். இப்படியே இருவரும் மாறி மாறிப் பாடினர்.

பாரதி திருநாள்

○

'இரட்டையர்'

கோவைத் திருநகரில் கூட்டமிட்டுப் பாட்டிசைத்து
நாவலிக்க நாவலிக்கும் நாவலரே—யாவருக்கும்
வந்தனங்கள் சொல்லி வாசிக்கும் எம் கவியை
சிந்தனையில் கொள்வீர் தெளிந்து.

நெல்லைப் பதியுடையான் நீடுபுகழ் அம்பலத்தான்
ஒல்லை இடைசெவலாம் ஊருடையான்—சொல்லுக்கு
அழகேற்றும் அழகிரியான் அணிசெய்யக் கேட்டிடுவீர்
பழகு தமிழ் எம்மிரட்டைப் பா.

ராவிலே கண்விழித்து ரயிலில் வரும்போது
பாவிலே கண்வைத்துப் பாடினோம்—நாவிலே
வந்து சரஸ்வதியார் வாழாக் கலியுகத்தில்
சொந்தக் கவியாய்த் துணிந்து

காட்பாடி ஜங்ஷனிலே காப்பியின்றி டீகுடித்து
ராப்பாடியாய் நாங்கள் ராத்திரியில்—பாப்பாட
எதுகையோடு போராடி எதிர்க்கட்சி தானுடி
இது வுரைத்தோம் கேட்பீர் இனி.

யாப்பெதுகை என்றும் யமகம் திரிபென்றும்
ஆப்பறைந்து தமிழ்த்தாய்க்கு அறம்பாடும்—தோப்புக்
கரண வித்தைப் புலவருக்கு கவியரசன் பாரதியான்
மரணமென வந்தானம் மா.

கம்பனுக்குப் பின்னுலோர் கருவேப்பிலங் கன்ருய்
செம்பொற் கவிச்சுரங்கச் செல்வமாய்—செம்பாகப்
பாட்டிசைத்து நந்தமிழைப் பாலித்து மெய்ப்புகழை
நாட்டியதும் பாரதியின் நா.

மிட்டா மிராசுகளை மேவாமல், அவர்சாத்தும்
புட்டா ஜரிகைகளைப் போடாமல்—முட்டாள்கள்
பாட்டுரைத்த பாவனையில் பாடாமல், அன்னவர்க்கு
வேட்டு வைத்தான் பாரதியான் ' வே.

பாரதியார் நன்னுளில் பாவலர்கள் யாமிருவர்
ஊரறியச் சொல்லும் உரையுண்டு—நீரறியும்!
பாரதியின் பாட்டாலே பாரதியின் பேரழிக்கும்
ஓரிருவர் எங்கும் உளர்.

லாலி பலபாடி லஞ்சச் சிறுபொருளின்
கூலியதன் மேலே குறிவைத்து—சோலியதாய்
மாய்மாலம் பண்ணும் வஞ்சகர்க்கு யாமுரைப்போம்:
'போயொழியும் எங்கேனும் போய்'.

உண்மை உழைப்பாளர், ஊருக்கு நல்லாளர்
பெண்மைதனைப் போற்றும் பேராளர்—திண்மையொடு
பாட்டாளி மக்களுக்காய்ப் பாடும் நல்லோரே!
கூட்டாகக் கூடிவரு வீர்.

உங்கள் கவிராசன்; உழைப்பவர்க்குப் பாட்டாளன்;
பொங்கும் விடுதலையின் போராளன்—நங்குலத்து
ஏற்றமுரைத்தான் இவன் நாளைக் கொண்டாடும்
ஆற்றலுளோர் நாம்தானே யா.

கூடித் திருநாளே கொண்டாடிப் போய்விட்டால்
நாடும் பயன் நம்மை நாடாது—வேடிக்கைப்
பேச்சும் சிரிப்பும் பிதற்றலுமாய்ப் போகாமல்
ஓச்சும் கணக்கிங் குள.

நெஞ்சகத்தில் கொள்மின்! நிலையை நினைவுறுமின்!
பஞ்சைப் பரதேசி பாமரர்க்கும்—கஞ்சிக்கும்
நோய்யரிசிக் கூழுக்கும் நோவோர்க்கும் நாமுழைப்போம்
வையகத்தில் வாழும் வழிக்கு.

எல்லோரும் மன்னரென்று எம்கவிஞன் அந்நாளில்
சொல்லாரச் சொல்லிட்ட தொன்மொழியை—மல்லாடி
நாமுழைந்து இச்சகத்தில் நனவாக்கி நாட்டினுக்கு
சேமம் விளைப்பதுவே சீர்.

மாமாய வேதாந்த மயக்கைக் கருவறுத்து
போமாறு மற்றதனைப் போக்குவோம்—ஆமாம்காண்!
செத்த பிறகோ சிவலோகம்! இல்லை ; அதை
இத்தரையில் தோற்றுவிப்போம் யாம்.

மூளைகெட்ட இச்சமுக முறையதனை நாம்மாற்றி
ஏழை பணக்காரரென்பார் இல்லையென்போம்—கோழைமனத்
தாமசங்கள் ஏதுமின்றி தாரணியில் பொதுவுடமை
நாம் சமைக்க எண்ணுவமிந் நாள்.

செத்த குரலெடுக்கும் சீவனற்ற செய்யுளையும்
சத்தற்ற பாடலையும் சாகடிப்போம்—நித்தநித்தம்
கம்பன் கவிகற்று, பாரதியார் காவியம்போல்
அம்புவிக்கு நாளும் அளித்து.

நாடு செழித்தோங்க நல்லவர்கள் வாழ்ந்திருக்க
பாடுபடுவோன் பலம் பெருக—வீடெல்லாம்
செல்வம் பெருக திக்கெட்டும் பஞ்ச மற
மல்கிடவே நாட்டின் வளம்.

இத்தினத்தில் நாமிங்கு எடுக்கும் சபதமிது ;
ஒத்துழைக்க வாருங்கள் ஓடோடி!—சத்தமின்றி
கம்மென்றிருந்து கவிபாடக் கேட்டவரே!
கம்மென்றிருந்து விடா தீர்!

நம் நாட்டில் ஹாஸ்யமாகப் பேசும் தலைவர்களில் முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள் காந்திஜியும், சரோஜினி தேவியுமாவார்கள். சரோஜினிதேவியின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல ஹாஸ்யத் துணுக்குகள் இக் கட்டுரையில் உள்ளன. ஸ்வதந்திராப் பத்திரிகையில் வெளிவந்ததன் சாரம்.

சரோஜினியின் நகைச்சுவை

அமரநாத்ஜா

சரோஜினிதேவி ஹாஸ்யம் ததும்பப் பேசுவதோடு மட்டுமன்றி ஹாஸ்ய ரசம் கொண்ட நிகழ்ச்சிகளையும் பேச்சுகளையும் அனுபவித்து, அதைத் தம் வழியில் வெளியிடுவதில் கெட்டிக்காரர். மகாத்மா காந்தியைப் பற்றி இவ்வாண்டு வெளிவந்துள்ள ஒரு புத்தகத்தில், அவர் தமக்கும் காந்திஜிக்கும் 1914-ல் ஏற்பட்ட முதல் சந்திப்பை ரசமான முறையில் குறிப்பிடுகிறார்: "கப்பல் வந்து சேர்ந்தவுடனேயே அவரை (காந்திஜியை) நான் சந்திக்க இயலவில்லை. எனவே மறுநாள் மதியம் அவரது ஜாகையைத் துப்புத் தேடி, கென்ஸிங்டன் வட்டாரத்தில் சுற்றித் திரிந்தேன். ஒருமட்டும் அதைக் கண்டுபிடித்து, அந்தப் பழம் வீட்டின் பாடாவதி மாடிப்படிகளில் ஏறிச் சென்றேன். அங்கு முண்டிதம் பண்ணிய தலையோடு ஒரு சின்ன மனிதர் கறுத்த சிறைக் கம்பளி மீது அமர்ந்து, மரவையிலுள்ள தக்காளிப்பழமும் எண்ணெயும் சேர்ந்த சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். திறந்து கிடந்த வாசல் நிலை அந்த உருவத்துக்குச் சட்டமிட்டமாதிரி இருந்தது. அவருக்குப் பக்கத்தில் உடைக்கப்பட்ட நிலக்கடலை டப்பாக்களும், வாழைக்காய் மாவினால் செய்த ருசியற்ற பிஸ்கோத்துகளும் இருந்தன. வீடு தவறாமல் ஒலிக்கும் ஒரு பிரபலத் தலைவரின் சாதாரணமான இந்தத் தன்மையைக் கண்டு எனக்கு ஆனந்தக் களிப்பு ஏற்பட்டது; வாய்விட்டுச் சிரித்தேன். அவர் தமது கண்களை உயர்த்தி சிரித்துக்கொண்டே, "ஆ! நீங்கள்தானே ஸ்ரீமதி நாயுடு!" என்று கேட்டார். வேறு யார் அவ்வளவு தூரம் பணிவற்று நடந்து கொள்வார்கள்! "உள்ளே வாருங்கள்; வந்து என்னுடன் சாப்பிடுங்கள்" என்றார். 'வேண்டாம். வந்தனம் இதெல்லாம் என்ன?' என்றேன். இப்படித்தான் எங்கள் நட்பு தழைத்தது.

சரோஜினியின் இந்த நகைச்சுவைத் தன்மை எப்போதும் அவரோடேயே இருக்கும். காரசாரமான விவாதம் நடந்தாலும், சர்க்கார் காரியாலயத்திலும், காந்திஜியின் எதிரிலும், இளைஞர்கள் மத்தியிலும் எங்கு வேண்டுமானாலும் அவரை இந்த ஹாஸ்ய உணர்ச்சி விட்டுப்பிரிந்ததில்லை. அவர் எடுத்துச் சொன்ன ஹாஸ்யச் சம்பவங்கள் அனைத்தும் எனக்கு ஞாபகமில்லை. மேலும் சிலவற்றை எழுத்தில் கொண்டுவரும்போது அதன் சுவாரசியமே இழந்துவிடக் கூடும். அவரது கண்ணின் சிமிட்டலையும், கை ஜாலங்களையும், வக்கணையையும் அப்படியே எழுத்தில் கொண்டுவா எப்படி முடியும்? இருந்தாலும்

சிலவற்றையேனும் சொல்லாமல் லவா?

ஒரு பொது அறிவுப் பரீட்சையில் சில பிரமுகர்களைப் பற்றி அபேட்சகர்களைக் கேள்வி கேட்டார்களாம். அதில் சரோஜினி நாயுடுவைப் பற்றி எழுதும்போது ஒருவர், "அவர் இந்திய தேசிய காங்கிரஸின் விதவை" என்று பதில் எழுதியிருந்தாராம்.

டாக்டர் நாயுடுவைத் திருமணம் செய்து கொண்ட பின் ஒரு சமயம் சென்னைக்கு வந்திருந்தார். அப்போது ஒரு பொதுக்கூட்டத்தில், அதன் தலைவர், சரோஜினி தென்னிந்தியப் பெண்ணாகிவிட்டார் என்பதைக் குறிக்கும் எண்ணத்தோடு, "இப்போது அவர் நம்மைக் கல்யாணம் செய்துகொண்டார்!" என்று கூறிவிட்டாராம்.

ஒரு தென்னிந்தியன் ரயிலுக்குப் போகும் அவசரத்தில் ஒரு வெள்ளைக்காரியின் காலை மிதித்துவிட்டான். அதைக்கண்டு அந்தப் பெண் சீறினாள்; அவளது கணவனும் வந்து சேர்ந்தான். அவன் என்ன விஷயம் என்று கேட்டதற்கு, அந்தத் தென்னிந்தியன் "உமக்கு என்ன வோய் சம்பந்தம்? இது எனக்கும் இந்தப் பெண் பிள்ளைக்கும் உள்ள தனி விவகாரம்!" என்றானாம்.

சென்னையில் ஒரு தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டதாம். அதில் கணவன் ஆதரித்தும் மனைவி எதிர்த்தும் ஓட்டுச் செய்தார்களாம். இதைக் கண்ட அந்தக் கணவன், "அவள் எனக்கு எதிராக ஓட்டுச் செய்வதா?" என்று கொதித்தெழுந்தானாம்.

ஸ்ரீமதி சரோஜினி ஒரு தடவை (சுமார் இருபதாண்டுகளுக்கு முன்) என் வீட்டுக்கு வந்திருந்தார். அங்கு இருந்த அவரது படமொன்றைப் பார்த்துவிட்டு, "நான் இவ்வளவு அழகாக்வா இருக்கிறேன்?" என்றார். பின்னால் ஒரு தடவை அவர் என் வீட்டு மேஜையில் கலைஞர் ஜாமினி ராய் எழுதிய அவரது மற்றொரு சித்திரத்தைப் பார்த்துவிட்டு, "நான் என்ன இவ்வளவு கிழமாயும் குரூபியாகவுமா இருக்கிறேன்?" என்றார்.

ஒரு தடவை பிரோஸ் காந்தியிடம் அரசியல் நிர்ணயசபை அங்கத்தினர் ஒருவர், "உங்கள் மாமனாருக்கு (பண்டிதநேரு) கால் நோயும் வாய் நோயும் இருக்கிறது!" என்றார். உடனே பிரோஸ் காந்தியும், "ஆமாம். அவர் எப்போதும் நடந்துகொண்டும் பேசிக் கொண்டும்தானிருக்கிறார்!" என்று பதில் அளித்தாராம்.

1947-ல் ஒரு தடவை சரோஜினி டில்லியிலுள்ள ஒரு கடைக்குச் சென்றாராம். கடைக்குள் சென்றதும், ஒரு நெட்டை மனிதன் ஓடிவந்து "தாங்கள்தானே ஸ்ரீமதி நாயுடு?" என்றானாம். ஆமாம் என்றதும் "ஐயோ! இளமையெல்லாம் போய் விட்டதே!" என்று வருத்தப்பட்டானாம். அவன் 25 ஆண்டுகளுக்கு முன்னால் சரோஜினியை எல்லைப்புற மாகாணத்தில் பார்த்திருக்கிறானாம். இதைப் பற்றிச் சொல்லும்போது சரோஜினி "அவன்தான் கள்ளங் கபடமற்ற பட்டாணியன். ஐக்கிய மாகாணத்தவனும் அவனைப்போலத் தான் எண்ணியிருப்பான்; ஆனால் இப்படி ஒரு கடையில் வைத்து வாய் விட்டுச் சொல்ல மாட்டான்!" என்றார்.

இப்படிப் பல சமயங்களில் அவர், வாழ்க்கையிலுள்ள சம்பவங்களில் சிரிப்பைக் காணுவதும், சிரிப்பை உண்டாக்குவதுமாக இருந்தார். "வாழ்க்கையிலுள்ள சகலத்திலும் விலைமதிப்பற்றது எனக்குள்ள சிரிக்கும் தன்மையே!" என்று அவரே சொல்லுகிறார்.

சென்ற மாதத்தில் தமிழ் நாட்டின் பழம் பெரும் பிரசுரகர்த்த ரான ஸ்ரீ குப்புசாமி ஐயர் காலமானார். அவரைப் பற்றி, அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவரும் "மஞ்சரி" யின் ஆசிரியருமாகிய ஸ்ரீ தி. ஜ. ர. எழுதுகிறார்.

அல்லயன்ஸ் ஐயர்

தி. ஜ. ர.

பிறந்தவரைப் பிறந்தவுடனே சாவு தன் ஏட்டில் எழுதிவைத்துக் கொள்கிறது. சாவின் நிச்சயத்துக்கு யாரையும் ஜோஸ்யம் கேட்கத் தேவையில்லை. என்றாலும் நாம் மிக நெருங்கி அன்போடு பழகிவிட்ட சிலர் இறந்தால், நம்மால் நம்பவே முடிவதில்லை. அல்லயன்ஸ் ஸ்ரீ குப்புசாமி ஐயர் விஷயத்தில் என் மனம் இப்படித்தான் இயல்கிறது; கண்ணால் கண்டதை மனம் ஒப்ப மறுக்கிறது. அல்லயன்ஸ் ஐயருக்கு மரணம் உண்டா? ஓயாத உழைப்பு; சலியாத நம்பிக்கை; எவருக்கும் புன்சிரிப்பு; எப்போதும் அமைதி — இந்தக் குணங்களுக்கு மரணம் உண்டா? அதை என்னால் நம்பவே முடியவில்லை. ஐயர் நம்மைப் பிரிந்து எங்கேயோ சென்றிருக்கிறார் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.



இந்தச் சமயத்தில் சுமார் இருபது வருஷத்து ஞாபகங்கள் திரும்பத் திரும்ப என் மனத்தில் எழுகின்றன. ஐயரிடம் எனக்கு முதல் முதல் தொடர்பு ஏற்பட்டது எப்படி, பிறகு அவரோடு எந்த விதத்தில் பழகினேன், அவருக்கு என்ன என்ன கொடிப்பும் செழிப்பும் மாறி வந்தன, அவரிடம் எத்தகைய குணங்களைக் கண்டேன் என்ற விஷயங்களெல்லாம் நினைவுக்கு வருகின்றன.

1928—29 இல் என்று ஞாபகம். காரைக்குடி 'ஊழியன்' பத்திரிகையில் 'முறுவல் வதனம்' என்று நான் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அல்லயன்ஸ் ஐயர் அப்போது 'விவேக போதினி' என்ற அருமையான பத்திரிகை நடத்திக்

கொண்டிருந்தார். அதில் என் கட்டுரையை எடுத்துப் பிரசுரித்திருந்தது. சாதாரணமாகப் பிரசுரித்திருந்தால், அது என் மனத்தில் இவ்வளவு ஆழமாகப் பதிந்திராது. பத்துவரி முன்னுரை. அது என்னைப்பற்றிய புகழ்ச்சி. அல்ப சொல்பமான புகழ்ச்சி அல்ல. தமிழிலேயே அற்புதமாய் எழுதக் கூடிய மிகச் சிலருள் ஒருவன் என்று எனக்குப் புகழ்ச்சி. ஓர் இளம் எழுத்தாளனுக்கு அவனைச் சிறிதும் முன்பின் அறியாத ஓர் இடத்திலிருந்து கிடைக்கும் இத்தகைய புகழ்ச்சியைவிடப் பேரின்பம் தரக்கூடியது வேறொன்றும் உண்டா? உடனே ஐயரிடம் தொடர்பு கொள்ள நான் ஆவல் கொண்டேன். என் சிறு கதைத் தொகுப்பு ஒன்றை அவர் வெளியிட முடியுமா என்று கேட்டு எழுதினேன். மூலப் பிரதியை அனுப்பும்படி அவர் பதில் தந்தார். அனுப்பினேன். பிறகு இரண்டொரு வருஷம் ஓயாத கடிதப் போக்குவரத்து. புஸ்தகம் வெளி வந்தபாடு இல்லை.

1930-ஆம் வருஷமோ சற்று முன் பின்னோ சென்னைக்கு ஒரு முறை வர நேர்ந்தது. அல்லயன்ஸ் கம்பெனியைத் தேடிக்கொண்டு மயிலாப்பூருக்குப் போனேன். பி. எஸ். ஹைஸ்கூலுக்கு எதிரே திறந்த வெளி ஒன்று இருந்தது. அதிலே ஒரு கீற்றுக்குடிசை. அது தான் அல்லயன்ஸ் கம்பெனி. எங்கே பார்த்தாலும் காகிதக் குப்பை. அடுக்கடுக்காகப் பழசும் புதிசும் கிழிந்ததும் கிழியாதது மான புஸ்தகங்கள். கறையான் அரித்த பல காகிதங்களைக் கட்டுக் கட்டாக வைத்துக்கொண்டு கவலை தோய்ந்த முகத்துடன் கிழித்துக் கிழித்துப் போட்டுக்கொண்டிருக்கிறார் ஒரு முதியவர். விசாரித்ததில் அவரே அல்லயன்ஸ் குப்புசாமி ஐயர் என்று தெரிந்து கொண்டேன். என்னை நானே அறிமுகம் செய்துகொண்டேன்.

"அப்படியா! வாருங்கள்" என்று அன்போடு உபசரித்தார்.

"கிழித்துப் போடுகிறீர்களே! இவையெல்லாம் என்ன?" என்று கேட்டேன்.

"கையெழுத்துப் பிரதிகள். சில அசௌகரியங்களால் கறையான் அரித்துவிட்டது" என்று துயரத்தோடு சொன்னார்.

நான் திடுக்கிட்டேன். "என் சிறு கதைப் பிரதிகளின் கதியும் இதுதானோ?"

"இல்லை இல்லை. அது பத்திரமாக இருக்கும்" என்று பதறாமல் பதில் சொன்னார்.

"அதை எடுக்க முடியுமா?"

"அதுதான் தேடுகிறேனே. கறையான் அரித்தது போக மிச்சத்தை யெல்லாம் பொறுக்கி வைத்து விட்டால், அதில் உங்களுடையது அகப்பட்டுவிடும்" என்றார்.

இந்த விஷயம் எனக்குப் புரியவில்லை. மற்றவரின் கையெழுத்துப் பிரதிகளெல்லாம் ருசியாக இருக்கும், என் கதைப் பிரதி அவ்வளவு ருசியாக இராது என்று அந்தக் கறையானுக்கு எப்படித் தெரியும்? அதையும் அது பைசல் செய்துதான் இருக்கும் என்று நன்றாய்த் தோன்றியது. என்றா

லும், ஆசை வெட்கம் அறியுமா? ஐயர் வாக்குப் பலிக்க வேண்டும், பலிக்கும் என்றே எண்ணினேன். பலிக்கவில்லை. பின்னால் அது அகப்படவே யில்லை. என்ருலும் என் சிறு கதைகள் பத்திரிகைகளில் வெளி வந்தவை; இரண்டாவது பிரதி தயாரித்து விட்டேன். ஆனால் அதுவரைக்கும் ஐயர் மாத்திரம் எனக்கு அவநம்பிக்கை மூட்டியதேயில்லை; 'அகப்படும் அகப்படும்' என்றே சொல்லி வந்தார். அவரிடம் எனக்குச் சிறிது கூடக் கோபம் உண்டாகாதபடி சமாதானம் செய்தார். அதுதான் ஆச்சரியம்.

ஐயருக்கு அதுசிரமமான காலம். பலகையெழுத்துப் பிரதிகள் மட்டும் அல்ல, புஸ்தகங்களும் வீணுயின. தொழிலே படுத்துவிட்டது. அவருக்கும் அவருடைய இளைய சகோதரருக்கும் மனஸ்தாபம் நேரிட்டது இந்தக் காலந்தான் என்று நினைக்கிறேன். அதனல் பிரசுரமும் புஸ்தக வியாபாரமுமே சீர்குலைந்தன. பின்னுல் இரண்டொரு வருஷம் 'கலைமகள்' காரியாலயத்தில் ஐயர் உத்தியோகம் பார்த்தார். அதற்காகத் தமது சொந்த வியாபாரத்தை அடியோடு நிறுத்திவிட முடியுமா? பைண்டு செய்தும் செய்யாமலும் குவியல் குவியலாகக் கிடக்கும் புஸ்தகங்களையும் முற்றுமோ அரைகுறையாகவோ பணம் கொடுத்து வாங்கிய கையெழுத்துப் பிரதிகளில் மிஞ்சியவற்றையும் ஊறுகாய் போடுவதா? அவற்றையும் ஓரளவு கவனித்துக் கொண்டார். 'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்' ஒருவன் உழைப்பதெல்லாம், தான் நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற ஆவலினல்தான். தாம் மறுபடியும் நல்ல நிலைமையை அடைய வேண்டும் என்பதற்கான முயற்சியை ஐயர் ஒருபோதும் தளர விட்டதில்லை. அவருக்கு மீண்டும் சௌகரியமான காலம் ஏற்பட்டது. 'கலைமகள்' உத்தியோகம் இல்லை. முற்றும் தம் தொழிலிலே ஈடுபட்டார். 1935-36-இல் மறுபடியும் அவர் தொழில் சிறப்பாகத் துளிர்க்க ஆரம்பித்து விட்டது. இதற்கு நிமித்தமாத்திரமாக உதவியவர்கள் ராஜாஜியும் சிறந்த எழுத்தாளருள் ஒருவரான த. நா. குமாரசுவாமியுந்தான் என் பதை நன்றிகனிய ஒரு சமயம் ஐயரே என்னிடம் சொன்னர்.

"தமிழ் நாட்டுச் சிறுகதைகள்" என்று ஒரு வரிசையை ஐயர் வெளியிடத் தொடங்கினர். முன்னதாகவே, தாம் வெளியிட்டிருந்த ராஜாஜி குட்டிக்கதைகளையும் வ. வே. சு. ஐயர் சிறு கதைகளையும் அதில் சேர்த்தார். அப்போது ராஜாஜி குட்டிக் கதைகளை நிர். 1 என்றும் வ. வே. சு. ஐயர் கதைகளை நிர். 2 என்றும் த. நா. குமாரசுவாமி கதைகளை நிர். 3 என்றும் என் சிறு கதைகளை நிர். 4 என்றும் இலக்கம் இட்டார். (இந்த வரிசைக் கிரமம் சில காரணங்களால் இப்போது மாறிவிட்டது.)

"வ. வே. சு. ஐயர் இலக்கியத் துறையில் முந்தியவர். காலமானவர். அவருக்கு முதல் ஸ்தானம் அளிக்கத் தவறிவிட்டீர்களே, ஏன்?" என்று ஐயரைக் கேட்டேன்.

"ராஜாஜியிடமும் வ.வே.சு. ஐயரிடமும் நான் கொள்ளும் மதிப்பில்

எந்த வித்தியாசமும் பாராட்ட வில்லை. ஆனால் ராஜாஜி, குமார சுவாமி இருவராலும்தான் என் தொழிலுக்குப் புத்துயிர் வந்தது. அதற்கு என் மனம் நன்றி செலுத்த வேண்டாமா? இப்படி வரிசை செய்தது என் சொந்த விஷயம்'' என்று சமாதானம் சொன்னார்.

இதற்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் என் சிறு கதைகளை முந்தியே தனியாக நானே பிரசுரித்து விட்டேன். அவைகளைமீண்டும்பிரசுரிக்கத்தாம் ஏற்றுக்கொள்ளும் முன்பே,வேறு, சிலர் கதைகளை வாங்கியிருந்தும், என்கதைகளுக்கு ஏன் நிர். 4 என்று இலக்கமிட்டார்? சில சிறந்த சிறு கதை எழுத்தாளர்களுக்கு அதில் ஆயாசங்கூட ஏற்பட்டதே! முதல் முதல் சிறுகதைகளைப் பிரசுரிக்கத் தம்மைக் கேட்டுக் கொண்ட வன் நான், அதில் கடைசிவரை ஏமாற்றம் அடைந்தவன் நான் என்ற ஒரு பச்சாத்தாபமே அவர் இப்படிச் செய்ததற்குக் காரணம் என்று நினைக்கிறேன். ஆனால், இந்த லலிதமான விஷயத்தை அவரிடம் நான் கேட்டதில்லை; அவரும் சொன்னதில்லை. இப் போது அதைப் பற்றிச் சிந்திக்கும் போதுதான் எனக்கு இப்படித் தோன்றுகிறது.

ராஜாஜியும் த. நா. குமாரசுவாமி யும் ஐயர் தொழிலுக்கு எப்படி உதவினர்கள்? ராஜாஜி அப்போது தான் முதல் முதலாகச் சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரி ஆகப்போகிற சமயம். அவரிடம் ஐயர் சென்றிருக்கிறார். எந்த நிபந்தனையும் விதிக்காமல், பணமும் கேட்காமல் தம் குட்டிக் கதைகள், உபநிஷதப் பலகணி, கண்ணன் காட்டிய வழி மூன்றையும் ஐய ரிடம் பிரசுரிக்கக் கொடுத்து விட் டார். ஐந்தாறு மாதத்துக்குள் ஒவ்வொன்றும் மூவாயிரம் நாலா யிரம் பிரதிவரை விற்றது. இதே போல் த. நா. குமாரசுவாமி தாம் மொழிபெயர்த்த பங்கிம் சந்தி ரர் நாவல்களை ஐயரிடம் கொடுத்து, “பிரசுரித்து உங்களுக்குச் சௌகரி யப் பட்டபோது பணம் கொடுங் கள்'' என்று சொல்லிப் பிரசுரிக் கச் செய்தார். அவையும் சுமார் மூவாயிரம் பிரதிகள் அதிசீக்கிரம் விற்றன. புஸ்தகப் பிரசுரத் தொழிலில் பதினாயிரம் பிரதி போட்டு இருபது வருஷத்தில் விற்பதைவிட, ஆயிரம் பிரதி போட்டு ஒரே மாதத்தில் விற்பது தான் பணம் முடங்காமல் புழங்க வழி. ஐயரிடம் வற்றிப் போன பணம் வெகு சீக்கிரத்தில் மீண்டும் சுரந்து, தொழில் நவஜீவன் பெற் றது.

தமிழ் நாட்டின் மிகச் சிறந்த எழுத்தாளர்களில் ஒன்றிரண்டு பேரைத்தவிர மற்ற அத்தனை பேர் புஸ்தகங்களையும் ஐயர் போட்டிருக் கிறார். இதற் கென்ன காரணம்? பிரசுரத் தொழிலில் தமிழ் நாட் டில் உள்ள மற்றவரைவிட இவர் என்ன பெரிய நிபுணரா? பணம் பெருத்தவரா? இலக்கியச் சுவை நிறைந்தவரா? எப்படி அவரிடம் எல்லா எழுத்தாளர்களும் சிக் கினார்கள் என்று வேறு சில பிரபல பிரசுரகர்த்தர்களே ஆச்சரியப் படுகிறார்கள். இதற்கு ஒரு முக்கிய மான காரணம் உண்டு. இலக்கியத் தில் 'ஸ்நாபரி' என்று சொல்லு

வார்களே அது தமிழ் நாட்டில் இன்று வலுத்திருக்கிறது; தனி யரசு செய்கிறது என்று கூடச் சொல்லலாம். இலக்கியத்தை இலக் கியச் சுவை கொண்டு அளப்ப தில்லை; மதிப்பதும் இல்லை. பணம், பதவி, ஆள்கூட்டம், ஆர்ப்பாட்டம் ஆகிய விருதுகளையும் கோஷங்களை யும் கொண்டே வளரும் தமிழ் இலக்கியத்தை மிகப் பெரும்பா லோர் மதிக்கிறார்கள். பேபர் அண்டு பேபர், ஆலன் அண்டு அன்வின், பாட்லிஹெட் ஆகிய பிரசுரகர்த் தர்களைப் போல் முயன்று எழுத்து லக மேதையைக் கண்டு பிடித்து ஆதரித்துப் பிரபலப் படுத்துபவர் களையோ, திட்டமிட்டுப் புதுப் புது அறிவுச் செல்வங்களைப் படைக்க வழிதிறப்பவர்களையோ தமிழ் நாட்டில் இன்று காண முடி யாது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளை இங்கே ஆராய் வது தேவையில்லை; பொருத்தமும் இல்லை. ஆனால், இந்த நிலையில் சிறந்த எழுத்தாளர்களை ஆகர் ஷிக்கத்தக்க ஒரே ஒரு சிறப்பு ஐய ரிடம் இருந்தது. அவர் எந்த எழுத்தாளர்களையும்-அவர் சிறந்த வரோ, இல்லையோ—மிக மிகக் கண்ணியமாகவும் மதிப்போடும் வரவேற்றுப் பழகினார். எவனுக் கும் பணம் வேண்டியதுதான். ஆனால், கத்திரிக்காய்க் கூடைக்கா ரன் போல், தன்சரக்கை உணர்ச்சி மிகுந்தஎழுத்தாளன்பேரம்செய்து விற்பதில்லை. சுகந்தமலரின் மணத் தை ஏற்பது போல் மற்றவர் அதை ஏற்கவேண்டும். தன் பதவி, பொருள், விருது, கூச்சல் முதலிய வைகளைக் கொண்டு மற்றவர் தன்னை மதிப்பதை அவன் விரும்புவதில்லை. தன்னைக் கண் ணியமாக எவர் நடத்துகிறார் களோ அவர்களையே அவன் நெருங்குவான். இப்படி எழுத் தாளர்களை "மிகவும் கண்ணிய மாய் உபசரிக்கும் அருங்குணம் ஐயரிடம் இயல்பாய் அமைந்திருந் தது. ஐயர் எத்தனை எழுத்தாளர் களின் வீட்டு வாசல் தேடிச் சென்று கதவிடித்திருப்பார்! அதே போல் அவர்களும் அவர் வீட்டு வாசல் தேடிச் சென்று கதவிடித் ததில் ஆச்சரியமில்லை. எந்த எழுத்தாளராக இருந்தாலும் சரி, "உங்கள் எழுத்துக்கு என்ன ஸார், அருமையாய் இருக்கும்'' என்றே அவர் இங்கிதமாய்ப் பாராட்டு வார்.

குழந்தைபோல் மிகவும் இளகிய மனசு ஐயருக்கு. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு என்று நினைக்கிறேன். ஐயரின் இளைய சகோதரர் காலமானார். அதைப் பற்றி என்ன உருக்கத்தோடு அவர் என்னிடம் சொன்னார்! முன்னெல் லாம் அண்ணனுக்கும் தம்பிக்கும் பேச்சு வார்த்தையே கிடையாதாம். கடைசி நாட்களில், தம்பிக்கு ஐயர் மிகவும் உதவினார். தங்கள் பழைய மனஸ்தாபத்துக்காகத் தம்பி மனம் வருந்திக் கண்ணீர் விட்டபோது, அண்ணனுக்கும் கண்ணீர் துளும் பியது. "கடைசி நேரத்தில்கூட அவனுக்கும் எனக்கும் சமாதானம் ஏற்பட்டிராவிட்டால், என் மனம் மிகவும் சங்கடப்பட்டிருக்கும். ஈச் வர கிருபையால், சமாதானம் ஏற் பட்டது. அதுதான் என் மனத் தில் கொஞ்சம் நிம்மதி தந்திருக் கிறது'' என்று ஐயர் என்னிடம் சொன்னார். இது மாத்திரம் அல்ல; என் அரிய நண்பர் மஞ்சேரி எஸ்.

பட்டினியிலிருந்து நம்மை டீ எப்படிக் காப்பாற்றுகிறது?

அயல்நாட்டு நாணயச் செலாவணி நம் நாட்டுக்கு இன்று மிகவும் அவசியமாக இருக்கையில், நாம் ஏற்றுமதி செய்யும் 40 கோடி பவுண்டு தேயிலை, அவசியமான உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏராளமான தொகையை அளிக்கிறது. டீ நம் நாட்டு கலாசாரத்து தர்மமட்டுமல்ல, பட்டினியைத் தடுக்க உத்திரவாதமும் அளிக்கிறது. ஏற்றுமதித் தொழிலில் இரண்டாவதாக நிற்கும் டீத்தொழில் நாட்டின் பொருளாதாரத் துறையில பிரதான ஸ்தானம் வகிக்கிறது.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்

- ஏழு லக்ஷம் ஏக்ரா நிலத்தில் வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு டீ உற்பத்தி செய்கிறோம்.
- இத் தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்
- உள் நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணு வரியும், ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணு வரியும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்திய கைத்தொழில்

சென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

லிப்டன்ஸ்

என்றால்

முதல்தரமான டீ

LTX-151-TM

ஈச்வரனும் நானும் பின் ஒரு சமயம் சென்றபோது, "என் தம்பி இறந்தது முதல் தீபாவளிக்கு நான் எண்ணெய் தேய்த்துக் கொள்வதில்லை" என்று சொன்னார்.

எழுத்தாளர்களுக்கு ஐயரைப் போல் அதிகப் பணம் கொடுத்தவர்களும் இல்லை; அவரைப்போல் தூறு வாங்கிக் கட்டிக்கொண்டவர்களும் இல்லை. இதுதான் விசித்திரம். பெரும்பாலான எழுத்தாளர்களுக்கு எப்போதும் பணமுடைதான். ஐயரோ ஒவ்வொரு சல்லிக் காசுக்கும் கடுமையாய் உழைத்துச் சம்பாதித்தவர். முன்னோர் வைத்த மூல தனமோ, சூதாடி வந்த பணமோ, வியாபார ஜால வேடிக்கையில் கிடைத்த நிதியோ அவரிடம் இல்லை. அப்போதைப் போது தொழிலிலே ஊறும் பணத்தைக்கொண்டு, தம் கஷ்ட நஷ்டங்களைச் சிறிதும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், காகித வியாபாரி, அச்சுக்கூடம், எழுத்தாளர் முதலியவர்களுக்கு விகிதாசாரப்படி பங்கிட்டு வழங்கி, தம் யோக க்ஷேமத்தையும் பார்த்துக்கொள்ள வேண்டும். சேர்ந்தாற்போல் மொத்தமாகவும் தவணை சொல்லாமலும் ஒரு நூறு ரூபாயை ஓர் எழுத்தாளருக்குக் கொடுப்பதென்றால் அவரால் முடிவதில்லை. பெரும்பாலும் சிறுசிறு தொகைகளைப் பல தவணைகளாகவே அவர் கொடுப்பார். எழுத்தாளரும் அவைகளை அந்த அந்தச் சமயத்திய சிறு சிறு தேவைகளுக்கு வாங்கிக் கொண்டுபோய் விடுவார். இதில் எழுத்தாளருக்கு அநேக சமயம் எரிச்சல் உண்டாவது சகஜம். சிறு சிறு தொகையாகக் கொடுத்தாலும் ஐயர் பெரும்பாலான எழுத்தாளர்களுக்கு மற்றப் பிரசுரகர்த்தர்களை விட அதிகப்பணமே கொடுத்திருக்கிறார். கொடுத்த பணத்துக்கு ஐயரிடம் சரியான கணக்கு இருப்பதில்லை. ஐயர் ஒண்டிக்காரர். அவர் ஒரு குமாஸ்தாகூட வைத்துக் கொள்ளவில்லை. எழுத்தாளரிடம் பெரும்பாலும் ரசீது வாங்குவதும் இல்லை. வாங்கிய பணத்துக்குச் சரியான கணக்கு வைத்துக்கொள்ளும் எழுத்தாளர் எத்தனைபேர் இருப்பார்கள்? நான் வைத்துக் கொள்வதில்லை. என்னைப்போல், ஞாபகத்தில் வந்ததுதான் பலருக்குக் கணக்காக இருக்கும். தேடிப் பிடித்துக் கணக்கெடுத்தால், அநேக சமயம் ஐயர் கொடுத்த பணம் அதிகமாகவே இருக்கக் காண்போம்.

சிறு தொகைகளாகத்தான் ஐயர் எப்போதும் பணம் கொடுப்பார் என்றேனே, அது முற்றும் சரியல்ல. நான் 'சக்தி' ஆசிரியனாக இருந்து பிரிந்த பின்பு சுமார் ஒன்பது மாதகாலம் வேறு உத்தியோகம் இல்லாமல் இருந்தேன். அப்போது ஐயர் எனக்கு நூறு நூறு ரூபாயாக ஆறு முறை கொடுத்தார். அதற்கு முன்னும் சரி, பின்னும் சரி இந்த அற்புதம் நிகழ்ந்ததே யில்லை. தம்மிடம் தொடர்பு கொண்ட ஓர் எழுத்தாளன் பணத் தேவைச் சிரமத்தால் தவிக்கிறான் என்று நிச்சயமாக அவருக்குத் தோன்றிவிட்டால், தம்மால் முடிந்தமட்டும் உதவி செய்ய அவர் தயங்குவதில்லை. உத்தியோகம் இல்லாமற் போனதும் அவரிடம் நான் சென்றேன். என் சிரமத்தை யாரிடமும் நான் சொல்வதில்லை; மனத்துக்குள்ளேயே மறுகுவதுதான் என் வழக்கம். ஐயரிடமும்

சொல்லவில்லை. ஆனால், எத்தனையோ சுகதுக்கங்களை அநுபவித்த அவருக்குத் தெரியாதா? "வேலை இல்லையே என்று கவலைப்படாதீர்கள். உங்களுக்கு வேண்டும் போதெல்லாம் என்னைப் பணம் கேளுங்கள். அதற்கு ஈடாக என்னவாவது ஏற்பாடு செய்து கொள்ளலாம். பிரசுர மூலமாக மாதம் இருநூறு ரூபாய் உங்களுக்கு என்னால் நிச்சயம் பிரயோஜனம் ஏற்படும்படி செய்து கொள்ளலாம்'' என்று தாமாக எனக்குத் தைரியம் சொன்னார். இதுமாத்திரம் அல்ல; சில மாதத்துக்கு முன், "இதோ பாருங்கள்; நீங்கள் இப்படி இருக்கக் கூடாது. மாதம் நூறு ரூபாயாவது உங்களுக்கு என்னால் கிடைக்க வேண்டும். அதில் இருபத்தைந்து ரூபாயை மாதா மாதம் உங்கள் பெயரால் பாங்கியில் நானே போட்டு வைக்கப்போகிறேன். அதற்குரிய ஓர் ஏற்பாடு விரைவில் செய்கிறேன்'' என்றார். எனக்கு மட்டும் அல்ல; இன்னும் சிலருக்கும் ஏறக்குறைய இதே போல் சொல்லி யிருக்கிறார். ஒவ்வோர் எழுத்தாளருக்கும் தாம் ஒரு வள்ளலாக இருக்க வேண்டும் என்பதுதான் உள்ளூற ஐயரின் ஆசை.

ஐயர் ஓயாத உழைப்பாளி. துணைவரின்றி, ஒரு குமாஸ்தா கூட இல்லாமல், தன்னந் தனியாக, பாடுபட்டு உழைத்து, ஓர் அரிய புஸ்தகப் பிரசுர ஸ்தாபனத்தை உருவாக்கி வளர்த்தார். தமிழ் நாட்டில் பாட புஸ்தகங்களை அல்லாமல் வேறு புஸ்தகங்களை வெளியிடும் பிரசுராலயங்களில் முதன்மையாக நிற்பவை என்று 'கலைமகள்', 'சக்தி', 'அல்லயன்ஸ்' போன்ற மிகச் சில தான் பெயர் வாங்கி யிருப்பவை. இவற்றிலும் மிகப் பழமையானது ஐயரின் 'அல்லயன்ஸ்' பிரசுராலயந் தான். தமது எழுபதாவது வயதிலும் ஐயர் வழிநடந்தும், டிராமில் குலுங்கி நெரித்துக் கொண்டு சவாரி செய்தும், வழி யெல்லாம் புரூப் பார்த்துக்கொண்டும் உழைத்தார். அவர் அடக்கம் நிறைந்தவர். சொந்தமாக ஒரு போட்டோ எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு குரூப் போட்டோவில் இருந்த அவர் உருவந்தான் இப்போது கிடைத்தது. ஒரு முறை என் காமிராவுடன் அவரிடம் சென்று நான்படம் பிடிக்க விரும்பினேன். "படமே எடுத்துக்கொள்வதில்லை. எனக்கெதற்கு?'' என்று பிடிவாதம் பிடித்தார். வற்புறுத்தியதன் மேல் ஒப்புக்கொண்டார். என் துரதிருஷ்டம் அந்தப் படம் நன்றாக விழவில்லை. பின்னால் மற்றொன்று எடுக்க வேண்டுமென்று எண்ணி யிருந்தேன். சந்தர்ப்பம் நேரவில்லை. என் எண்ணம் நிறைவேறாமல் செய்து, ஏமாற்றிச் சென்றுவிட்டார் ஐயர். அவர் ஒரு நிமிஷங்கூடப் படுத்த படுக்கையாய் இருக்கவில்லை. திடீரென்று மார்பு நோயால் உயிர் நீத்துவிட்டார். ஐயரை, அவருடன் நான் தொடர்பு கொண்ட பாக்கியத்தை, அவருடைய உத்தம குணங்களை நான் என்றென்றும் நினைவில் வைத்திருப்பேன்.

ஐயர் தேடி வைத்து வளர்த்த ஸ்தாபனத்தை அவருடைய மூன்று புதல்வர்களும் ஒற்றுமையோடு போற்றி வளர்க்க வேண்டும்; அதன் மூலம் ஐயர் நீடூழி வாழ வேண்டும்.

வாலிப வயதில் முகப்பரு ஏற்படுவது சகஜம். என்றாலும் அதனால் பார்ப்பதற்கு முகம் விகாரமாகி விடுகிறது. பருக்கள் வராமல் தடுப்பதற்குரிய வழிகளை இந்த நல்வழிக் கட்டுரையில் காண்கிறோம்.

முகப் பருவுக்கு சிகிச்சை

நார்மன் கோல்ட்ஸ்மித்

ஒரு சிறுவன் பருவமாகும் சமயத்தில் தான் இப்பருக்கள் உண்டாகின்றன என்று அநேகர் எண்ணுகிறார்கள். அவ்விதமே பருவமாகும் சமயத்தில் மயிர்ப்பைச் சுரப்பி (sebaceous gland) தனது வேலையை அதிகரித்து, மெழுகு போன்ற ஒரு வஸ்துவை அதிகம் சுரப்பிக்கிறது. இவ்விதம் அதிகம் சுரப்பிக்கப்பட்ட வஸ்து வெளியே போவதற்கு சுரப்பியின் துவாரம் சிறியதாயிருப்பதால், அது தோலின் கீழ் கூடி ஒரு பருவை உண்டாக்குகிறது. இப்பரு பழுது படும்போது சீழ் நிரம்புகிறது. சீழ் உண்டாகும் போது, இழையங்கள் அழிக்கப்பட்டு ஒரு வடு அல்லது ஒரு சிறு குழி தோலில் ஏற்படுகிறது.

யௌவனத்தில் தோன்றும் கரும் பருக்களுக்கும், நொய்ப்புள்ள உச்சந் தலைத் தோலுக்கும் காரணம் மயிர்ப்பைச் சுரப்பியின் அதிக வேலையே. முகத்திலும், நெஞ்சிலும், முதுகிலும் அதிகச் சுரப்பிகள் இருப்பதால் அவ்விடங்களில்தான் அதிகப் பருக்கள் உண்டாகின்றன. பெண் பிள்ளைகளை விட பையன்களிடையேதான் அதிகம் பருக்கள் தோன்றுகிறது.

பருக்களைக் கட்டுப்படுத்துவதற்கு இரு வழிகள் உண்டு. வெளிப்புறத்தும், அகப் புறத்துமாக இவைகளைக் கட்டுப் படுத்த வேண்டும்.

வெளிப்புறத்துச் சிகிச்சைக்கு நல்ல சோப்புத்தான் மேலானது. சுரசுரப்பான ஒரு துணியைக் கொண்டாகிலும் அல்லது ஒரு பிரஷ்ஷைக் கொண்டாகிலும் முகத்தை நன்றாகத் தேய்க்க வேண்டும்; பிறகு சூடான சோப்புத் தண்ணீரைக் கொண்டு கழுவ வேண்டும் என்று சொல்லுகிறார்கள். தெருப்புறத்தில் நடந்து, முகம் தூசியினால் மூடப்பட்டு வீடு திரும்பும் போது அவ்விதம் முகம் கழுவப் படுமானால் அதிக நன்மையாயிருக்கும்.

நாம் கவனிக்க வேண்டிய அடுத்த காரியம் என்ன வென்றால் சகல வித பவுடர்களும் உபயோகிப்பதினால் ஏற்படும் கெடுதியைத் தடுப்பதே. ஆகவே சுத்தப் படுத்துவதற்கென்று உபயோகிக்கும் சகல க்ரீம் (face cream) வகைகளையும் நீக்க வேண்டும். சோப்பும் தண்ணீரும் இவைகளை விட அதிக சுத்தியை அளிக்கும்.

பவுடர், க்ரீம் முதலியவைகளை உபயோகிப்பதினால்தான் அதிகக்கெடுதல் உண்டாகிறது.

பிள்ளைகளின் முகங்களில் பருக்கள் தோன்றும் போது அதைப் பிதுக்கி விடாதபடிக்கு பார்க்க வேண்டும். இவ்விதம் பிதுக்கி விடும். போதெல்லாம் முகத்தில் வடு ஏற்படுகிறது. சில வடுக்கள் சிறியதாயும், சில முகத்தை அலங்கோலப்படுத்துவதாயும் தோன்றும். இயற்கையாகவே பருக்கள் உடையுமாயின் வடுக்கள் ஏற்படாது. ஆனால் நாம் அவைகளைப் பிதுக்கும்போது அவைகளின் கீழுள்ள சவ்வு உடை பட்டு வடுக்கள் உண்டாகிறது. இது மாத்திரம் அல்ல, நாம் பிதுக்குவதினால் உண்டாகும் புண் ஆறுவதற்கு அதிக நாட்கள் செல்லும்.

பருக்கள் தோன்றினால் அவைகளை ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதே அதிக உத்தமம். இதற்கு நம்மை நாமே அதிகமாகக் கட்டுப்படுத்த வேண்டும். பருக்களால் உண்டாகும் தீங்கை, நம்மை விட அதிகமாக இயற்கையே சரிப்படுத்தும். ஆனாலும் நம்மைத் திருப்தி செய்வதற்கு ஏதாகிலும் செய்யவேண்டு மென்றால், ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று தடவை சிறு துணியில் வெதுவெதுப்பான பொரிகக் காடியை (boric acid) ஊற்றி ஒற்ற வேண்டும். ஆனால் பருக்களைப் பிதுக்கவே கூடாது.

கரும் பருக்களுக்கு நல்ல முன்னெச்சரிக்கை எடுத்தால் அவைகளைமுற்றிலும்நீக்கலாம்.முகத்தை சற்றுச் சூடான சோப்புத் தண்ணீரினால் கழுவ வேண்டும். இதனால் சில கரும் பருக்கள் நீக்கப் படும். பின்பு மருந்துக் கடைகளில் இதற்கென்று விற்கப்படும் கருவியை உபயோகிக்கவும். ஒருபோதும் கைகளினால் பருக்களை உடைக்காதே. கருவியை உபயோகிக்கு முன் தண்ணீரிலிட்டு கொதிக்க வைக்கவும்.பின்பு கருவியைக் கரும் பருக்களிலிருக்கும் பக்கத்திலிட்டு அழுக்கவும். அப்பொழுது பருக்கள் வெளிவரும். வரக் கஷ்டப்பட்டால் தற்போது சும்மா யிருக்கவும். வெளிவரும் பருக்கள் உள்ள இடத்தை மதுசாரத்தைக் கொண்டு தொடவும். ஒரே சமயத்தில் ஒரே இடத்திலுள்ள அநேக பருக்களைப் பிடுங்காமல், வெவ்வேறு இடங்களில் பிடுங்கவும்.

வெதுவெதுப்பான சோப்புத் தண்ணீரில் முகம் கழுவுவதும், பவுடர், க்ரீம் முதலியவைகளை உபயோகிக்காம லிருப்பதும், பருக்களின்மேல் கைபடாமலிருப்பதுமே பருக்களுக் கேற்ற வெளிப்புறத்து சிகிச்சைகள்.அதிகப் பருக்கள் உள்ளவன் அதிக சோப்பு உபயோகிப்பானேயாகில் எரிச்சல் உண்டாகும் என்பதை அறிய வேண்டும்.

அகப்புறத்துக் காரணங்களைக் கவனிக்க வேண்டும். நாம் சாப்பிடும் மூன்று ஆகாரங்கள் பருக்களை உண்டாக்குகின்றன. அவையாவன: சகல கொட்டை வகைகளும், பாலடைக்கட்டிகளும், சகல மிட்டாய் வகைகளுமே. யௌவனத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளும் மிட்டாயை விரும்புகிறார்கள். ஒரு மிட்டாய் சாப்பிட்டாலும் ஒரு பருவாவது தோன்றும். உங்கள் பிள்ளைகளுக்கு எவ்வளவு ஊதிதம் (iodine)

கிடைக்கிற தென்பதை அறியுங்கள். மட்டுக்கு மிஞ்சி கிடைக்குமானால் பருக்கள் உண்டாகும். சில இடங்களில் கண்டமாலையை நீக்குவதற்கென்று உப்பு ஊதிகையை (iodized salt) உபயோகிக்கிறார்கள். கடற்கரைப் பக்கத்தில் உள்ளவர்கள் இவ்விதம் செய்யக் கூடாது. கடற்கரைப் பக்கங்களில் காணப்படும் ஆகாரப் பொருட்களிலும் அதிக ஊதிகம் இருப்பதால், உப்பு ஊதிகையை உபயோகிக்கையில் உடம்பில் ஊதிதம் அதிகப்பட்டு பருக்கள் உண்டாகுகிறது.

சோரியமும் (bromide) ஊதித்தை போன்றது. உங்கள் பிள்ளைகளுக்கு வரும் தலைவலிக்கும், நரம்புத் தளர்ச்சிக்கும் சோரியம் கொண்ட மருந்தைக் கொடுத்து வந்தால் பருக்கள் ஏற்படாதிருப்பதற்கு, வைத்தியரைக் கண்டு பேசவும். சோரியத்தினால் ஏற்படும் பருக்கள் அதிகக் கஷ்டத்தை உண்டாக்கும்.

பிள்ளைகள் பெரியவர்களாகையில் இப்பருக்கள் உண்டாகிறது. பெண்பிள்ளைகளுக்கு மாதத்தீட்டு ஏற்பட்டவுடனாவது அல்லது ஏற்படும் போதாவது இப் பருக்கள் உண்டாகும். இவைகள் அநேகமாக தாடையில் உண்டாகும். இப்பருக்களை அப்படியே விட்டு விட்டால் சீக்கிரம் குணமாகும். அவைகளைத் தொந்தரவு செய்வோமாயின் சீழ் கொண்ட ஒரு கட்டியாக மாறும்.

பருக்கள் உண்டாவதற்கு இன்னும் ஒரு காரணம் மலச்சிக்கல். இதற்கு அதிகப் பழங்களும் அதிகத்தண்ணீரும் சாப்பிடவேண்டும்.

பருக்களைத் தடுப்பதற்கு அதிக முக்கியமானது நல்ல தூக்கம். உங்கள் பிள்ளை இரவு முழுவதும் படித்து காலை பள்ளிக்கூடத்திற்குச் செல்லுமானால் பருக்கள் அதிகமாகும். போதுமான தூக்கம் பருக்களைத் தடுக்கும்.

அவ்விதமே நல்ல ஆகாயமும். தேகாப்பியாசங்களும், அறைகளில் அல்ல, வெளியில் அப்பியாசங்கள் செய்ய வேண்டும். சுத்த ஆகாயம் அதிக பிரயோஜனமானது.

சூரிய வெளிச்சம் சிலருக்கு சுகத்தையும் சிலருக்கு அதிக கஷ்டத்தையும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் சூரிய வெளிச்சம் உங்கள் பிள்ளைகளை எவ்விதம் பாதிக்கும் என்றறிந்து உபயோகப்படுத்தவும்.

இவ்விதமாகத் தான் உங்கள் பிள்ளைகளுக்கு வரும் பருக்களைக் கவனிக்க வேண்டும். இங்கு கூறப்பட்டுள்ள வழிகளினால் பருக்கள் சுகமடையா திருந்தால், உங்கள் வைத்தியரிடத்திலாவது அல்லது எந்தத் தோல் வைத்தியரிடத்திலாவது சென்று பரிசோதிக்கவும். ஆரம்பத்திலேயே செல்வது மிகவும் நல்லது. பிந்துவீர்களானால் ஆரம்பத்தில் நீக்கக்கூடிய வடுக்களை நீக்கக்கூடாமலே போய்விடும். வடு வந்த பின் ஒருவித தோலுரிக்கும் முறையினாலேயே அதை நீக்க எத்தனிப்பார்கள். வைத்தியர்களைத் தவிர வேறு யாரும் தோலுரிக்கும் முறையை கையாளக் கூடாது.

பருக்கள் தோன்றும் காலத்தில் பிள்ளைகளைப் பாதுகாப்போமானால், ஏற்ற காலத்தில் நிச்சயமாகவே பருக்கள் ஒழிந்து போகும்.

பிரான்சின் தலைநகரான பாரிஸ் உலகத்து அழகான நகரங்களிலே ஒன்று. அதுமட்டுமேல்லாமல் நேப்போலியன் போன்ற வீரர்களும், விக்டர் ஹ்யூகோ, மாப்பாஸான், எமிலிசோலா, அனதோல் பிரான்ஸ் முதலிய இலக்கிய மேதைகளும் பிறந்த நாடு அது. பாரிஸின் அழகையும் அங்குள்ள நடைமுறைகளையும் நேரில் கண்டு வந்த கட்டுரையாசிரியரின் குறிப்பு இது.

பா ரி ஸ்

சோம. லே. இலக்குமணச்செட்டியார்

உலகத்தில் பார்த்து இன்புறத்தக்க நகரங்களிலே தலைமையானதும், கேளிக்கை வாழ்வுக்குப் பிரசித்தி பெற்றதும், பழமையும் பெருமையும் வாய்ந்ததுமான நகரம் பாரிஸ். இந்த மிக அழகிய நகரம் பிரான்சின் தலைநகர்; இப்போது மார்ஷல் திட்டத்தை அமல் செய்யும் ஸ்தாபனத்துக்கும் தலைநகர்; ஐக்கிய நாடுகள் சபையின் பல பிரிவுகளுக்கும் தலைநகர் பாரிசேயாகும்.

நகரழகு

இயற்கையும் செயற்கையும் சேர்ந்து பல நகரங்களை அழகுபடுத்தி யிருக்கின்றன. இவற்றில் என்னைக் கவர்ந்த நகரங்கள் : ஸ்டாக்ஹோம், ஜினீவா, சான் பிரான்சிஸ்கோ, சிட்னி, பாரிஸ். இந்நகரங்களில், மிகத் தொன்மையான நாகரிகம் உடையது பாரிஸ் தான். ஆடை அலங்காரங்களில் உலகத்துக்குப் புதிய தோற்றங்களைத் தரும் உல்லாச நகரம் பாரிஸ் தான். “சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்” என்ற கோஷங்களை உலகுக்குத் தந்ததும் பாரிஸ் தான். ஓரிடத்திலேயே எட்டு வீதிகளும் அதற்கு மேற்பட்டனவும் கூட சந்திப்பதும் பாரிஸில் மட்டும் தான். பாரிஸ் நகர் எங்கும் சோலைகள், சாலைகள், செடிகள், கொடிகள், பச்சைப் பயிர்கள், நீர் நிலைகள், விதவிதமான பலதிறக் காட்சிகள். கற்பனையும் கலைத்திறமையும் கொண்ட பாரிசையும் அதற்கு அணித்தாயுள்ள வெர்சேயையும் பார்க்குந் தோறும் பார்க்குந்தோறும் இயற்கை இன்ப வாழ்வு உள்ளத்தில் தோற்றி நிற்கும்.

கலைச் சிறப்பு

சரித்திர நிகழ்ச்சிகள் பல பாரிஸில், ஓவியமாக எழுதப்பட்டுள்ளன; சித்திரமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இந்நகரிலுள்ள எண்ணற்ற பொக்கிஷங்களுள் முதன்மையானது லூவர் கலை அரண்மனை. பல கலைகளிலும் பிரஞ்சுக்காரர்கட்கு இருக்கிற ஆர்வத்தையும் பக்தியையும் இந்த மியூசியம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. சிற்பக் கலைஞர் செய்து வைத்திருக்கும் பல சிலை உருவங்கள் உண்மை உருவங்கள் போலவே இருக்கின்றன. இவையாவும் கடந்துபோன நூற்



ஐபில் கோபுரம்

ளுண்டுகளின் பிரஞ்சுச் சிற்ப நூல் இலக்கணத்துக்குப் பொருத்த மானவை. நெப்போலியன், பிரஞ்சு மன்னர்கள் ஆகியோர் காலத்துச் சின்னங்களும், "அழியாச் சுடர்" என்ற வெற்றி மண்டபம், நெப்போலியனின் சமாதி போன்ற கட்டிடங்களும் பாரிசை அலங்கரிக்கின்றன.

ஓவியக் கலையிலும் பிரான்சு முன்னணியில் நிற்கிறது. பெரும்பாலும், வெளி நாடுகளிலிருந்து பிரான்சுக்கு வரும் மாணவர்கள் இக்கலைகளைக் கற்கவே வருகின்றனர். இவரில் இந்திய மாணவர் பலரும் உண்டு, எல்லைப்புறக் காந்தி மகன் கனி கான் சமீபத்தில் இப் படிப்புக்காக அங்கு சென்றிருக்கிறார்.

சுருங்கச் சொன்னால், பாரிசின் கலை உலகில், எல்லாம் அழகு, எங்கும் அழகு.

சில காட்சிகள்

பாரிசில் மிக முக்கியமான காட்சி, ஐபில் கோபுரம். அமெரிக்காவில் நடுக்கடலில், சுதந்திரச் சிலையைக் கட்டிய ஐபில் என்ற பிரஞ்சுப் பொறி இயல் வல்லார்தான் இதையும் நிறுவினார். ஐபில் கோபுரம் 984 அடி உயரமுள்ளது. முழுவதும் இரும்பால் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுரத்தின் எதிரில் பலே டி சாலியோ என்ற பிரம்மாண்டமான கட்டிடம் இருக்கிறது. நான் பாரிசில் இருந்த போது, இக் கட்டிடத்தினுள்தான், உலகக் கொடிகள் அனைத்தும் பறக்க, ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது.

நீங்கள் கேள்விப் பட்டிருக்கும் சாம்ப்சீ—எலீசிஸ் இருபுறமும் தோட்டங்களும் 'பாஷன்' சிருஷ்டிப்பவர்களும் நிறைந்த ஒன்றே கால் மைல் நீளமுள்ள வீதி; பழைய பாரிசையும், புதிய பாரிசையும் இணைக்கும் சாலை. ஒரே சமயத்தில், பத்து வரிசையான கார்கள் செல்லும் அளவு இச்சாலை விசாலமானது. வண்டிச் சத்தமும் ஜனசந்தடியும் கடலின் பேரிரைச்சலைப் போலிருந்தன. இங்கு நான் கண்ட அளவு கார்கள் நியூயார்க்கில் கூட இல்லை.

பாரிசில் எண்பது குவாட்டர்கள் உண்டு. குவாட்டர் என்பது நிர்வாக வசதிக்காக போலீசார் நகரைப் பிரித்திருக்கும் பகுதி. இவற்றுள் முக்கியமானது, லத்தீன் குவாட்டர். ரோமர் பிரான்சை ஆட்சி புரிந்த காலத்தில் இருந்தவண்ணமே, சில கட்டிடங்கள் பாதுகாக்கப்பட்டும் சிறிதும் சிதையாமல் இன்றளவும் லத்தீன் குவாட்டரில் காட்சி அளிக்கின்றன.

உலகிலேயே அழகிய கட்டிடம்

பாரிசிலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள வெர்சேயில் உள்ள அரண்மனை தனி மாண்புடையது. நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளோடு அமைந்தது. காட்சிப் பொருள்கள் பல இக்கட்டிடத்துள் புதைந்துள்ளன. பிரஞ்சுப் புரட்சி நடந்ததும் இங்குதான்; ஜெர்மன் சரணகதி கையெழுத்தானதும் இங்குதான். விடுமுறை நாட்களில் பல லட்சம் மக்கள் இவ்வரண்மனையைக் காண வருகின்றனர். இதன் முற்றத்தில் மட்டும் பதினயிரத்துக்கு மேற்பட்ட கார்கள் நிறுத்த இயலும். அரண்மனைத் தோட்ட வனப்பைக் கவிஞரே வருணிக்க வல்லவர். வெர்சே ஒரு கண்கொள்ளாக் காட்சி. நேரம் இருக்கும் அளவு நாம் அதைப்பார்த்து இன்புறலாம். எனது நாற்பதாயிரம் மைல் உலகப் பிரயாணத்தில் அதைவிட அழகிய கட்டிடத்தை நான் இன்னும் காணவில்லை.

பாரிஸ் கதம்பம்

பாரிசில் இல்லாதவை: தூசி, பிச்சைக்காரர்கள், அதிகப் பனி, அதிக மழை, உறுதியான நாணயம், பலமான சர்க்கார்.

பிரஞ்சுக்காரர்களுக்கு மிகப் பிடித்தவை: லௌகீகம், பற்பல நிறமான ஆடைகள், ஏராளமான விடுமுறை நாட்கள், லஞ்சம், வேலை நிறுத்தங்கள், அந்நிய நாட்டார், ஆடம்பரப் பொருள்கள், 'தேன்மதி' கழிக்கவரும் புதிய மணத் தம்பதிகள், பாலுக்குப் பதில் எலுமிச்சம் பழச் சாற்றைச் சேர்த்த காப்பி அல்லது தேயிலை. பிரஞ்சுக்காரர்களின் பொழுதுபோக்குகள்: உலகத்துக்கு புதிய மோஸ்தர் (Fashion) சிருஷ்டித்தல், நீச்சலடித்தல், சூதாடுதல், விண்ட்சர் கோமகன்—மிஸஸ் சிம்ப்சன், அல்லது அலிகான்—ரீதா ஹேவர்த் ஆகிய உலகப் பிரசித்தி பெற்ற தம்பதிகளை நேரிற் கண்டு களித்தல்.

குபேர நகரம்

பிரெஞ்சுக் காரர்கள் எல்லாருமே பெரும் பணக்காரர்கள். இல்லாவிட்டால் விலைவாசிகள் இப்படி இருக்

உருளைக்கிழங்கின் தோலைப்போக்கி இரண்டாக துண்டித்து உட்பாகத்தை குடைந்தெடுக்கவும், நசுக்கிய பட்டாணிக்கடலை, அரிந்த வெங்காயம், மிளகாய், எலுமிச்சஞ்சாறு, ருசிக்குத் தேவையான உப்பு இவைகளை கலக்கவும். குடைந்த உருளைக் கிழங்கு பாதிகளில் கலவையை திணிக்கவும். இருபாதிகளையும் ஈர்க்குச்சிகளில் தொடுத்து ஒன்ருகப்பொருத்தவும். சூடான டால்டாவில் உருளைக்கிழங்கைபொரித்து தனியாக வைத்துக்கொள்ளவும். வெங்காயம், தக்காளிப்பழம், மசாலா இவைகளை சமையல் பாத்திரத்தில் போட்டு வதக்கவும். பிறகு பொரித்த உருளைக்கிழங்கை போடவும். நீராவி போகாமலிருக்க கோதுமை மாவினல் மூடியை பாத்திரத்துடன் ஒட்டவைத்து ½ மணிநேரம் நல்ல சூட்டில் பக்குவம் செய்யவும், பிறகு ½ மணிநேரம் சிறு சூட்டில் வைத்திருக்கவும். சூடாக பரிமாறவும்.

உங்கள் தினசரி சாப்பாட்டை டால்டா எப்படி அதிக சத்துடையதாகச் செய்கிறது?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது என்று வேண்டுமானாலும் — எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 97-50 TM

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு, இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து, இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கொள்ளலாம்.

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APAX STM

தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள் :

பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12, சென்னை.

ஜம்மியின்

லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளினால் ஏற்படும் பயத்தைப் போக்கடிக்கிறது.

மிகவும் முத்திப்போன சந்தர்ப்பங்கள் தவிர எல்லா ஈரல் குலைக்கட்டிகளுக்கும் ஜம்மியின் லிவர்க்யூர் கண்டிப்பான குணம் அளிக்கிறது என்பதை கடந்த பல ஆண்டுகளாக குணமாகி வரும் ஆயிரக்கணக்கான குழந்தைகளினால் நிரூபிக்கப்படுகிறது.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாபூர், மதராஸ். (போன் நெ. 8139)
தெப்பகுளம் திருச்சினாப்பள்ளி, பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர், பம்பாய் 4, (போன் நெ. 41593) மற்றும்: லக்னோ, கல்கத்தா,

J-235. Tamil

குமா?—காலைப் பலகாரம் 400 பிராங்கு, தினசரிப் பத்திரிகை 12 பிராங்கு, ஒரு கப் எலுமிச்சம்பழச் சாயா 42 பிராங்கு, ஒரு ஆரஞ்சு கிரஷ் 50 பிராங்கு.

ஒரு பிராங்கு என்பது காலணவுக்கும் சற்று குறைவு. கள்ள மார்கெட் மதிப்பு இதைவிடக் குறைவாயிருக்கும்.

கள்ளமார்கெட்

பிரான்சில் கள்ள மார்கெட் பகிரங்கமாகவே இருக்கிறது. கள்ள மார்கெட் விலைகளை வேறு எந்த தேசத்திலாவது தினந்தோறும் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்களா?

பாஷன்கள் (மோஸ்தர்கள்)

பெரிய சாலைகளில் பல்லாயிரம் மக்களுக்கிடையில் கூட, ஒரு ஆடவனும் ஒரு பெண்ணும் கட்டி அணைத்துக் கொள்ளுவதும் முத்தமிட்டுக் கொள்ளுவதும் பாரிசில் நடைமுறை நிகழ்ச்சி.

பிற நாடுகள் போல, பிரான்சில் குறிப்பிட்ட உடைகள் இல்லை. ஆடைகளில் ஒருவரை ஒருவர் பின்பற்றுவது கிடையாது. அவரவரும் தத்தம் போக்குப்படியே—பகட்டான—ஆடை அணிவர்.

யார் யாருடைய முகத்துக்கும் ரூபத்துக்கும் வயதுக்கும், எந்த விதமான எந்த நிறமான உடை நன்றாக, எடுப்பாக இருக்கும், எதை அணிந்தால் வசீகரமாய் விளங்குவர் என்று யோசனை சொல்ல, பாரிசின் பிரபல கடைகளில் மேக்-அப் நிபுணர்கள் இருக்கிறார்கள். ஆடை, அலங்காரம், ஆபரணங்கள் இவற்றை மங்கையர் அடிக்கடி மாற்றுவதும் பாரிஸ் பாஷன்களில் ஒன்று.

அத்தரின் சுகந்தம் அறையிலும் ஆடையிலும் கமழ்ந்தால் சுகாதார நிலை சிறப்பாயிருப்பதாக பிரஞ்சுக்காரர் கருதுவர்.

செயற்கைச் சிங்காரிப்புகளில் பிரெஞ்சுக்காரர் செலவிடும் முயற்சிகளுக்கு எல்லையே இல்லை. தலை அலங்காரம் செய்யும் கலையில் பிரஞ்சுக்காரர் கை தேர்ந்தவர்கள். தலை மயிரின் நிறத்தை மாற்றுதல், தலைமயிர் உதிர்வதைத் தடுத்தல், தலை மயிர் அபரிமிதமாகக் கொட்டாமல் இருக்கும்படி செய்தல் போன்றவை எல்லாம் இக்கலையின் பல உட்பிரிவுகளில் சில. தலைமயிர் வெட்டிக்கொள்ள 600 பிராங்கு முதல் 10,000 பிராங்கு வரை செலவிடலாம். ரேட்டு அதிகமாக அதிகமாக, உபயோகிக்கப்படும் இயந்திரங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

பிரஞ்சுக்காரா! போஜனப்பிரியா!

புதிய புதிய உணவு வகைகள் தயாரிப்பதிலும் பிரஞ்சுக்காரர் பேர்பெற்றவர்கள். அதனால்தான் பிரஞ்சு வழங்காத நாடுகளிலும்கூட (Menu card) ஆகாரங்களின் பெயர்கள் அச்சிட்ட அட்டையை பிரஞ்சு மொழியிலேயே பிரசுரிக்கிறார்கள்.

பலவகையான ஆகாரங்கள் பிரஞ்சு விருந்துகளில் பரிமாறப்படும். மேனாட்டார் அனைவருமே, சாவகாசமாகச் சாப்பிடும் சுபாவம் உடையவர். சாப்பிடும்போது பிரஞ்சுக்காரர் காட்டும் பொறுமை பிற வெள்ளைக்காரர்கட்கே ஆச்சரியமாயிருக்கிறது. பகல் உணவு அருந்த ஒன்றரை மணி நேரம் ஆகும். ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் மனைவி, திருமதி எலினர் ரூஸ்வெல்ட்டுக்கு நடந்த ஒரு விருந்தில் சாப்பாடு பரிமாறமட்டும் இரண்டு மணி நேரம் ஆயிற்றாம்! அதற்குப்பின் அமெரிக்க மக்களுக்குப் பேசிய ரேடியோ சொற்பொழிவில், இதைப்பற்றி மிகவும் பாராட்டிக் குறிப்பிட்டுவிட்டு அமெரிக்கரும் பொறுமையாயும் நன்றாகவும் சாப்பிடவேண்டும் என்று திருமதி எலினர் ரூஸ்வெல்ட் கூறினாளாம்.

"இனி திருமதி எலினுர் ரூஸ்வெல்ட் கலந்துகொள்ளும் விருந்துகளில், குறைந்த வகைகளை சுருங்கிய நேரத்தில் பரிமாற வேண்டும்" என்று மறுநாள் பிரஞ்சு உள்நாட்டு மந்திரி சபையார் ஒரு இரகசிய உத்தரவு அனுப்பினுர்களாம்!

பிரஞ்சு ஹோட்டல்களில், வெளிப்புறத்தில், அதாவது, சாலைகளின் அருகில், ஐந்தடிப் பாதைகளில், உட்கார்ந்து சாப்பிடுவதானுல், அதிகக் கட்டணம் கொடுக்கவேண்டும். சாலைகளிற் செல்லும் பிரஞ்சு யுவதிகளை இலவசமாகப் பார்க்க அநுமதிப்பார்களா, ஹோட்டல் முதலாளிகள்?

பிரஞ்சு ஹோட்டல்களில் அதிக சப்தமா, நம் நாட்டு மீன் கடைகளில் அதிகமான இரைச்சலா என்பது விவாதத்திற்குரிய பிரச்னை.

பிரஞ்சு மொழி

பிரஞ்சுக்காரர்கள் பலருக்கு ஆங்கிலம் தெரியும்; ஆனுல் பேசமாட்டார்கள். யுத்தத்தின் பலனுகவும், அமெரிக்கரின் பொருளாதார உதவியாலும், இப்போது பாரிசில் பிரஞ்சு மொழி தெரியாததால் எவ்விதச் சிரமமும் ஏற்படுவதில்லை. பிரஞ்சுக்காரர்களும் தங்கள் கர்வத்தை மூட்டைகட்டி விட்டு, இப்போது ஆங்கிலத்தில் பேசுகின்றனர். வாராளமான இங்கிலீஷ் சினிமாக்களும் இங்கிலீஷ் மொழியில் வெளியாகும் பத்திரிகைகளும் உண்டு. "இங்கு ஆங்கிலம் பேசப்படும்" என்ற பலகையும் பல கடைகளில் தொங்கும்!

பிரஞ்சு ஒரு சிறந்த மொழி. பிரான்சைமட்டும் அல்ல, ஐரோப்பாவை அறிய பிரஞ்சு ஞானம் இன்றியமையாதது. கானடாவிலும் வட ஆப்பிரிக்காவின் சில பகுதிகளிலும் பிரஞ்சு மொழி பரவியுள்ளது. தத்துவ சாஸ்திரம், விஞ்ஞானம் இவை பற்றிய பல ஆதாரமான நூல்கள் பிரஞ்சு மொழியிலிருப்பதால், நம் இளைஞர்கள் பலர் இம்மொழியைக் கற்றுப் பயனடைய வேண்டும் என்பது எனது அவா.

அமெரிக்காவில்......

ஐக்கிய அமெரிக்காவில் ஆணின் சராசரி ஆயுள் 63 வயது; பெண்ணின் சராசரி ஆயுள் 67 வயது.

1948-ம் வருஷக் கடைசியில் எடுத்த கணக்குப்படி அமெரிக்காவில் மொத்தம் 1781 தினசரிப் பத்திரிகைகள் நடக்கின்றன.

விஞ்ஞானம்

மோட்டார் உற்பத்தியிலும் கப்பல்கள் கட்டுவதிலும் பிறவகைகளில் பிரான்சு பெரிதும் முன்னேற்றமடைந்துள்ளது. தம் சாமான்களோடு கொஞ்சம் மதுவையும் அத்தரையும் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று பிரஞ்சுக்காரர்கள் சொல்லுவதால்தான், பிரஞ்சுப் பொருள்கள் பல நம் நாட்டுக்கு விற்பனைக்கு வருவதில்லை.

விஞ்ஞானம், ரசாயனம், பௌதிகம் ஆகிய சாஸ்திரங்களில் பிரஞ்சுக்காரர்கள் பல புது உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளனர். ஆர்க்டிக் பிரதேசத்துக்கு பிரஞ்சு விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக் கோஷ்டி சில வருஷங்கட்கு முன் சென்றது.

சென்ற ஆண்டில், பிரான்சில் நடைபெற்ற விஞ்ஞான மாநாட்டுக்கு, நமது விஞ்ஞானி சர். சி. வி. ராமன் சென்றிருந்தார். அவர் கண்டு பிடித்த "ராமன் விளைவு" (Raman Effect) என்பது மதுவை எப்படி மாற்றுகிறது என்பதை அறிந்த பிரஞ்சு விஞ்ஞானிகள், மது ராமனை எப்படி மாற்றுகிறது என்பதையும் அறிய முயற்சி செய்தார்களாம். ஆனுல்,

ராமன் அவர்கட்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டார்!

ஜாக்கிரதை

பிரான்சுக்கு செல்லக் கூடியவர்களுக்கு ஓர் எச்சரிக்கை. எக்கச் சக்கமாய் மாட்டிக்கொண்டு விடாமல் அந்நியர்கள் மிகக் கவனமாயிருக்க வேண்டும். வயது வந்த பெண்கள், சாலைகளில் செல்லும் அந்நியர்களை விசில் அடித்தோ, வேறு விதமாகவோ அழைப்பதுண்டு. யுத்தத்தினால், ஆடவரைவிடப் பல லட்சம் பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் மணமாகாதவர்கள். விபசாரத்தை விட்டால் இவர்களுக்கு வேறு வழியில்லை. விபசாரம் வெட்கப்பட வேண்டிய தொழில் என்ற மனப்பான்மை பிரஞ்சுக்காரருக்கு ஏற்படாததே இத்தீய வழக்கம் வளர்ந்து வருவதற்குக் காரணம்.

காபரட்

காபரட் என்னும் ஹோட்டல்களில், இயல் இசை நாடக நிகழ்ச்சிகள், வாடிக்கைக் காரர்களுக்காக நடந்து கொண்டே இருக்கும். கண்ணுக்கு உணவில்லாதபோது, இங்கு சிறிது, வயிற்றுக்குமே ஈயப்படும்.

இரவு வாழ்க்கை

பாரிசின் இரவு வாழ்க்கையைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற வேண்டுவது இன்றியமையாதது. பாரிசின் வாழ்க்கையே இரவில்தான்! ஐரோப்பா கண்டம் முழுதும் சுற்றும் பிரயாணிகள் ஒருவரை ஒருவர் கேட்டுக்கொள்ளும் கேள்விகளில் சில: "நீங்கள் ஸ்டாக்ஹோமில் எத்தனை பகல்கள் (ஆங்கிலத்தில் பகல் என்பதற்கும் நாள் என்பதற்கும் Day என்ற ஒரே பதம் தான்) தங்கினீர்கள்? பெர்லினில் எத்தனை பகல்கள்? சூரிக்கில் எத்தனை பகல்கள்? பிராஹாவில் எத்தனை பகல்கள்? பாரிசில் எத்தனை இரவுகள்?"

அப்படியானால், பாரிசில் யாரும் தூங்குவதில்லையா? "ஒரு ஆணுக்கு 6 மணி நேரத் தூக்கம் போதுமானது; ஒரு பெண்ணுக்கு 7 மணி நேரமும் ஒரு முட்டாளுக்கு 8 மணி நேரமும் தூக்கம் வேண்டும்" என்று நெப்போலியன் சொன்னதாகப் பிரசித்தம். நெப்போலியனின் வார்த்தைகளில், பிரஞ்சுக்காரர்கள் இதையாவது பின்பற்றுகிறார்களே!

(Night Club) கேளிக்கை வைபவங்கட்கு 2000 பிராங்கு முதல் 10000 பிராங்குவரை உள்ள டிக்கட்டுகள் வாங்குகிறார்கள். இங்கு பல பெண்கள் நடனம் ஆடுவர். இந்த நடனங்கள் முற்றுப் பெறும்போது முழு நிர்வாண நடனமாகவே இருக்கும். நிர்வாணம் என்பதை மட்டும் மறந்துவிட்டால், பிரஞ்சு நடனம் மிகச் சீரிய கலை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் டெலிவிஷன் மூலம் இந்நடனங்களை பிரிட்டிஷ் மக்களுக்கு, பி. பி. சி. அஞ்சல் செய்தது. பிரிட்டிஷாரின் ஒழுக்கத்துக்குக் கேடு வந்துவிடக் கூடாதென்று பிரஞ்சு நடன அஞ்சல்களை இப்போது நிறுத்திவிட்டனர்.

கீரியும் பாம்பும்

ஜெர்மன்காரரும் பிரஞ்சுக்காரரும் கீரியும் பாம்பும்போல. கல்தோன்றி மண்தோன்றாக் கால முதலே, இவர்கட்கிடையே விரோதம் உண்டு. ஐரோப்பாவின் சரித்திரத்தை கோரக் காட்சியாக்கி, இரு மகா யுத்தங்களையும் ஏற்படுத்தியதற்கு இவர்களிருவருமே பொறுப்பாளிகள்தான்.

வெர்சே அரண்மனைக்கு நம்மை அழைத்துச் செல்லும் பிரஞ்சுக்காரர்கள், 1919-ல் ஜெர்மனியரிடம் சரணகதி ஒப்பந்தம் கையெழுத்துப்போட உபயோகிக்கப்பட்ட மேஜையை சுட்டிக் காட்டுகின்றனர். இது நம்மை

அவமதிப்பதாகும் என்பது ஜெர்மன் மக்களின் கருத்து.

ஜெர்மன்காரன் தனியாயிருந்தால், விஞ்ஞானத்தில் விருப்பமுடையவனு யிருப்பானென்றும், இன்னெரு ஜெர்மன்காரனைச் சந்தித்தால் இருவருமாக சதி செய்வார்கள் என்றும், மூன்று ஜெர்மன்காரர்கள் சேர்ந்து விட்டால் பிறர்மீது யுத்தமே தொடுத்துவிடுவார்களென்றும் பிரஞ்சுக்காரர்கள் கிண்டல் செய்கிருர்கள்.

"தனிமையாயிருக்கும் பிரஞ்சுக்காரன் காதல் நினைவாயிருப்பான்; இரண்டு பிரஞ்சுக்காரர்கள் சேர்ந்தால் ஒரு அரசியல் கட்சியை உண்டாக்கி விடுவார்கள்; பிரஞ்சு மும்மூர்த்திகள் சேர்ந்தால் மந்திரிசபையையே மாற்றி விடுவார்கள்" என்று ஜெர்மன்காரர்கள் பதிலுக்கு கிண்டல் செய்கிருர்கள்.

மந்திரிசபை மாறுவது பிரான்சில் அன்ருட நிகழ்ச்சி. இதற்குக் காரணம் மக்களிடையே அரசியல் விஷயங்களில் சிரத்தை இல்லாமை; பலமான அரசியல் கட்சிகளுக்கும் திறமையான தலைவர்கட்கும் ஏற்பட்டுள்ள பஞ்சம். கம்யூனிஸ்ட் கட்சி இப்போது பிரான்சில் பரவியுள்ளது. மக்களில் 3-ல் 1 பகுதியினர் கம்யூனிஸ்ட் ஆதரவாளராக இருக்கக் கூடும். பெரும் பகுதியினர் டிகால் கட்சியையே ஆதரிப்பவர் என்று கருதுவது அநேகமாக சரியாயிருக்கலாம். டிகாலின் சகோதரர்தான் பாரிஸ் நகரமேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிருர்.

போல்லாத 25 மைல்கள்

25 மைல் அகல முள்ள இங்கிலீஷ் கால்வாய்தான் இங்கிலாந்தையும் பிரான்சையும் பிரிக்கிறது. இந்த இருபத்தைந்து மைல்களால்தான் இரு பெரும் போர்களிலும் நேரடியான யுத்தத்திலிருந்தும் தோல்வியிலிருந்தும் இங்கிலாந்து தப்பியது.

இந்த இருபத்தைந்து மைல் நீர்ப் பாதையின் இரு கரைகளிலுமுள்ள மக்களுக்குள் பல வித்தியாசங்கள் உண்டு. இங்கிலீஷ்காரர்கள் கட்டுப்பாடானவர்கள், பிரஞ்சுக் காரர்கள் அடங்காப் பிடாரிகள். இங்கிலீஷ் சுங்க அதிகாரிகள் நேர்மையானவர்கள்; சுங்கச் சட்டங்களை தேச நன்மைக்காகவே உபயோகிப்பவர்கள். பிரஞ்சுச் சுங்க அதிகாரிகள், "நானே தேசம்" (I am the State) என்ற லூயி மன்னனின் வார்த்தையைக் கடைப்பிடித்து, தம் சொந்த நன்மைக்காகவே சுங்கச் சட்டங்களைப் பயன்படுத்துபவர்கள்.

இங்கிலீஷ்காரர்கள் நிர்வாகத் திறமைக்குப் புகழ் பெற்றவர்கள்; பிரஞ்சுக்காரர்கள் நிர்வாக ஊழல் மலிந்தவர்கள். கூலியையோ கட்டணத்தையோ முன்கூட்டி நிர்ணயிக்காமல், இங்கிலாந்தில் எவ்வேலையையும் தொடங்கலாம் பிரான்சில், இப்படிச் செய்தால் ஆபத்துத்தான். இங்கிலீஷ்காரர்கள் சட்டத்தில் நம்பிக்கை உடையவர்கள்; பிரஞ்சுக்காரர்கள் கள்ளமார்கெட்டில் நம்பிக்கை உடையவர்கள். இங்கிலீஷ்காரர்கள் நாணயமானவர்கள்; பிரஞ்சுக்காரர்கள்?

கடைசியில், பாரிஸ் செய்திகள் சில: "பிரஞ்சு போலீஸ் தலைமைக் காரியாலயத்தில் ஐந்தாவது மாடியில் 5 மில்லியன் பிராங்குகள் நேற்று களவு போயிற்று."

"மிக அழகிய நிர்வாணச் சிலை ஒன்றின் முன், ஒரு பிரஞ்சு யுவதி, இன்று காலையில், தன் ஆடைகளை அகற்றிவிட்டு, சிலையை விட, தான் அழகாக இருப்பதாகச் சவால் விடுத்தாள். போலீசாரும் வழிப்போக்கரும் அவளை ஆடைகளை அணிந்துகொள்ளும்படி கெஞ்சியதால், அந்த யுவதி அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினுள்."

சமீபத்தில் வெளிவந்த பேர்ஞர்ட் ஷாவின் 'பதினறு சுய சித்திரங்கள்' என்ற நாலுக்கு எழுதிய விமர்சனம் இது. ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்ததன் தமிழாக்கம்.

"பதினறு சுய சித்திரங்கள்".

ச. ராஜகோபாலாச்சாரியார்

"**நா**ன் எவ்வளவு தூரம் பைத்தியமா யிருக்கிறேன், எவ்வளவு தூரம் புத்தி சுயாதீனமா யிருக்கிறேன்?" என்று 1898-ல் பெர்ஞட்ஷா தம்மைத்தாமே கேட்டுக்கொண்டார். இந்தக் கேள்விகளும், இவைபோல் பலவும் விடையிறுக்க முடியாமலே போகவேண்டும் என்றும் அவரே எழுதினர்.

புத்திசுயாதீனம் என்பது சார்புத் தன்மையானது என்பது உண்மைதான். என்ருலும் ஒன்று நிச்சயம். ஷா ஒரு பைத்தியமில்லே. என்ருலும் சமயங்களில் அமானுஷ்யத் தன்மை மீதுள்ள அவாது ஆசை அவாது சத்திய வேட்கையையும் மூழ்கடித்து விடுகிறது. படிப்பு வாசனைக்குரிய எல்லேக்குள் நின்றுகொண்டே, அவர் தமது அமானுஷ்யக் கருத்துக்களில் ஆழ்ந்து விடுவதுதான் அவருக்கு அத்தனை பிரகாசத்தைத் தேடிக் கொடுத்திருக்கிறது. அதைத்தான் அவர் 'ஷாவியனிஸம்' என்கிருர். அவர் சொல்வது போல், அந்த ஷாவியனிஸம் அபரிமிதமான ஜாஜ்வல்யத்துடன் மினுங்குகிறது. ஆனல், அந்தக் குணத்தை அவர் தமது 93 வது வயதில் கூடத்தான் உதறித்தள்ள முடியவில்லே. மின்வெட்டும் இந்தப் பிரகாசம் தான் ஜனங்கள் அவரை நம்பாமல் போகும்படி பண்ணுகிறது. என்ருலும், இதுபோன்ற இலக்கிய சிருஷ்டியில் ஷாவினுடைய சிருஷ்டிகள் தான் அதிகப்படியான உண்மைகளே உட்கொண்டு விளங்குகிறது. இம்மாதிரியாக விஷயத்தை விளக்கும் உத்தி-அமானுஷ்ய உருவ அமைப்பு தேவையில்லே. இதை ஷேக்ஸ்பீயரையும் ஷாவையும் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம். ஷேக்ஸ்பீயர் உயர்தரமான கருத்துக்களே என்றும் சிரஞ்சீவியாய் ஜெகஜ்ஜோதியாய் விளங்கும் முறையில் சொல்லி யிருக்கிருர். என்ருலும் அவர் அந்தக்கருத்துக்களேச் சொல்லுவதற்கு அமானுஷ்ய உருவத்தையோ, அதிமிகையான அலங்காரத்தையோ உபயோகிக்க வில்லே. ஒவ்வொரு மனிதனும் எதாவது ஒரு ஆசையின் காரணமாக வழி தவறி அதற்கே அடிமையாவதுண்டு. ஷாவும் இதற்கு விலக்கல்ல.

மேலே நான் ஷாவின் ஒரு அம்சத்தைத் தான் குறிப்பிட்டேன். நான் சொல்ல வேண்டியது இது ஒன்றுதான் என்ருகிவிட்டால், நான் நேர்மை தவறியவனுவேன்; உண்மையை மறந்தவனுவேன். '16 சுய சித்திரங்கள்' என்னும் இந்நூலேப் படித்ததும், நமது காலத்துச் சிரிப்பாணித் தத்துவார்த்தியான ஷாவிடம் நாமும் ஆசைகொண்டு விடுவோம்.

சிலர் நினைப்பதுபோல, ஷா தம்மைச் சுற்றியுள்ள மனித ஜந்துக்களை அன்போடு வெறுப்பவர் என்று கருதுவது முழுத் தப்பு. அன்புதான் அவரது அழுத்தமான கொள்கை. வெறுப்பு என்பது அவரது அமானுஷ்ய ஆசையின், செல்ல அன்பின் திரைச்சீலை தான். மனிதனையும் அவனது நாகரிகத்தையும் பற்றி அவர் செய்யும் விமர்சனத்தை 'ஒ கானர் மாகஸினி'ல் அவர் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

"முழுக்க முழுக்க, பயந்து பயந்து நான் கண்டு அஞ்சும் பிராணி மனிதன் ஒருவன்தான். சிங்கத்தைப் பழக்குபவனின் துணிச்சலைக் கண்டு, நான் அதிகம் சிந்தித்துப் பார்த்ததில்லை. சிங்கத்தின் கூண்டுக்குள் அவன் ஏனைய மனிதர்களிட மிருந்தாவது பத்திரமாயிருக்கிறான். நல்ல தீனி தின்னும் சிங்கத்தால் அத்தனை கெடுதலில்லை. அதற்கு லட்சியங்கள், கொள்கைகள், கட்சி, இனம், வர்க்க பேதம் எதுவும் கிடையாது; சுருங்கச் சொன்னால், தான் தின்ன விரும்பாத எதையும் அது அடித்துக் கொல்வதற்கு முகாந்திரமில்லை."

இந்த வரிகளில் நாம் இன்றைய மனிதனின் வாழ்வைப் பற்றி ஷாவின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்கிறோம்; மேலும் நான் சொன்ன அவரது அன்பையும் உணர்ந்து கொள்கிறோம். அதிமிதமான கர்வம்போல் தோன்றும் ஷாவின் தன்மையால், சில உணர்ச்சிகள் எதிர்த்தடிக்கப் படுகின்றன. ஆனால் அந்தக் கர்வம் செயலாற்றத்தான் செய்கிறது. இந்தத் தன்மை தன்னம்பிக்கை யின்மையைத் தற்காக்கும் விகார புத்தியல்ல; ஆனால் களியாட்டத்துக்கும் சந்தோஷத்துக்கும் வழிகோலும் ஒரு தந்திரக் கரணம்தான். தலைக்கனம் ஏறியதுபோல் தோன்றும் இந்தத் தத்துவார்த்தியின் உண்மையான அடக்க குணத்தை, இலக்கியத்தோடு போட்டி போடும் சங்கீதம், சித்திரம், சிற்பம் முதலிய நுண்கலைகளைப் பற்றி அவர் எழுதுவனவற்றில் கண்டு கொள்ளலாம். அந்தக் கலைகளைப் பற்றியோ அதன் கலைஞர்களைப் பற்றியோ அவர் எழுதும் போது பரிபூரணப் பணிவும், மிதமும் தான் காணப்படுகின்றன.

சங்கீதத்திடம் அவருக்குள்ள ஈடுபாட்டையும், சமூகத்தில் அதற்குரிய ஸ்தானத்தைப் பற்றி அவர் கொண்டுள்ள கருத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள பின்வரும் வரிகளைப் பார்த்தால் போதும்.

"மதம் தான் மனித குலத்தை ஒருமைப் படுத்துகிறது என்றும், மதமின்மை மாந்தரைப் பிளவு படுத்துகிறது என்றும் கொண்டால், எனது நாட்டின் (ஐயர்லந்து) மதத்தை அதன் சங்கீத மேதையிலும், அதன் மதமின்மையை தேவாலயங்களிலும், வீட்டு முன் கூடங்களிலும் தான் கண்டேன் என்பதை நான் வலியுறுத்த முடியும்."

நடைமுறையிலுள்ள எல்லா விஷயங்களையும் எதிர்க்கும் குணம் அவருக்கு உண்டு என்றாலும், அவரிடம் இன்றைய நடைமுறையில் உள்ள சிறந்தனவற்றை அங்கீகரிக்கும் ஞான விகாசம் இல்லாமல் இல்லை. இதைப் படியுங்கள்.

"கல்லூரிக் கல்விப் பரீக்ஷார்த்தம் வேறு எதையும் விடச் சிறந்ததுமில்லை; என்றாலும் வாழ்க்கை யனுபவ மில்லாமல், எந்த மனிதனும் கல்வியறிவு பெறுவதில்லை."

"ஹாஸ்யம் என்பது உங்களைச் சிரிப்பு மூட்டுவது தான்; என்றாலும் உயர்தர ஹாஸ்யம் சிரிப்போடு ஒரு துளி கண்ணீரையும் வரவழைத்து விடும்."

"குடும்பம் என்பது அதனளவில் ஒரு குறுகிய வரன்முறை யற்ற

தன்மைதான்; என்றாலும் அது தான் இயற்கையான சமூகப் பகுதியாகும்.''

ஷேக்ஸ்பீயருக்குச் சமதையாக, அவரைவிட மேம்பட்டதாகக் கூட ஷா தம்மைச் சொல்லிக் கொள்வதைக் கண்டு சிலர் அவர் மீது கோபப் பட்டதுண்டு. அவர்கள் கோபப் படுவதும் சரிதான். ஷா பாராட்டும் அந்த உரிமை ஷாவை சில்லறைத் தனத்துக்கு இழுத்துச் சென்று விட்டது. கேலிக்காக வேனும் ஷா சொல்லிய இந்த உரிமை ஷாவையே எதிர்த்தது; அதிலிருந்து அவரால் மீள முடியவில்லை. எனவே இந்த 16 சுய சித்திரங்களில் இங்கிலாந்தின் தலை சிறந்த கவியைப் பற்றிய தமது எழுத்துக்களை அடித்து எழுதி விட்டார்.

அவர் தம்மை ஷேக்ஸ்பீயரின் வாரிசு என்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும், ஷேக்ஸ்பீயரை மேம்பட்டவர் என்று சொல்லவில்லை. தமது நீண்ட முகவுரை ஒன்றின் பிரசித்தத் தலைப்பு ஒன்றில், ஒரு கேள்விக்குறியும் தொக்கி நிற்கிறது. அந்தக் கேள்விக்கு விடை தம்மால் தான் தரப்பட்டது என்பதை, "நாடகத்தில் ஷேக்ஸ்பீயரும், ஆபராவில் மோஜார்டும், சித்திர வேலையில் மிக்கேல் ஆங்கிலோவும் கலையின் சிகரத்தை எட்டிப் பிடித்து விட்டதால், இனி ஷேக்ஸ்பீயரை யாரும் மிஞ்ச முடியாது'' என்று கூறியிருக்கிறார். "ஷேக்ஸ்பீயர் சொல்லாத விஷயங்களைச் சொன்னாலும், வாழ்விலும் குண சித்திர பாவத்திலும் அன்றைக்கில்லாத கண்ணோட்டங்கள் இன்று இருப்பினும், ஷேக்ஸ்பீயரை யாரும் மிஞ்ச முடியாது.''

இந்தக் கூற்று, ஷேக்ஸ்பீயருக்கு மேலாக ஏதாவது செய்ய வேண்டும் என்பவருக்கு அதன் சங்கடங்களை நிரூபித்துக் காட்டுகிறது.

காதலைக் கண்டு பிடிப்பது!

ஆங்கில நாவலாசிரியர் ஸாமர்ஸட் மாகமிடம் ஒரு பெண் வந்து, ஒருவன் மேல் ஒரு பெண்ணுக்கு உண்மையாகவே காதல் இருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டு பிடிப்பது எப்படி என்று கேட்டாள்.

மாகம் சொன்ன பதில்:

"காதலனுடைய பல் பிரஷை காதலி உபயோகிக்கத் தயாராக இருந்தால் உண்மையான காதல் இருக்கிறது என்று அர்த்தம்.''

ஷாவின் வாழ்க்கைத் தத்துவத்தைப் பொறுத்த வரையில் கீழ்க் காணும் வரிகளைப் பார்க்கலாம்:

"வாழ்க்கையின் உண்மையான சந்தோஷம் எது? நீங்கள் மகத்தானது என்று மதிக்கும் ஒரு காரியத்துக்காக உங்கள் ஜீவன் பயன்பட வேண்டும்; நீங்கள் தேய்ந்த பொருளாகக் குப்பையோடு குப்பையாய் எறியப் படுவதற்கு முன்பு, உங்கள் ஜீவன் பரிபூரணமாக உங்கள் மகத்தான காரியத்துக்காகப் பயன்பட வேண்டும். இயற்கையின் ஆற்றல் மிக்க சக்தியாக உங்கள் ஜீவன் விளங்கவேண்டும். அதுவன்றி, உலகம் உங்களுக்குச் சந்தோஷம் அளிப்பதற்காக எதுவும் செய்வதில்லை என்று புகார் சொல்லிக்கொண்டு வேதனைகளுக்கும் துயரங்களுக்கும் உறைவிடமான கூனிக் குறுகிய சுயநலப் பிண்டமாக உங்கள் ஜீவன் இருத்தல் கூடாது.''

இந்தச் சித்தாந்தம் மார்க்க அரேலியரின் சித்தாந்தம் போலவே இருக்கிறது. பெர்னர்ட் ஷா கூறியவற்றுள் 'ஷாவியனிஸம்' மிகக் குறை

வாக உள்ளதும், ஆனல் மிக முக்கிய மான ஒன்ருகவும் இருப்பது இந்த வாசகமே.

ஞான தீக்ஷண்யம் உள்ள ஒரு நவீன அறிஞரிடமிருந்து, கீழ்க் கண்ட வற்றை விட அதிகமாக, நடை முறையை அங்கீகரிக்கும், உத்தமப் பண்பை நாம் எதிர்பார்க்க முடியுமா?

"காரண காரிய வாதம் என்பது ஒரு அனுஷ்டான முறை மட்டுமல்ல; அடிப் படையான நோக்கமும் கூடத் தான் என்று சொல்லப்படுவது எனக்கு—பெரிய காரண காரிய வாதியான எனக்கு—உடன்பாடல்ல. மனிதர்கள் மீது ஆட்சி புரிய வேண்டுமென்ருல், பிரத்யக்ஷ வாதிகளாக உள்ள ஆட்சியாளர்கள், அந்தஸ்து, மனச்சாட்சி, பொது நல மனப்பான்மை, சமூகத் துயரங்களுக்கு வருந்தும் குணம், தேசபக்தி, விஞ்ஞான சிருஷ்டி, சந்தர்ப்பங்களைக் கட்டி மேய்த்துச் சமாளிக்கும் சக்தி முதலியவற்றை அடையச் செய்யும் தியாகம் முதலிய வற்றின்—பொதுவாக சகல குணுகுணங்களின்—தாராதரங்களை மதிப்பிட்டு சரியான கணக்குப் போட்டு வைத்திருக்க வேண்டும். பிக்காடிலி சர்க்கஸிலிருந்து புட்னிக்குச் செல்லும் சரியான வழியை உங்களுக்குக் காரண காரிய தத்துவம் கண்டு பிடித்துக் காட்டக் கூடும். ஆனல், 'புட்னிக்கு ஏன் செல்ல வேண்டும்? பிக்காடிலிலேயே ஏன் இருக்கக் கூடாது?' என்பதற்கு காரண காரிய தத்துவம் விளக்கம் கூற இயலாது."

"ஏசுநாதரின் எச்சரிக்கை ஒன்றை நான் மறக்க முடியாது. அதாவது நாம் ஏற்கெனவே நிலைபெற்றிருக்கும் மதங்களில் முளைத்திருக்கும் களைகளை எல்லாம் பிடுங்கி எறிய முற்படும் போது தானியப் பயிரையே நாம் பிடித்திழுக்கத் தொடங்கிவிடலாம்; அப்படிச் செய்தால், நிலச் சொந்தக்காரனுக்கு மதம் என்ற தானியப் பயிர் ஒன்றுகூட மிஞ்சாதபடி பிடுங்கிஞலும் பிடுங்கி விடுவோம்."

*

திருத்தம்

அமெரிக்காவில் ஒரு சாப்பாட்டு விடுதி மிகமிக ஆபாசமாக இருந்தது. அதைவிட ஆபாசம் உலகத்திலேயே கிடையாது. அந்தவிடுதியின் சொந்தக்காரி ஒரு நாள் பெரிய எழுத்துக்களில் கீழ்க் கண்டபடி எழுதி வாசல் கதவில் தொங்கவிட்டாள்:

"கால்களைக் கழுவிக் கொள்ளுங்கள்." இதைப்பார்க்க சீன மாணவன் ஒருவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. உடனே அதே போர்டில் கீழே பின் வருமாறு எழுதி வைத்துவிட்டான்:

"வெளியே போகும் போது"

கார் மயம் ஜகத்!

அமெரிக்காவிலுள்ள குடும்பங்களில் சுமார் 29,000,000 குடும்பத்தார் (அதாவது மொத்த ஜனத் தொகையில் 68 சத வீதம்) சொந்தத்தில் கார் வைத்திருக்கிருர்கள். இவர்களில் 46 சத விகிதம் புதுக் கார்களும், 45 சத விகிதம் பழைய கார்களும் வைத்திருக்கிருர்கள். வாடகைக் கார்கள் மட்டுமே 34,000,000 இருக்கின்றன. சராசரியாக ஒவ்வொரு காரும் 1940 வருஷ மாடலாகவும், 59,000 மைல்கள் ஓடியதாகவும் இருக்கும்.

ஆந்திர நாட்டில் தெனலிராமன் கதைகள் தோன்றின. தமிழ் நாட்டில் மரியாதை ராமன் கதைகள் தோன்றின. மரியாதை ராமன் நீதிபதியாக இருந்து வழக்குத் தீர்த்ததைக் கூறும் இந்தக் கதைகள் சிறிது காலத்துக்கு முன் தமிழ் நாட்டில் எல்லோருக்குமே தெரிந்திருந்தது. இப்போது அவை அநேக ருக்குத் தெரியாது. மரியாதை ராமன் கதைகளில் சிலவற் றைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்திருக்கிறோம். மரியாதை ராமன் என்பவன் உண்மையில் வாழ்ந்த ஒரு மனிதன் அல்ல; கற்பனைப் பாத்திரம்தான்.

குட்டிக் கதைகள்

'போது ஜனம்'

நான்கு பஞ்சு வியாபாரிகள்

ஒரு ஊரில் நான்கு பஞ்சு வியா பாரிகள் இருந்தார்கள். அவர்கள் தங்கள் கிட்டங்கியில் போட்டு வைத்திருக்கும் பஞ்சு போராக்களை எலி கடித்து நாசமாக்கி விடாம லிருப்பதற்காக, பூனை ஒன்றை வளர்த்து வந்தார்கள். அந்தப் பூனையின் மேல் நான்கு பேர்களுக் குமே அபாரப் பிரியம். அந்தப் பூனையின் நான்கு கால்களில் ஆளுக்கொரு காலைப் பகிர்ந்து கொண்டார்கள். அதாவது ஒவ் வொரு காலும் ஒவ்வொரு ஆளுக் குச் சொந்தமாம்! பூனையின்மேல் இப்படி அத்தியந்தப் பிரியம் அவர்களுக்கு!

ஒரு நாள் பூனையின் ஒரு காலில் ஒரு காயம் ஏற்பட்டுவிட்டது. அந் தக் காயத்தை ஆற்றுவதற்காக, அந்தக் காலின் "சொந்தக்காரன்" அதில் ஒரு துணியை எண்ணெ யில் நனைத்துச் சுற்றி வைத்துக் கட்டினான். பூனை நொண்டிக் கொண்டே ஓடிவிட்டது. அப்பால் சென்ற பூனை சந்தர்ப்பவசமாக அடுப்பங்கரைப் பக்கமாகப் போனது. எப்படியோ அதன் காலில் சுற்றி யிருந்த எண்ணெய்த் துணியில் தீப்பிடித்துக் கொண் டது. நெருப்பு சுடுவதைத் தாங்க மாட்டாமல், பூனை பக்கத்திலுள்ள பஞ்சுக் கிட்டங்கிக்குள் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தது. இதனால், அங்கிருந்த பஞ்சுப் போராக்களில் தீப்பிடித்து விட் டது. அணைப்பதற்கு முடியாதபடி தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

அவ்வளவு பஞ்சும் எரிந்து நாச மாகிவிட்டது. இனி என்ன செய் வது? காலின் சொந்தக்காரன் மீது, மற்ற மூன்று வியாபாரிகளும் பிராது போட்டார்கள். நீதி மன் றத்தில் நீதிபதியிடம் மூவரும் பின்வருமாறு முறையிட்டார் கள்:

"அந்த வியாபாரி தனக்குச் சொந்தமான பூனைக் காலில் எண்ணெய்த் துணியைச் சுற்றி வைத்திரா விட்டால், அதில் தீப்பிடித்திராது. அதில் தீப்பிடிக்கவில்லை என்றால், பஞ்சும் நாசமாகியிராது. அவன் எண்ணெய்த் துணியை பூனைக் காலில் சுற்றியதனால்தான் பஞ்செல்லாம் நாசமாகிவிட்டது. அதனால் எங்களுக்கு அவன் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும்."

நீதிபதியாக இருந்தவன் மரியாதை ராமன். இந்த விசித்திரமான வழக்கில் தீர்ப்புச் சொல்ல அவனை விட வேறு எந்த நீதிபதியால் முடியும்? பின் கண்டவாறு தீர்ப்பளித்தான் மரியாதை ராமன்:

"எண்ணெய்த் துணியைச் சுற்றி வைத்த வியாபாரிக்குத்தான் நீங்கள் மூவரும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். அவன் எந்தக் காலில் துணியைச் சுற்றி வைத்தானோ, அந்தக் காலில் காயமிருந்தது. காயமிருக்கும் காலை ஊன்றி பூனையால் நடக்க முடியாது. அதனால் அது காயப்பட்ட காலை மேலே தூக்கிக் கொண்டு, மற்ற மூன்று கால்களாலும் தான் நடந்திருக்க வேண்டும்; அதாவது உங்கள் மூவருக்கும் சொந்தமான கால்களால் தான் நடந்திருக்க வேண்டும். அது நடந்து செல்லப்போய்த் தான் துணியில் தீப்பிடித்து பிறகு பஞ்சிலும் தீப்பிடித்தது. அதனால் மொத்தப் பஞ்சின் மதிப்புத் தொகையில் நான்கில் ஒரு பங்கை நொண்டிக் காலின் சொந்தக்காரனுக்கு நீங்கள் கொடுத்துவிடுங்கள். ஏனென்றால், அவனுடைய பங்கைச் சேர்ந்த பஞ்சு நாசமாகி விட்டது அல்லவா?"

குற்றமுள்ள நெஞ்சு

ஒரு பெண், கோழி ஒன்றை வளர்த்து வந்தாள். அந்தக் கோழியைப் பக்கத்து வீட்டுக்காரி திருடி, திருடியதோடு நிற்காமல் கசாப்பு போட்டு சாப்பிட்டும் விட்டாள். கோழியைக் காணோமே என்று தேடிவந்த பெண், பக்கத்து வீட்டுக்காரியை விசாரித்தாள். பக்கத்து வீட்டுக்காரியோ, "கடவுள் சத்தியமாக உன் கோழியை நான் கண்ணால்கூடப் பார்க்கவில்லையே!" என்று பாசாங்கு பண்ணினாள். ஆனால் அந்தப் பெண்ணுக்கு பக்கத்து வீட்டுக்காரியின் மேல் தான் சந்தேகம். உடனே நீதிபதி மரியாதை ராமனிடம் போய்த் தன் சந்தேகத்தைச் சொல்லி முறையிட்டாள். பக்கத்து வீட்டுக்காரியைக் கூப்பிட்டு விசாரித்ததில் அவள் தான் திருடவே இல்லை என்று சாதித்தாள். அவளுடைய பாசாங்கைப் பார்த்த மரியாதை ராமனுக்கு எப்படியோ அவள் மீது சந்தேகம் உண்டாகிவிட்டது. ஆனாலும், வாதியையும் பிரதிவாதியையும் வீட்டுக்குப் போகும்படி சொல்லிவிட்டான்.

இருவரும் நீதிஸ்தலத்திலிருந்து கிளம்பிப் போய்க்கொண்டிருந்தார்கள். நீதிஸ்தலத்தின் வாசல் படியை அவர்கள் தாண்டுவதற்கு முன்பாக, மரியாதை ராமன் உரத்த குரலில்,

"இப்படிப்பட்ட திருடியும் உலகத்தில் இருக்கிறாளே! கோழியைப் பிடித்ததற்கு அடையாளமாக அவள் தலையில்கூட ஒரு கோழி இறகு இருக்கிறது. அந்தக் கோழி இறகுடன் வந்து,

'திருடவே இல்லை' என்று எவ்வளவு துணிவாகப் பொய் சொல்லு கிறாள்!'' என்று சொன்னான். உடனே "பளிச்'' சென்று கோழி திருடிய பெண் பயபீதியுடன் தன் தலையைத் தடவிப் பார்த்தாள். அவள் மீது சந்தேகம் கொள் வதற்கு இது ஒன்றே தக்க சாட்சிய மாகப் போய்விட்டது. உடனே அந்த இரண்டு பெண்களையும் திருப்பி அழைத்து தீரவிசாரித்த தில், திருடியவள் தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி நேரிட்டது. அதற்குரிய தண்டனை அடையும் படியும் நேரிட்டது.

திருடனுக்குத் திருடன்!

ஒரு காலத்தில் நான்கு திருடர்கள் இருந்தார்கள். வெகுகாலமாகத் திருட்டுத் தொழில் செய்து, விலை உயர்ந்த ஆபரணங்களைச் சேக ரித்து வைத்திருந்தார்கள். அந்த ஆபரணங்களை எல்லாம் ஒரு பித் தளைப் பாத்திரத்தில் போட்டுப் பத்திரமாக வைத்திருந்தார்கள்.

இந்த நான்கு திருடர்களும் ஒரு கிராமத்துக்கு வந்து சேர்ந் தார்கள். அங்கிருந்த ஒரு கிழவி யிடம், தங்கள் பாத்திரத்தைப் பத் திரமாக வைத்திருக்கும்படி சொல் லிக் கொடுத்து, ஒரு நிபந்தனையும் விதித்தார்கள். அதாவது, அந்தப் பாத்திரத்தை, அந்த நான்கு பேரும் ஒருமிக்க வந்து கேட்கும் போதுதான் திருப்பித்தர வேண் டுமே ஒழிய, தனியாகவோ, இரண்டு அல்லது மூன்று பேராகவோ வந்து கேட்கும் போது கொடுக்கக் கூடாது என்றும் சொன்னார்கள். கிழவியும் 'சரி' என்று ஒப்புக் கொண்டு பாத்திரத்தைப் பத்திரப் படுத்தி வைத்தாள்.

திருடர்கள் நால்வரும் கிழவி யின் வீட்டு வாசல் திண்ணையில் படுத்து இரவைக் கழித்தார்கள். விடிந்தது. தெருவழியாக ஒருத்தி மோர் விற்றுக்கொண்டு போனாள். திருடர்களுக்கு மோர் வாங்கிச் சாப்பிடவேண்டும் என்று ஆவல். அதனால் தங்களில் ஒருவனைப் பார்த்து, "கிழவியிடம் போய் ஒரு பாத்திரம் வாங்கி வா. மோர் வாங்கிக் குடிப்போம்'' என்றார் கள் மற்ற மூவரும். 'தனக்கு அதிர்ஷ்டம் பிறந்து விட்டது' என்று குதூகலத்துடன் அந்தப் பக்காத் திருடன் எழுந்து வீட்டுக் குள்ளே போனான். கிழவியிடம், "பாட்டி! நாங்கள் கொடுத்த பாத் திரத்தைக் கொடு'' என்று கேட் டான். கிழவி, "நான்கு பேரும் சேர்ந்து வந்து கேட்டால்தானே கொடுக்க முடியும். தனியாக நீ வந்திருக்கிறாய். உன்னிடம் கொடுக்க மாட்டேன்.'' என்றாள். அதற்குப் பக்காத்திருடன், "எல் லோரும் சேர்ந்துதான் பாத்தி ரத்தை வாங்கி வரும்படி சொல்லி என்னை அனுப்பினார்கள். உனக்கு சந்தேகமாக இருந்தால், இங் கிருந்தே வேண்டுமானாலும் அவர்க ளிடம் கேட்டுப் பாரேன்'' என்று சொன்னான். உடனே கிழவி உரத்த குரலில், "என்னப்பா, இவன் வந்து பாத்திரம் கேட்கி றானே! கொடுக்கட்டுமா?'' என்று கேட்டாள். வெளித் திண்ணையில் இருந்த திருடர்களும் விஷயம் புரியாமல், "கொடுத்து விடு, பாட்டி'' என்றார்கள். கிழவி அவர் கள் கொடுத்த பாத்திரத்தைக் கொடுத்துவிட்டாள். ஆபரணங்கள் உள்ள அந்தப் பாத்திரத்தை எடுத் துக் கொண்டு, வேறு வழியாகக்

கம்பி நீட்டி விட்டான் பக்காத் திருடன்.

"உள்ளே போனவன் ஏன் இன்னும் வரவில்லை? மோர்க் காரி காத்துக் கொண்டிருக்கிறாளே!" என்று சொல்லிக் கொண்டு மூவரும் உள்ளே வந்தார்கள். வந்தவர்களிடம், நடந்த கதையைச் சொன்னாள் கிழவி. மூன்று பேருக்கும் இடி விழுந்தது போலாய் விட்டது. உடனே மிகவும் கோபாவேசத்துடன், "நாங்கள் நான்கு பேரும் வந்து கேட்காதபோது நீ எப்படி பாத்திரத்தை எடுத்துக் கொடுக்கலாம்?" என்று கேட்டார்கள்.

கிழவி: நீங்கள்தானே கொடுக்கும்படியாக வெளியிலிருந்து சொன்னீர்கள்?

திருடர்கள்: நாங்கள் இந்தப் பாத்திரத்தையா சொன்னோம்?

கிழவிக்கு எந்தப் பாத்திரம் என்று எப்படித் தெரியும்? பக்காத் திருடன் முதல் நாள் கொடுத்த பாத்திரத்தைத் தானே கேட்டான்?

திருடர்களோ, தங்கள் பாத்திரத்தை தங்களிடம் எப்படியும் கிழவி கொடுத்தாக வேண்டும் என்று கூறி அந்த ஊர் நீதிபதியிடம் வழக்குத் தொடர்ந்தார்கள். நீதிபதி விசாரணை செய்து விட்டு, "நான்குபேரும் வந்து கேட்காத போது பாத்திரத்தைக்கொடுத்தது மகாதப்பு. நிபந்தனைப் படி கிழவி நடந்து கொள்ள வில்லை. அதனால் அவர்கள் கொடுத்த பாத்திரத்தை அவள் திருப்பிக் கொடுக்க வேண்டியதுதான்" என்று தீர்ப்புச் சொல்லி விட்டார்.

கிழவி வேறு வழி ஒன்றும் தோன்றாமல், மனத் துயரத்துடன் தெருவழியே நடந்து வந்தாள். தெருவில் ராமன் என்ற வாலிபன் மற்ற வாலிபர்களுடன் கோலி விளையாடிக் கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த கிழவியின் துயரத்தைப் பார்த்த ராமன் அவளை விசாரித்து, எல்லா விஷயங்களையும் அறிந்து கொண்டான். "அந்த நீதிபதி இடிவிழுந்து சாக வேண்டும்" என்று திட்டினான் ராமன். அந்தப் பக்கமாக அப்போது வந்து கொண்டிருந்த அரசாங்க உளவாளிகள் ராமன் திட்டியதைக் கேட்டுக் கொண்டார்கள். இதை நீதிபதியிடத்திலும் போய்த் தெரிவித்தார்கள். நீதிபதி ராமனை வரவழைத்து "இந்த வழக்கில் நியாயம் தவறாமல் உன்னால் தீர்ப்புச் செய்யமுடியும் என்றால் செய்யலாம்" என்றார். ராமன் அப்படியே நீதிபதி ஸ்தானத்தில் அமர்ந்து பின்வருமாறு தீர்ப்பளித்தான்:

"கிழவி இந்த மூன்றுபேரிடமும் பாத்திரத்தைத் திருப்பிக் கொடுப்பது நிபந்தனைக்கு விரோதமானதாகும். நான்குபேர் மொத்தமாக வந்து கேட்டால்தான் பாத்திரத்தைக் கொடுக்க முடியும். அதனால் இந்த மூன்றுபேரும், ஓடிப் போன மற்றொரு ஆளையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும்."

ஓடிப்போன பக்காத்திருடன் இனி அகப்படுவானா? திருடர்கள் மனம் உடைந்துபோய்த் திரும்பிச் சென்றார்கள். ராமன் நீதி வழங்கிய சாமர்த்தியத்தைக்கண்டு மெச்சி, அவனையே அந்த ஊருக்கு நீதிபதியாக்கினார்கள். ராமனை மிகவும் மரியாதையுடன், "மரியாதை

ராமன்" என்று அன்று முதல் அழைக்கத் தொடங்கினார்கள்.

தந்தைக்கு ஆற்றும் உதவி

மரியாதை ராமன் நீதிபதியான செய்தி அறிந்து அவனுடைய தகப்பனார் மிகவும் கவலை அடைந்தார். 'இவனுக்கு என்ன நீதி நிர்வாகம் தெரியும்? இவன் ஏதாவது ஒரு வழக்கில், அநியாயமாகத் தீர்ப்பளித்துவிட்டால் நரக தண்டனை அல்லவா கிடைக்கும்? ஆகவே, இவன் நீதிபதி பதவியிலிருந்து விலகவேண்டும்' என்று தீர்மானம் செய்துகொண்டு, மரியாதை ராமனிடம் தம் கருத்தைத் தெரிவித்தார். அவனோ நீதிபதி உத்தியோகத்தை நன்றாக நடத்தத் தனக்குத் தெரியும் என்று கூறி தகப்பனாரின் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டான்.

தகப்பனாரின் கவலை அதிகமாகிவிட்டது. "இவன் ஒரு காலத்தில் அநீதியான தீர்ப்பளித்து, அதனால் எத்தனையோ பேர் கஷ்டத்துக்குள்ளாக நேரிடலாம். அதை என் கண்களால் நான் எப்படிப் பார்த்துக்கொண்டிருப்பது? அதனால் இந்த இடத்தில் நான் இனி இருக்கக் கூடாது" என்று முடிவு கட்டிக்கொண்டு ஸ்தல யாத்திரை செய்யக் கிளம்பிவிட்டார் தகப்பனார்.

ஒரு கிராமத்தில் ஒரு சம்சாரியின் வீட்டு வாசல் திண்ணையில் ஒருநாள் இரவு அவர் தங்கும்படி நேர்ந்தது. அந்த சம்சாரிக்கு இரண்டு மனைவிகள். இளைய மனைவிக்கு மூத்த மனைவியிடம் பொறாமை; அத்துடன் இளையவள் ஒழுக்கம் கெட்டவளும்கூட. அவளுக்கு ஒரு குழந்தையும் இருந்தது. மூத்த மனைவியை ஒழித்துவிட இளையவள் அன்றிரவில் ஒரு சூழ்ச்சி செய்தாள். நடுச்சாமத்தில் எழுந்தாள். அப்போது, அவளுடைய கணவனும், அவளுடைய குழந்தையும், மூத்த மனைவியும் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். இளையவள் தன் குழந்தையைப் பக்கத்து அறைக்குக் கொண்டுபோய்க் கழுத்தை நசுக்கிக் கொன்றுவிட்டாள். கழுத்தை நசுக்கும்போது குழந்தை வீறிட்டு அழுதது. கணவனும், மூத்த மனைவியும் எழுந்து சென்று பார்த்தார்கள். வெளியில் படுத்திருந்த மரியாதை ராமனின் தகப்பனார், உள்ளே நடந்த சமாச்சாரங்களை எல்லாம் அறிந்துகொண்டார். உறங்காமல் படுத்திருந்ததால் அவருக்கு உண்மை என்ன என்பதும் தெரியும்.

இளைய மனைவி தன் குழந்தையைக் கொன்றுவிட்டதுடன், மரியாதை ராமனிடமும் போய் முறையிட்டாள்: "என் அருமைக் குழந்தையைக் கழுத்தை நசுக்கிக் கொன்றுவிட்டாள் என் சக்களத்தி. தனக்குக் குழந்தை இல்லையே என்ற பொறாமையினால் இப்படி அநியாயமாக என் ஒரே குழந்தையைக் கொலை செய்துவிட்டாளே!" என்று கதறிக் கண்ணீர் வடித்தாள். நீதிஸ்தலத்திற்கு மாறு வேடத்தில் வந்த மரியாதை ராமனின் தகப்பனாரும், "இந்த வழக்கில் நம் புத்திரன் உண்மையைக் கண்டுபிடித்து, நீதி வழங்கிவிட்டால், அவன் நீதிபதி வேலை பார்க்கும் தகுதி உடையவன்தான். நானும் மன நிம்மதியுடன் அவனு

டன் இருந்து காலத்தைக் கழிப்பேன்" என்று மனதிற்குள்ளேயே சொல்லிக்கொண்டார்.

மரியாதை ராமன் வெகு நேரம் விசாரித்தும் உண்மை புலப்படவில்லை. மூத்த மனைவி, தான் குற்றவாளி அல்ல என்று சொன்னாள். இளையவளோ, அநியாயமாகக் குற்றம் சாட்டிக்கொண்டே இருந்தாள்.

கடைசியில் மரியாதை ராமன் ஒரு யுக்தி செய்தான்:

"பெண்களே! நீங்கள் இருவரும் உங்களுடைய வாக்கு மூலங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே, மூன்று முறை நிர்வாணமாக இந்த நீதிஸ்தலத்துக்குள் சுற்றி வரவேண்டும்."

மரியாதை ராமன் இப்படி உத்தரவிட்ட மாத்திரத்தில் இளைய மனைவி தன் உடைகளை அவிழ்த்தெறியப் போனாள். மூத்த மனைவியோ இந்த அவமானத்துக்குப் பயந்து, "தருமத் துரைகளே! நான் நிர்வாணமாக இங்கே நிற்பதைவிட, நான்தான் கொலை செய்தேன் என்று வேண்டுமானாலும் ஒப்புக் கொள்ளுகிறேன்" என்று சொன்னாள்.

மூத்த மனைவி ஒழுக்கம் நிறைந்த உத்தமி என்பதையும், இளையவள் எப்படிப்பட்ட மான அவமானங்களுக்கும் அஞ்சாத துர்நடத்தைக்காரி என்பதையும் கண்டுகொள்ளுவது மரியாதை ராமனுக்குக் கஷ்டமான காரியமல்ல. இப்படிப்பட்ட பெண்தான், தானே தன் குழந்தையைக் கொன்றுவிட்டு அடுத்தவள் மீது பழி போடத் தயங்கமாட்டாள் என்பதை ஊகித்தறிந்து, இளைய மனைவிக்குத் தூக்குத் தண்டனை விதித்தான்.

தன் மகனுடைய புத்தி சாதுர்யத்தையும், நீதி வழுவாத நேர்மையையும் கண்ணுரக் கண்டு சந்தோஷித்த தகப்பனார் அன்று முதல் தம் மகனுடன் வசித்து வந்தார்.

சொத்து சேர்ந்த விதம்

இருபது வருஷங்களுக்கு முன் கையில் ஒன்றுமில்லாமல் பத்திரிகை ஆசிரியராக வந்த ஒருவர் சமீபத்தில் 50 ஆயிரம் பவுன் சொத்துடன் வேலையிலிருந்து நீங்கி ஓய்வு பெற்றதாக அறிகிறோம்.

இந்தச் சொத்து எப்படிச் சேர்ந்தது? கடுமையான உழைப்பு, சிக்கனம், மனச் சாட்சிக்கு விரோதமில்லாத பிரயத்தனம், தளராத விடா முயற்சி முதலியவற்றுடன் சமீபத்தில் காலமான மாமா ஒருவர் ஆசிரியருக்கென்று விட்டுப் போன சொத்தும் சேர்ந்து 50 ஆயிரம் பவுன் ஆனது. மாமா விட்டுப்போன சொத்து 49,990 பவுன்!

—ஆர்கவி

போய்ச் சாட்சிகள்

ஒருவன் காசிக்குப் போய் வர வேண்டும் என்று புறப்பட்டான். போவதற்கு முன், தன் நண்பனாகிய ஒரு வியாபாரியிடம் தன்னிடமிருந்த விலை உயர்ந்த ஒரு வைரத்தைக் கொடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கும்படியாகச் சொல்லி, காசி யாத்திரை செய்துவிட்டுத் திரும்பி வரும்போது தன்னிடம் அதைத் திருப்பித் தரவேண்டும் என்றும் கூறினான். வியாபாரியும் ஒப்புக்

கொண்டு வைரத்தை வாங்கிக் கொண்டான்.

அவன் காசி யாத்திரை செய்து விட்டுத் திரும்பிவந்தான். வந்து வைரத்தைக் கேட்டால், "மூன்று பேர் முன்னிலையில் உனக்கு நான் திருப்பித் தந்துவிட்டேனே!" என்று கையை விரித்தான் வியாபாரி. வியாபாரியின் மோசடியைக் கண்டு வருந்தி மரியாதை ராமனிடம் போய் எல்லா விபரங்களையும் சொன்னான் காசியாத்திரை செய்த ஆசாமி. வியாபாரி லஞ்சம் கொடுத்து, மூன்று பொய்ச் சாட்சிகளைத் தயார் செய்து அழைத்துக் கொண்டு நீதி ஸ்தலத்தில் ஆஜரானன். தான் வைரத்தைத் திருப்பிக் கொடுத்ததற்கு அந்த மூன்று பேரே சாட்சிகள் என்றான் வியாபாரி. மரியாதை ராமன் சாட்சிகளைப் பார்த்து, "வியாபாரி, உடையவனிடம் வைரத்தைத் திருப்பிக் கொடுத்தது வாஸ்தவம் தானா?" என்று கேட்டான்.

"வாஸ்தவமே" என்று ஒரு குரலில் மூவரும் பதில் சொன்னார்கள்.

உடனே மரியாதை ராமன் சேவகனைப் பார்த்து கொஞ்சம் களிமண் கொண்டு வரும்படி உத்தரவிட்டான். சேவகன் களிமண் கொண்டு வந்ததும், மரியாதை ராமன் மூன்று சாட்சிகளையும் பக்கத்தில் வரவழைத்து, "நீங்கள் மூன்றுபேரும் ஆளுக்குக் கொஞ்சம் களிமண்ணை எடுத்துக் கொள்ளுங்கள். வியாபாரி திருப்பிக் கொடுத்த வைரம் எவ்வளவு பருமன் உள்ளதோ, அவ்வளவு பருமனாக இந்தக் களிமண்ணால் ஒரு உருண்டை செய்யுங்கள்.' என்று கூறி, மூன்று பேரையும் தனித் தனி அறையில் கொண்டு போய் அடைத்து விட்டான். சிறிது நேரம் கழித்து, மூன்று பேரையும் திருப்பி அழைத்தான்; அவரவருடைய களிமண் உருண்டையைக் காட்டும்படி சொன்னான். மூன்று பேருடைய உருண்டைகளும் வேறு வேறு வடிவத்தில், வேறு வேறு அளவில் வித்தியாசப் பட்டு இருந்தன. உண்மையில் அந்த வைரத்தை இந்த மூன்று பேரும் பார்க்காததால்தான், தங்கள் மனக் கற்பனைக்குத் தோன்றியவாறு களிமண்ணைத் திரட்டியிருக்கிறார்கள்; அதனால் மூவரும் பொய்ச் சாட்சிகள் என்று அறிந்து வைரத்தைத் திருப்பிக் கொடுக்கும் படி வியாபாரிக்கு உத்தரவிட்டான் மரியாதை ராமன்.

சிக்கனமும் ஊதாரித்தனமும்

ஒரு ஊரில் எதிர் எதிர் வீடுகளில் இரண்டு பெண்கள் வசித்து வந்தார்கள். அவர்களில் ஒருத்தியிடம் இரண்டு பசுக்கள் இருந்தன. ஒரு நாள் பசு வைத்திருப்பவளிடம் எதிர் வீட்டுக்காரி வந்து ஆழாக்கு நெய் கடனாக வாங்கிக் கொண்டு சென்றாள். சில நாட்களில் நெய்க்கு உரிய காசைத் தந்து விடுவதாகவும் சொன்னாள்.

சில நாட்கள் சென்றன. நெய் கொடுத்தவள் காசு கேட்கப் போனாள். வாங்கியவளோ, "நானாவது, நெய் வாங்கியதாவது" என்று ஒரே விழுங்காக விழுங்கி விட்டாள்.

மரியாதை ராமன் கோர்ட்டுக்கு வழக்கு வந்துவிட்டது. நெய் வாங்கியவள், "நான் பணக்காரி. இந்த

த்ரித்திரம் பிடித்தவளிடமா கடன் வாங்குவேன்? கடனுக்கு நான் நெய் வாங்கியதாக இவள் சொல்லுவது சுத்தப் பொய் என்றாள். உடனே, மரியாதை ராமன் அவர்களை மறு நாள் வரும்படியாகத் தெரிவித்தான். அவர்கள் அப்படியே வீடு திரும்பினார்கள். மறுநாள் அவர்கள் வருவதற்குள்ளாகக் கோர்ட் கட்டடத்தைச் சுற்றிலும் தண்ணீரைக் கொட்டி சேறாக்கிவிடும்படி சொன்னான். மரியாதை ராமன் கோர்ட்டுக்கு வருகிறவர்கள் தங்கள் கால்களை முழங்கால் வரைக்கும் சேறாக்காதபடி நடந்து வர இயலாமல் செய்துவிட்டார்கள்.

மறுநாள் இரண்டு பெண்களும் கோர்ட்டுக்கு வந்தார்கள். இருவருடைய கால்களும் சேற்றில் ஆழ்ந்து ஆபாசமாக இருந்தன. உடனே மரியாதை ராமன் கால்களைக் கழுவுவதற்காக, ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு செம்பு நிறையத் தண்ணீர் கொடுக்கும்படி சொன்னான். அப்படியே ஒரே அளவுள்ள இரண்டு செம்புகளில் நிறையத் தண்ணீர் எடுத்துக் கொண்டுவந்து வைத்தார்கள். நெய் கடன் கொடுத்தவள் ஒரு செம்பை எடுத்துக் கொண்டுபோய் தன் இரண்டு கால்களையும் சுத்தமாகக் கழுவினாள். அப்படி சுத்தமாகக் கழுவிய பிறகும், செம்பில் தண்ணீர் மீதி இருந்தது. கடன் வாங்கியவளோ, தண்ணீர்ச் செம்பை எடுத்துப் போய், ஒரு காலைக் கழுவி முடிக்கு முன்பே, தண்ணீர் முழுவதும் காலியாகிவிட்டது. அடுத்த காலைக் கழுவுவதற்குத் தண்ணீர் இல்லாததால் அப்படியே வந்துவிட்டாள். இரண்டு பேர் கால்களையும் பார்த்தான் மரியாதை ராமன். 'பணக்காரி' என்று தன்னைச் சொல்லிக் கொள்ளுகிறவள் சிக்கனமில்லாதவள் என்பது, ஒரு காலைக் கழுவ ஒரு செம்பு நீரைக் கொட்டியதிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது என்றும், சிக்கனமில்லாதவளிடம் பணம் தங்கியிருக்க முடியாது என்றும், அவள் பணக்காரி என்பதை நம்ப முடியாது என்றும், அவள் நிச்சயம் கடன் வாங்கியிருப்பாள் என்றும் தீர்மானித்து, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்துவிடும்படியாக உத்தர விட்டான்.

*

அவனுடைய சந்தோஷம்

அநேக வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து, ஸ்காத்லாந்து ஆகிய இரு நாடுகளின் எல்லைப்புறப் பிரதேசத்தில் ஒரு குடியானவன் வசித்து வந்தான். அவனுக்கு ஒரு சந்தேகம், 'நாம் இங்கிலாந்தில் வாழ்கிறோமா அல்லது ஸ்காத்லாந்தில் வாழ்கிறோமா?' என்று. இந்தச் சந்தேகத்தைத் தெளிவாக்கும்படி அந்தக் குடியானவன் ஒருவனிடம் கேட்டான்.

அதற்கு அந்தப் புதிய ஆள், "நீ இங்கிலாந்தில் தான் வசிக்கிறாய்" என்று கூறினான்.

உடனே குடியானவன் சந்தோஷமிகுதியால் கூறியதாவது: "நல்ல வேளை கடவுளே! இனிமேல் ஸ்காத்லாந்தின் குளிர்கால விறைப்பில் கஷ்டப்பட வேண்டியதில்லை!"



சுதந்திர தினத்தன்று (15-8-49) டில்லி ராஜ கட்டத்தில்
பண்டித நேரு மரம் நட்டு தண்ணீர் விடுகிறார்

அரம்பை

(கி. பி. 4-ம் நூற்றாண்டின் சிருஷ்டியான இந்தக் காந்தார சிற்பம் காபூல் நகரக் கண்காட்சியில் வைக்கப்பட்டது)

அன்னம்

(இங்கிலாந்தில் தனிக் கவனம் செலுத்தி வளர்க்கப்படும் ராஜ அன்னத்தில் ஒன்று அடை காக்கிறது)

சென்ற மாதம் இந்தியாவுக்கு வந்த இந்தோனேஷ்யக்
குடியரசின் பிரதம மந்திரி டாக்டர் முகமது ஹட்டாவை
டில்லி விமான நிலையத்தில் பண்டித நேரு
வரவேற்கும் காட்சி

டில்லி செங்கோட்டையில் சுதந்திர தினத்தன்று ராணுவ அணிவகுப்பு

ஒரு ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியரின் வாழ்க்கையை வைத்து இந்தச் சிறுகதையை அழகாகப் பின்னியிருக்கிறார் எழுத்தாளர். மனோ தத்துவத்தைச் சிறுகதையின் மூலம் சித்திரித்து மகத்தான வெற்றியும் அடைந்திருக்கிறார்.

அவன் முடிவு

o

ரா. வே. ரங்கைநாதன்

அந்த ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் என்றுமில்லாத கலகலப்பு அன்று மாலையில் காணப்பட்டது. மாணவர்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டு, பள்ளிக்கூட வேலியின் எல்லைக்குள் கிடக்கும் குப்பைகூளங்களை அகற்றுவதிலும், கள்ளிச் செடிகளுக்குத் தண்ணீர் வார்ப்பதிலும் முனைந்திருந்தார்கள்.

வேலை ஒரு தினுசாக முடிந்ததும், பக்கத்துத் தோட்டத்துக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக்கொடுத்துக் கொண்டிருந்த பாடசாலையின் தலைமை ஆசிரியனான சுந்தரபாண்டி பள்ளிக்கூடத்திற்குள் வந்து, மாணவர்களை நோக்கி மணியடிக்கும்படி உத்தரவிட்டான். குழந்தைகளில் சிலர் விழுந்தடித்துக்கொண்டு மணியை நோக்கி ஓடினார்கள்.

மணியோசை கேட்டதும் எல்லா மாணவர்களும் தங்கள் தங்கள் சிலேட்டு, புத்தகங்களை எடுத்துக் கொண்டு ஒரே வரிசையில் வந்து நின்றார்கள். நெருக்கித் தள்ளிய குழந்தைகளை ஆசிரியன் அதட்டிப் பயமுறுத்தி வரிசையை ஒழுங்குபடுத்தியதும், கடவுள் வாழ்த்து பாடப்பட்டது. கடவுள் வாழ்த்து பாடி முடிந்ததும், 'இன்ஸ்பெக்டர் வாழ்த்'தையும் பாடி ஒத்திகை காட்டினார்கள் மாணவர்கள். பாடி முடிந்ததும் மாணவர்களை நோக்கிப் பிரசங்கத் தோரணையில் ஆசிரியன் சில வார்த்தைகள் கூறத் தொடங்கினான்:

"பிள்ளைகளே! நாளை காலையில் உங்களையும், நமது பள்ளிக்கூடத்தையும் பார்வையிடுவதற்காக கனம் டெப்டி இன்ஸ்பெக்டர் ஐயா அவர்கள் வருகிறார்கள். நாளைக் காலையில் நீங்கள் விழித்தெழுந்ததும் குளித்துவிட்டு, சுத்தமான நல்ல வேஷ்டி கட்டிக்கொண்டு, சட்டை வைத்திருப்பவர்கள் சட்டையும் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும். சட்டை போடுபவர்கள் மறக்காமல் பித்தான் அல்லது ஊக்குக் குத்திக்கொள்ள வேண்டும்...நெற்றியில் நிரம்பத் திருநீறு பூசி, பொட்டும் வைத்துக்கொண்டு, தலையில் நன்றாக எண்ணெய் தடவி முடியை வாரி விட்டுக்கொண்டு, நகங்களையும் சுத்தமாக வெட்டிவிட்டு, எல்லாப் புஸ்தகங்களையும் நோட்டுகளையும் ஞாபகமாய் எடுத்துக்கொண்டு, வராத பிள்ளைகளையும் பார்த்துக் கூட்டிக்கொண்டு, அதிகாலையில் தவறாமல் பள்ளிக்கூடத்திற்கு வந்து சேரவேண்டும். மாணவிகள் மறக்காமல் கோலாட்டக் கம்புகளைக் கொண்டுவர வேண்டும்...... இன்ஸ்பெக்டர் ஐயா நமது பள்ளிக்

கூடத்திற்குள் நுழைந்ததும் எல்லோரும் ஒன்றுபோல் வலது கையை நெற்றியில் வைத்துக்கொண்டு 'ஐயா சலாம்' என்று சொல்ல வேண்டும். இன்ஸ்பெக்டர் அவர்கள் வந்து உட்கார்ந்ததும் எல்லோரும், 'இன்ஸ்பெக்டர் வாழ்த்து'ப் பாட்டை—நீங்கள் இப்போது பாடிய பாட்டை—பாட வேண்டும். பிறகு இன்ஸ்பெக்டர் ஐயா கேட்கும் கேள்விகளுக்குத் தைரியத்தோடு, உற்சாகமாகப் பதில் சொல்ல வேண்டும். ......சரி; சத்தம்போடாம போங்க!" என்று கூறி முடித்தான்.

வரிசையாகப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறிய குழந்தைகள், உபாத்தியாயர் கண் மறைந்ததும் கூச்சல் போட்டுக்கொண்டு வீடுகளை நோக்கி ஓடினார்கள். குழந்தைகள் சென்றதும் சுந்தரபாண்டியின் ஒரே சக ஆசிரியரான உபாத்தியாயினி பொன்னம்மாள் சுந்தரபாண்டியை நெருங்கி, "அப்படின்னா நானும் போயிட்டு வரட்டுமா ஸார்?" என்று கேட்டாள்.

"ஆஹா! போயிட்டு என்னாளையும் விடக் கொஞ்சம் முன்னாடியே நாளைக்கு வந்திடுங்க" என்றான் சுந்தரபாண்டி. ஆசிரியை அகன்றதும், மீண்டும் ஒருமுறை அந்தப் பாடசாலைக்குத் தான் செய்திருக்கும் ஜோடனைகளைச் சுற்றிப்பார்க்க சுந்தரபாண்டி கிளம்பினான்.

2

ஒரு முள் வேலி சூழ்ந்த சதுரமான நிலம். அதிலுள்ள பாதையில் ஒரு பழைய துத்தநாகத் தகடு 'கதவு' என்ற பெயரோடு இருந்தது. உள்ளே இரண்டு அறைகள். ஒன்று, மண் சுவர் எழுப்பப்பட்டு முகடு பனை ஓலையால் வேயப்பட்டிருந்தது. அந்த அறையிலேதான் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது வகுப்புக்கள் இருந்தன. அந்த மூன்று வகுப்புக்கும் சுந்தரபாண்டிதான் கல்வி கற்பித்தான்.

அடுத்த அறை, குட்டிச் சுவரின் மேல் மூங்கில் தட்டியைப் பொருத்தி வைத்த சுவரை யுடையது. முதலிரண்டு வகுப்பும் அதில்தான் நடைபெற்றது. அவ்விரண்டு வகுப்பையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு பொன்னம்மாவைச் சேர்ந்தது.

ஐந்தாவது வகுப்பறைத் தளத்தில் புதிதாக வெண்மணல் பரப்பப் பட்டிருந்தது. அந்த அறைக்குள், கால்கள் முன்னும் பின்னும் இழுத்துக்கொண்டு போகும் ஒரு கிழட்டு மேஜையும், கை யொடிந்த நாற்காலி யொன்றும், வெளிறிப் போன கரும்பலகை யொன்று மிருந்தது. அவ்வறையின் வெளித் தாழ்வாரத்தில் 'மணி' என்று பெயர் படைத்த ரயில் தண்டவாளத் துண்டு ஒன்று தொங்கிக் கொண்டு கிடந்தது.

உபாத்தியாயினியின் அறைக்குள், அவள் உட்காருவதற்காக ஒரே ஒரு 'ஸ்டூல்' மாத்திரமுண்டு.

இரு அறைகளையும் இணைக்கும் குறுகிய நடை பாதையின் இரு மருங்கிலும் கள்ளிச் செடிகள் வைத்து வளர்க்கப்பட்டிருந்தன. 'தோட்டம்' என்ற பெயரோடு ஒரு குறுகிய இடமிருந்தது. அதில் சில சூரியகாந்திச் செடிகளும், சில சீனியாவரைச் செடிகளும், வளராது முடங்கிக் கிடக்கும், 'குரோட்டன்ஸ்' என்று பெயர் பெற்ற சில செடிகளுமுண்டு. இவ்வளவுதான் அந்தப் பள்ளிக்கூடத்தின் உருவம்.

சுந்தரபாண்டி தனது வகுப்பறைக்குள் நுழைந்தான். இன்ஸ்பெக்டரின் விஜயத்தை முன்னிட்டு தேசப் படமும், தாலுகாப் படமும் சுவரில் மாட்டப்பட்டிருந்தன. மானேஜரின் வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்டு, தற்காலிகமாகத் தொங்கவிடப்பட்டிருந்த சில படங்களும் அங்கே காட்சி யளித்

தன. சுவரின் உச்சியில் பல வர்ணங்களாலும் அழகாக எழுதப்பட்டிருந்த "அறஞ் செய விரும்பு" போன்ற 'ஆத்திச் சூடி' செய்யுட்களும் மனதைக் கவர்ந்தன. குழந்தைகளின் கைவேலைத் திறனைக் காட்டுவதற்காகப் பனை ஓலையால் முடையப்பட்ட கூடு, பாய் முதலியவை விட்டங்களில் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தன. களி மண்ணால் செய்யப்பட்ட சில உருவங்களும் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்தன. இரண்டு அறைகளின் முகட்டையும் பிணைத்து நூலால் கோத்துக் கட்டப்பட்டிருந்த வண்ணக் காகித தோரணங்கள் காற்றில் சல சலத்தன. ஆடம்பரமற்ற அந்தப் பள்ளிக்கூடத்திற்கு இவ்வித எளிய ஜோடனை செய்திருப்பது, ஒரு கிராமாந்தர ஏழை இளம்பெண்ணுக்கு மணக்கோலம் செய்யப் பட்டிருப்பதைப் போலிருந்தது.

சுந்தரபாண்டி நாற்காலியில் உட்கார்ந்து மேஜையைத் திறந்து 'இன்ஸ்பெக்ஷன்' நோட்டை எடுத்துப் புரட்டினான். அப்பாடசாலை ஆரம்பிக்கப் பட்ட நாளிலிருந்து அங்கு விஜயம் செய்த ஒவ்வொரு டெப்டி இன்ஸ்பெக்டரின் அதிருப்தியும் அந்த நோட்டில் பதிந்து கிடந்தது.

'நாளைக்குத்தான் நாம் இவ்வளவு நாளும் பள்ளிக்கூடத்திற்காக உழைத்த உழைப்பெல்லாம் மதிப்பிடப்படும். இத்தனை நாளாக இந்தப் பள்ளிக்கூடத்தின் மீதிருந்த அவப் பெயர் நாளை விஜயம் செய்யும் கல்வி அதிகாரியால் மாற்றப்படும். மானேஜ்மெண்டாரின் குறைகள் ஒன்றும் தீர்க்கப்படாமல் முன்போலவே இருந்தாலும் ஆசிரியர் சம்பந்தப்பட்ட குறைகள் நிவர்த்திக்கப் பட்டுவிட்டன அல்லவா?...நாளை வரும் இன்ஸ்பெக்டர், 'பள்ளிக்கூடமும் மாணவர்களும் சுத்தமாக யில்லை' என்றோ, 'மொத்தத்தில் மாணவர்கள் குறைவு' என்றோ, 'ஆஜர் குறைவு' என்றோ,

> ## விதி
>
> வாலிபத்திலேயே மரணமடைய வேண்டும் என்ற பிராப்தம் ஒருவனுக்கு இருக்கும் என்றால், அவன் வாலிபத்திலேயே விதவையாகும் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்தே தீருவான்.
>
> —வாங் சுங்

'கல்வி பயிற்சி போதாது' என்றோ, 'பள்ளிக்கூடத்தின் தஸ்தாவேஜுகள் சரியாக வைக்கப்படவில்லை' என்றோ குற்றஞ் சாட்ட முடியாதல்லவா? இப்படி எண்ணிய சுந்தரபாண்டி பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்திற்காக தான் செய்த சில காரியங்களையும் நினைவு கூர்ந்தான்.

சுந்தரபாண்டி ஓய்வு நேரங்களில் ஊருக்குள் புகுந்து,படிக்காத குழந்தைகளின் பெற்றோர்களிடம் போய்,கல்வியின் மாண்பைப் பற்றியும், குழந்தைகளுக்குக் கல்வி எத்தகைய இன்றியமையாத தேவை யென்பதைப்பற்றியும் பிரசங்கஞ் செய்ய ஆரம்பித்து விடுவான். இவனது உபதேசத்தைக் கேட்டு மனம் மாறுவிட்டாலும், இவனுடைய நச்சரிப்பைப் பொறுக்க முடியாமல் சில பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள். சில பெற்றோர்களுக்கு வந்த கடிதத்தைப் படித்துச் சொல்லுதல், கடிதம் எழுதிக் கொடுத்தல் போன்ற பல உதவிகளைச் செய்து, பணிவோடு கூடிய இன் சொல்லினால் அவர்களுடைய மனதைக் கவர்ந்து, அவர்களது பிள்ளைகளையும் பிடித்துக்கொண்டு போய் பள்ளிக்கூடத்தில் சேர்த்தான். தான் மிகுந்த சிரமப்பட்டு மிகுத்து வைத்த பணத்தைக்கொண்டு சில ஏழைச் சிறுவர்களுக்குப் புஸ்தகங்கள் வாங்கிக் கொடுத்து, அவர்களிடத்தில் ஒருவித பாத்தியதை உண்டாக்கிக்

கொண்டான். அந்தச் சிறுவர்கள் பள்ளிக்கூடத்தை மறந்துவிட்டு எங்கேயாவது வேலை செய்யக் கிளம்புகையில் அல்லது விளையாடக் கிளம்புகையில், இடையில் பிடித்து நிறுத்தி, பள்ளிக்கூடத்திற்கு அவர்களை இழுத்துக்கொண்டுவரும் அந்த பாத்தியம் அவனுக்கு உரிமையளித்தது.

ஒவ்வொரு நாளும் காலையில் பள்ளிக்கூடம் ஆரம்பமாகு முன்பு ஊருக்குள் புகுந்து, பள்ளிக்கூடத்திற்கு வர கள்ளப்படும் மாணவர்களையெல்லாம் உடும்புப் பிடியாகப் பிடித்து வந்து 'ஆஜர் குறைவு' என்ற அவச் சொல்லுக்கு இடமில்லாதபடி பார்த்துக் கொண்டான்.

இதற்கிடையில் அவனுடைய முன்னேற்றத் திட்டத்திற்கு மானேஜர் போட்ட சில முட்டுக்கட்டைகளும் அவன் நினைவிற்கு வரவே செய்தன. எவ்வளவோ காலமாக அவன் மன்றாடியும், ஒரு குறையாக எத்தனையோ இன்ஸ்பெக்டர்கள் எழுதி வைத்தும், பள்ளிக்கூடத்திற்கு ஒரு கடிகாரம் வாங்கிக் கொடுக்க மானேஜர் மறுத்து விட்டார். அவர் சந்தோஷமாக இருக்கும்போது பார்த்து எத்தனையோ நாள் சொல்லியும் பள்ளிக்கூட மேஜை, நாற்காலிகளைப்பற்றி அவர் கவனிக்கவே யில்லை. தம்முடைய வேலைக்காரர்களின் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அழைக்கக் கூடாதென்று கண்டிப்பாகத் தடை விதித்து விட்டார்.

அதற்குமேல் மானேஜரின் செயலைப்பற்றிச் சிந்திக்கவில்லை. நேரமாகி விட்டதால் 'இன்ஸ்பெக்ஷன்' நோட்டை மேஜைக்குள் வைத்துவிட்டு கதவைப் பூட்டிவிட்டு வெளியேறினான். பாடங்களைத் திருப்திகரமாய் படித்துவிட்டுத் தனது படிப்புத் திறனைப் பெற்றோருக்கும் மற்றோருக்கும் காட்டுவதற்காகப் பரீட்சையை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருக்கும் ஊக்கமுள்ள மாணவனின் மனோ நிலையைப்போல், நாளை வரப்போகும் இன்ஸ்பெக்டரை எதிர்பார்த்திருக்கும் சுந்தரபாண்டியின் மன நிலையும் இருந்தது.

3

சுந்தரபாண்டி மானேஜரின் வீட்டை நோக்கி விரைந்து நடந்து வந்தான். அப் பாடசாலை மானேஜரான கந்தசாமி முதலியார் அந்த வட்டாரத்திலேயே பெரிய நிலச்சுவான்தார். பள்ளிக்கூடத்தை அவர் லாபங் கருதி நடத்தினாரே யொழிய பரோபகாரங் கருதி நடத்தவில்லை. சுந்தரபாண்டிக்கு சர்க்கார் நிர்ணயித்த சம்பளம், அலவுன்ஸையுஞ் சேர்த்து நாற்பத்தி ஒன்பது ரூபாய். இதில் மானேஜர் கையிலிருந்து கொடுக்க வேண்டிய ஐந்து ரூபாயும் சுந்தரபாண்டிக்குக் கிடையாது. அதோடு ஒவ்வொரு மாதமும் "பள்ளிக்கூட கட்டட நிதி'க்காக என்று கூறி, சுந்தரபாண்டி சம்பளத்திலும், உபாத்தியாயினியின் சம்பளத்திலும், ஐந்து ரூபாய்களைப் பிடித்துக்கொண்டுதான் மானேஜர் கொடுப்பார். ஆனால் அவர் எப்பொழுது புதிய கட்டடம் கட்டப் போகிறார் என்பது யாருக்கும் தெரியாத விஷயம். பள்ளிக்கூடத்தின் நிலைமை எவ்வளவு சீர்கேடாக இருந்தபோதிலும், கல்வி அதிகாரிகளைச் 'சரி' செய்து சர்க்காரின் 'கிராண்ட்' தொகை குறைந்து விடாதபடிப் பார்த்துக் கொள்ளும் சாமர்த்தியம் அவருக்குண்டு.

சுந்தரபாண்டிக்குப் பள்ளிக்கூடத்திலுள்ள வேலைகளைத் தவிர மானேஜரின் வீட்டிலும் சில விசேஷ வேலைகளுண்டு. விடியற்காலத்தில் வந்து மானேஜரின் தோட்டத்திலுள்ள தென்னங் கன்றுகளுக்குத் தண்ணீர் இறைக்கவேண்டிய பொறுப்பு சுந்தரபாண்டியைச் சேர்ந்தது. அதோடு மானேஜர் வீட்டு வரவு—செலவு கணக்குகளையும் அவன்தான் எழுத

வேண்டும். மானேஜரின் பேரக் குழந்தைகளுக்கு 'டியூஷன்' படித்துக் கொடுக்கும் பொறுப்பும் அவனைச் சார்ந்ததுதான். அதற்குச் சம்பளம் என்று ஒன்றுங் கிடையாது. சும்மா 'சந்தோஷ'மாகத்தான் படித்துக் கொடுத்தான்.

மானேஜரின் வீட்டில்தான் சுந்தர பாண்டிக்குச் சாப்பாடு. சாப்பாட்டிற்கென்று இருபத்தைந்து ரூபாயைப் பிடித்துக்கொண்டு விடுவார் மானேஜர். சாமான்களை வைத்துக் கொள்வதற்காகவும், நித்திரை செய்வதற்காகவும் ஊரின் மத்தியிலுள்ள தனது ஒரு சிறு பழைய வீடொன்றைச் சுந்தரபாண்டிக்கு மானேஜர் கொடுத்திருந்தார். அதற்கு வாடகை யென்று சொல்லி அவனது சம்பளத்தில் இரண்டு ரூபாயைப் பிடித்துக் கொண்டு விடுவார். கடைசியில் சம்பளம் என்று சுந்தரபாண்டியின் கைக்கு வருவதெல்லாம் பன்னிரெண்டு ரூபாய்கள்தான். அதில் பத்து ரூபாய்களைத் தன் கிராமத்திலிருக்கும் தாயாருக்கு அனுப்பிவிடுவான் அவன்.

சுந்தரபாண்டி மானேஜரின் வீட்டை வந்தடையும்போது லேசாக இருட்டி விட்டது. மானேஜரின் பேரக் குழந்தைகளுக்கு 'டியூஷன்' படித்துக் கொடுத்துவிட்டு, ஒரு வேலைக்காரன் வெளியே கொண்டு வைத்தச் சோற்றையும் புசித்துவிட்டு. கையைத் துடைத்தவாறு மானேஜரை பார்க்க வந்தான் அவன்.

தலைவாசல் திண்ணையின் ஒரு கோடியில் ஈஸிச்சேரில் சாய்ந்து கிடந்தார் மானேஜர். அவர் பக்கத்தில் ஒரு கம்பியில் தொங்கிக் கொண்டு கிடந்த 'ஹரிக்கேன் லைட்' மங்கி, மங்கி எரிந்துகொண்டிருந்தது. அவருக்கு முன்னால் இரண்டு வேலையாட்கள் கையைக் கட்டியவாறு நின்று கொண்டு ஏதேதோ சொல்லிக் கொண்டு நின்றார்கள்.

மானேஜரின் முன்னால் வந்து நின்றதும் சுந்தரபாண்டி தோளில் கிடந்த துண்டை யெடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு இரு கைகளையுங் கூப்பி அஞ்சலி செய்தான்.

அவனுடைய வணக்கத்தை அங்கீகரிக்கும் பாவனையில் அவர் தலையை அசைத்துவிட்டு, "என்ன சுந்தரம்! நாளைக்கு இன்ஸ்பெக்டர் வாராரமப்பா! பள்ளிக்கூடத்த யெல்லாம் ஒழுங்கா வச்சிருக்கிறாயாப்பா?" என்று கேட்டார்.

"எவ்வளவு ஒழுங்காக யிருக்க முடியமோ அவ்வளவு ஒழுங்கா யிருக்கையா! நாளைக்கி வர்ர இன்ஸ்பெக்டர் முன்னப் போல கண்டபடி நம்ம பள்ளிக்கூடத்தைப் பத்தி எழுதி வைச்சிற முடியாது" என்று உறுதி தொனிக்க உற்சாகத்தோடு கூறிவிட்டுத் தரையில் உட்கார்ந்தான் சுந்தர பாண்டி.

மானேஜர் அசட்டுச் சிரிப்பொன்று சிரித்துவிட்டு, வேலைக்காரன் ஒருவனைப் பார்த்து, "டேய் முத்து! நீ நாளைக்கி காலம்பற நம்ம மாந்தோட்டத்து குத்தகைக் காரங்கிட்ட போயி 'எஜமான் சொன்னாக, இன்ஸ்பெக்டருக்குக் குடுக்கிறதுக்கு ஒரு ஐம்பது மாம்பழம் கொண்டு வரணுமாம்'ன்னு சொல்லு. 'மாம்பழம் துரும்பா யிருந்தாலும் பரவாயில்லை. பார்வைக்கு கொஞ்சம் பெருசா, அழகாத் தெரியணும், அவ்வளவு தான்,'னும் சொல்லு. சொல்லிப்பிட்டு இன்ஸ்பெக்டர் வர்ரத்துக்குள்ள நீ இங்கே வந்து, அவருக்கு இளநீர், இளநீர் பறிச்சிக் குடுக்கத் தயாராயிருக்கணும். தெரியிதா?" என்றார்.

"நல்லது எஜமான்!" என்றான் அவன்.

மானேஜர் அடுத்தவனைத் திரும்பிப் பார்த்து, "நாளைக்கி மாத்திரம் உன்னுடைய பயல்களை யெல்லாம்

பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவை" என்று உத்தரவிட்டார்.

"உத்தரவு சாமி!" என்றான் அவன்.

மானேஜர் சுந்தரபாண்டியை நோக்கி, "நாளைக்கி இவனுடைய பயல்கள் ரெண்டுபேரு பள்ளிக்கூடத்துக்கு வருவான்கள். வராத ரெண்டு பயல்களுடைய பேரை அவன்களுக்குக் குடுத்து, வந்திருக்கதா ரிஜிஸ்டர்ல 'மார்க்' பண்ணி வச்சிறு" என்றார்.

சுந்தரபாண்டிக்கு அந்த சூரத்தனமான வேலை நேர்மையானதாகப் படவில்லை.

"இன்ஸ்பெக்டர்களே பொதுவா ஒரு மாதிரி முழிக்கிற பையன்களைப் பாத்துத் தானே கேள்வி கேட்கிறது வழக்கம். இந்தப் பயல்கள் கிட்ட இன்ஸ்பெக்டர் என்னதாவது கேட்டா, இவன்கள் வாய்க்குவந்தபடி உளற ஆரம்பிச்சிடக் கூடாதே?" என்று சுந்தரபாண்டி தனது கவலையை வெளியிட்டான்.

மானேஜர் 'கட, கட' வென்று சிரித்து விட்டு, "அடடா! படிப்பு எப்படியும் இருக்கட்டும். மொதல்ல 'ஆஜர் நல்லா யிருக்கு'ன்னுவது இன்ஸ்பெக்டர் மனதில் பட்டிடட்டும். விளங்குகுதா?" என்று கேட்டு விட்டு நீண்டு நிமிர்ந்து ஈஸிச் சேரில் சாய்ந்தார்.

"உம்" என்றான் சுந்தரபாண்டி. சற்று நேரம் மௌனம் நீடித்தது. அதற்குள் மழை லேசாகத் தூற ஆரம்பித்தது.

சற்று நேரத்தில் மானேஜர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "ஆமாப்பா! இன்ஸ்பெக்டரா வரப் போறவர் யாருன்னு தெரியுமா உனக்கு? ஒங்க ஊர்க்காரர் தானுமே!" என்றார்.

சுந்தரபாண்டி ஆச்சரியத்துடன், "யாரையா அது?" என்று கேட்டான்.

"ஒங்க ஊர் பெரிய பண்ணையார் இருந்தாரே பொம நாயகம் பிள்ள, அவருடைய மூத்த மகனும்" என்று மானேஜர் சொன்னாரோ, இல்லியோ, உற்சாகத்தினால் பிரகாசித்துக் கொண்டிருந்த சுந்தரபாண்டியின் முகம் அப்போது தோன்றிய வான மண்டலத்தைப் போல் இருண்டு விட்டது. அவனுடைய மூச்சுக் காற்றும் உஷ்ணமாக வெளிவந்தது. இடி, மின்னல் போன்ற எத்தனையோ சிந்தனைகள் ஒருங்கே அவன் மனதைக் குழப்பி அவனுடைய சிந்தனையைச் சிதறடித்தன. மானேஜர் விடாமல் பேசிக்கொண்டே போனார். அவனுடைய கவனம் மீண்டும் மானேஜரின் பேச்சில் லேசாகக் கவியும் போது, அவர், "இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு நான் போனப்போ உன்னைப் பத்தியும் லேசா அவர் விசாரித்தார்... ஏதோ ஊர் அபிமானத்த வைச்சாவது உன்னுடைய உழைப்பை உயர்த்தி எழுதிவைப்பார், இல்லையா?" என்றார்.

சுந்தரபாண்டி பேயால் அறையப் பட்டவனைப்போல் சுவரில் சாய்ந்து உட்கார்ந்தான். அவன் வாயிலிருந்து எந்த வார்த்தையும் வெளி வரவில்லை. ஐந்து நிமிச நேரங் கழிந்ததும் அவன் எழும்பி, "நேரமாச்சி; நான் போயிட்டு வாரேனையா" என்று கூறிவிட்டு, வேகமாக வாசல்படியில் இறங்கினான்.

"என், இந்த மழத் தூத்தல் நின்ன பிறகு போயேன்" என்றார் மானேஜர். "அதப்பற்றி பரவாயில்லை ஐயா" என்று கூறிவிட்டு சுந்தரபாண்டி போய்விட்டான். அவன் எந்நாளும் இரவில் வீட்டுக்குப் போகும்போது தவறாமல் மானேஜருக்கு ஒரு கும்பிடு போடுவது வழக்கம். ஆனால் இப் போது அவன் கும்பிடாமல் போய் விட்டது மானேஜருக்கு ஒரு குறையாகவே மனதில் தோன்றியது.

சுந்தரபாண்டி வீட்டை யடைந்ததும் நனைந்து போயிருந்த தனது

உடைகளை மாற்றிக் கொள்ளவுமில்லை. சுவரொட்டி விளக்கைப் பொருத்தவுமில்லை. நேராகப் போய், நாடியில் கை ஊன்றிய வண்ணம் அவனுடைய 'டிரெங்' பெட்டியின்மீது உட்கார்ந்து விட்டான். அவனுடைய பேதலித்த புத்தி பின்னோக்கிப் பாய்ந்தது.

4

சுந்தரபாண்டி ஒரு பரம ஏழை விவசாயியின் மகன். தந்தைக்கு அவ்வளவு இஷ்ட மில்லாதபோதிலும் தாயாருடைய ஆதரவினாலும், தாய் மாமனுடைய உதவியாலும் அவ்வூர் உயர்தர ஆரம்பப் பாடசாலையில் படித்து வந்தான் அவன். அவ்வூர் பெரிய பண்ணையார் மகன் ராமச்சந்திரன் சுந்தரபாண்டியின் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். ராமச்சந்திரன் மண்டைக்கர்வம் பிடித்தவன். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள், மாணாக்கர்கள் எல்லோருமே ராமச்சந்திரனை ஓரளவு கௌரவமாக நடத்தி வந்தார்கள். சுந்தரபாண்டி மாத்திரம் அவனை மதிப்பதில்லை. ராமச்சந்திரன் செய்யும் விஷமங்கள் அனந்தம். அவன் செய்யும் விஷமங்கள் ஏதாவது கண்டுபிடிக்கப் பட்டுவிட்டால் உபாத்தியாயர்கள் அதற்கு வேறு விதமாக வியாக்யானம் செய்து அவனை மன்னித்து விடுவது வழக்கம்.

சுந்தரபாண்டியின் தகப்பனார் பெரும்பாலும் பெரிய பண்ணையாரின் வயல்களில்தான் வேலை செய்வார். பண்ணையாரின் மகனை ராமச்சந்திரனை எப்போதாவது அவர் கண்டு விட்டால், மரியாதையால் உடல் பூராவுங் குறுக நின்று, ஒவ்வொரு வார்த்தை பேசும்போதும் முன்னொரு 'எஜமான்' பின்னொரு 'சாமி' போட்டுப் பேசுவது வழக்கம். அப்படியிருக்க, அனுபவத்திலும் வயதிலும் குறைந்த அவருடைய மகன் பள்ளிக்கூடத்தில் தன்னோடு சமத்துவமாகப் பழகுவதையும், ஏக வசனம் பேசுவதையும் ராமச்சந்திரனால் ஏற்கவோ, புரிந்துகொள்ளவோ முடியவில்லை. சுந்தரபாண்டியைக் கண்டாலே ராமச்சந்திரனுக்குப் பிடிப்பதில்லை. அவனைக் காரணமின்றி வெறுக்கவும், அவனுடைய வீட்டில் ஏழ்மையின் காரணமாக நிகழும் சச்சரவுகளையும் மற்ற மாணவர்களிடம் இழிவாகப் பேசிச் சிரிக்கவும் முற்பட்டான் ராமச்சந்திரன். சுந்தரபாண்டி தனது சுய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவசியம் ஏற்படும்போதெல்லாம் ராமச்சந்திரனிடம் வாய்ப்போர் செய்யத் தயங்குவதில்லை. இப்படியே இவர்களுடைய மனக்கசப்பு நீடித்து வளர்ந்துகொண்டே வந்தது.

அப்போது இருவரும் ஏழாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தார்கள். ராமச்சந்திரனின் 'திருவிளையாடல்' பள்ளிக்கூடத்திலுள்ள கடிகாரத்தின் மீது திரும்பியது. அவன் சில நாட்களில் பள்ளிக்கூடத்திற்கு அதிகாலையில் வந்து, 'கிளாக்'கிலுள்ள முள்ளை அரைமணி நேரம் வித்தியாசம் காட்டும்படி திருப்பி வைத்துவிடுவான். உபாத்தியாயர்கள் வந்ததும் மணி வித்தியாசமாகி யிருப்

> ## பெண்ணின் கடமை
>
> கடவுள் பெண்ணைப் படைக்கும்போது ஆணின் மூளையையோ, அல்லது பாதத்தையோ கொண்டு படைக்கவில்லை. ஆணின் விலா வெலும்பை எடுத்து அதையே பெண்ணாகச் சிருஷ்டித்தார், இதிலிருந்து பெண், ஆணுக்கு அதிகாரியாகவோ அடிமையாகவோ நடந்து கொள்ளக் கூடாது; ஆனால், அவன் இதயத்துக்கு மிகவும் நெருக்கமான ஜீவனாக இருக்க வேண்டும் என்று ஆகிறது.
>
> —ஜே. என். பேக்கர்

பதைக் கவனித்து, யாரையாவது போஸ்டாபீஸுக்கு அனுப்பி மணி பார்த்து வரச்செய்து பள்ளிக்கூடத்து மணியை, அதை அனுசரித்துத் திருத்தி வைத்துக் கொள்வார்கள். ராமச்சந்திரனின் இந்த விஷமம் கொஞ்ச நாள் உபாத்தியாயருக்குத் தெரியாமலே நடந்து வந்தது. அனேக மாணவர்களும் இந்த வேடிக்கையைப் பார்த்து ரஸித்தார்களானாலும் ராமச்சந்திரனுக்கும் பயந்து இவ்விஷயத்தை உபாத்தியாயர்களிடம் பிரஸ்தாபிக்காமலேயிருந்தார்கள்.

ஒருநாள் வழக்கத்துக்குச் சற்று முன்பாக பள்ளிக்கூடத்திற்கு வந்த சுந்தரபாண்டி, கடிகாரத்தின் முள்ளின் மேல் ராமச்சந்திரனுடைய கையிருப்பதை நன்றாகக் கவனித்துவிட்டான். எத்தனையோ நாட்களாகக் கண்டு பிடிக்க முடியாத ஒரு திருட்டுத்தனத்தைத் தான் கண்டுபிடித்துவிட்ட களிப்பில், முதலில் பள்ளிக்கூடத்திற்கு வந்த உபாத்தியாயர் காதில் விஷயத்தைப் போட்டு விட்டான். அந்த உபாத்தியாயர் புதியவர்; பையன்களின் தராதரத்தை அறியாதவர். ராமச்சந்திரனைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாததாகையால், நேராக ஏழாவது வகுப்பறைக்கு வந்து, ராமச்சந்திரனைக் கையை நீட்டச் சொல்லி தன் கையிலிருந்த பிரம்பினால் ஒரு டஜன் அடி இழுத்துவிட்டார். ராமச்சந்திரன் கொலை செய்யப்பட்டவனைப் போலத் துள்ளினான். அவனுடைய வாழ்நாளிலேயே உபாத்தியாயரிடம் அடி வாங்கியது அதுதான் முதல் தடவை. உபாத்தியாயர் முன்னிலையிலே அவன் சுந்தரபாண்டியின்மேல் பாய்ந்துவிடப் பார்த்தான். அழுகைக் கிடையே பலத்த ஆக்ரோஷத்துடன் சுந்தரபாண்டியை நோக்கி "பிச்சைக்காரப் பயலே! அனாவசியமா வாத்தியார் கிட்ட கோள் சொல்லி எனக்கு அடி வாங்கித் தந்த உனக்கு எவ்வளவு திமிரு? இனி நீ இந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறதை நானும் பாத்திடுறேன்!" என்று பேரிரைச்சலோடு சொல்லிவிட்டு வேகமாகப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறினான்.

சுந்தரபாண்டி மாணவ மாணவிகள் எல்லோருடைய முகத்தையும் பார்த்துவிட்டு, ஆசிரியரின் முகத்தை ஏறிட்டு நோக்கினான். ஆசிரியர் திக்பிரமை பிடித்து நின்று கொண்டிருந்தார்.

சற்று நேரத்தில் பண்ணையார் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு ஒரு பலமான ஆட்சேபக் குறிப்பு அனுப்பப் பட்டது. பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் ராமச்சந்திரனை அடித்த உபாத்தியாயரை இடமறியாமல் காரியஞ் செய்ததற்காக ஒரு தினுசாகக் கண்டித்து வைத்தார்.

[அடுத்த இதழில் முடியும்]

*

உவர்க் கடல்!

கடல் தண்ணீர் உப்புக் கரிப்பானேன்? கடல் தண்ணீர் உப்பாயிருப்பதற்கு, நதிகள் பூமியிலுள்ள உப்புக்களைக் கரைத்து கடலில் சேர்த்து விடுவதுதான் காரணம் என நம்பின காலமும் உண்டு. ஆனால் உண்மை அதுவல்ல. பூமியின் உற்பத்திக் காலத்திலிருந்தே அந்த உப்பு இருந்து வந்திருக்க வேண்டும். பூமி சிருஷ்டியாரம்பத்தில் உருகிய பாறைக் குழம்பாக இருந்தபோது, அதைச் சுற்றி வாயுமேகங்கள் சூழ்ந்திருந்தன. அந்த மேகங்களே இறுகி, கடலாகியிருக்க முடியும். கடல் நீரில் குளோரினும், கந்தக உப்புகளும் அதிகமாயிருப்பதை, எரிமலைக் கொந்தளிப்பினால் வரும் உப்புக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த உண்மை புலனாகிறது.

—ஆன்சர்ஸ்.

இல்லற இன்பத்தை சிலருக்குப் பரிபூரணமாக அனுபவிக்க முடியாமல் போய்விடுகிறது. ஆண்மையை இழந்து பரிதவிப்பதே இதற்குக் காரணம். உள்ளத்தின் சகல ஓட்டங்களும் உடற் கூற்றைப் பாதிக்கவே செய்கின்றன. ஆனல் உண்மையை உணர்ந்து கொண்டால் நிவாரணமும் சுலபம் தான். இந்த ஆங்கில அறிஞருடைய கட்டுரையின் சாரத்தைப் படியுங்கள்.

ஆண்மையின்மை

ஸெல்வின் ஜேம்ஸ்

நம்மில் பலரும் கருதுவதுபோல, ஆண்மையின்மை அல்லது நபுஞ்சகம் என்பது வயோதிகருக்கே உரியதன்று. வயது அதிகமாகும்போது காமசக்தி வலுவிழந்து குறைந்து விடுகிறது என்பது ஓரளவு உண்மைதான். என்ருலும் 21 வயது வாலிபனுக்கும் நபுஞ்சகத்தன்மை வரக்கூடும். அதேபோல, 45 வயது மனிதனுக்கு காம சக்தி வலுவும் வளமும் குறையாமல் அபரிமிதமாக இருக்கவும் கூடும். பார்க்கப் போனல், ஒரு மனிதனுக்கு நபுஞ்சகத்தனம் அவனது முதல் மண இரவன்றே, அதைத் தொடர்ந்த சில மாதங்களிலோ அல்லது இருபதாண்டுக்குப் பின்னலோதான் ஏற்படக்கூடும்.

நபுஞ்சகம் ஏற்படுவதற்கு மனம் தான் பெருங்காரணம். கணவனுக்குத் தன் மனேவியைத் தவிர வேருெருத்தியிடம் மனஈடுபாடு இருந்தால், கட்டிய மனேவியை மகிழ்விக்க முடியாதவாறு வலுவற்றுப் போகலாம். அல்லது தன் மனேவி தன்னுடைய சரசங்களுக்கும் சல்லாபங்களுக்கும் பதிலளித்துச் சுதாரிக்கத் தெரியாது, உணர்ச்சியற்றவளாகத் தோன்றினலும் ஆண்மை குன்றி விடுகிறது. இவை போக, பட்டணத்துச் சந்தடிகளில் ஒண்டுக் குடித்தனம் புரியும் தம்பதிகள் தங்கள் தனிமையை இழந்து தவிப்பதனல், யாரேனும் அகஸ்மாத்தாய் குறுக்கிட்டு விடக்கூடும் என்ற உள்ளப் பதைப்பிலும் ஆண்மை உத்வேகமற்று நபுஞ்சகமாகிவிடும். இன்னும் பார்க்கப் போனல், சேர்க்கை யின்பம் களைப்புத் தருவதென்றும், வேண்டாத விருந்தாளிகளாகப் பிரஜா விருத்தி செய்து விடுமென்றும் பயந்து சாகும் கணவன்மார்களிடமும் நபுஞ்சகத் தன்மை ஏற்படக்கூடும். இம்மாதிரியான உளப்பாங்கு பெற்றவர்கள், ஒன்று அல்லது இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறைதான் சேர்க்கை அனுபவத்தில் ஈடுபடுவார்கள். இவர்

களுக்கு ஆண்பெண் கூட்டுறவு என்பது ஆனந்தமற்ற ஒரு கிரியை என்ற மனப்பான்மைதான் இருக்கும்.

திடகாத்திரமான வயதில் ஆண்மைக்குணம் அற்றுப் போகுமானால், அது ஆண்மையின் பெருமைக்கே அடி கொடுப்பதாகும். இளமையில் தோன்றும் ஆண்மையற்ற தன்மையால், அம் மனிதன் தன் ஒழுக்கத்தை இழந்து, தோல்வி மனப்பான்மை கொள்ளலாம்; தாழ்ந்தவனாகவும் விாழ்வில் நம்பிக்கை இழந்தவனாகவும் மனம் மாறலாம். இதன் காரணமாக, நரம்புத் தளர்ச்சி, தூக்கமின்மை, பேய்க்கனவுகள், ஜீரணக் கோளாறு, உணர்ச்சிக் கொதிப்பு முதலிய கேடுகளுக்கு ஆளாகக்கூடும். மேலும் இம் மாதிரியான கணவன் தனது நபுஞ்சகத் தன்மைக்குக் காரணம், தனது பால்ய வயதின் தாது விரயம், கல்யாணத்துக்கு முன்பே காமக்கிரியையில் அமோக ஈடுபாடு, சரியான உணவின்மை, அதிகப்படியான உழைப்பு, தேகப் பயிற்சி முதலியவைதான் என நம்புகிறான்.

இப்படிப்பட்ட மனிதர்கள் தமது ஆண்மையைப் பல விதங்களில் மீண்டும் எய்தப் பாடுபடுகிறார்கள். அதிக ஓய்வு, தேகாப்பியாசம், உடம்பைப் பிடித்து விடுதல், உல்லாச உணவு, டானிக்குகள், விட்டமின் மாத்திரைகள் முதலியவற்றை நம்பி விடுகிறார்கள். ஆனால் இவையெல்லாம் நபுஞ்சகத் தன்மையைக் குணப் படுத்துவதில்லை.

உண்மை என்ன வென்றால், நபரின் உயரம், எடை, திடகாத்திரம், தசைவளர்ச்சி முதலியவற்றுக்கும் காமசக்திக்கும் சம்பந்தமே கிடையாது. ஒரு குஸ்திச்சண்டைக் காரனும்கூட நபுஞ்சகனா யிருத்தல் கூடும்; அதேவேளை ஒரு நோஞ்சான் காம சக்தி பெற்றவனாகவும் இருக்க முடியும்.

நபுஞ்சக மென்பது மலட்டுத் தனத்தோடு சம்பந்தப் பட்டது மல்ல; மலட்டுத்தனமும் அல்ல. ஒரு ஆணின் தாதுவில் ஜீவ அணுக்கள் அற்றுப் போனாலும் கூட அவன் ஆண்மையுடையவனா யிருக்க முடியும். அதேபோல ஜீவ அணு நிரம்பிய மனிதன் காமசக்தி இழந்தவனாகவும் இருக்கமுடியும். ஜீவதாதுவின் உயிரணு குறைந்திருத்தல், மர்ம உறுப்புக்களின் வளர்ச்சியின்மை முதலியவற்றால் ஏற்படும் நபுஞ்சகத்தன்மை மிகவும் குறைவுதான். வைத்திய நிபுணர்களில் பலரும் நபுஞ்சகத் தன்மைக்கு மனநோய்தான் காரணம் என்று கூறுகிறார்கள்.

தங்கள் குழந்தைகளிடம் அபரிமிதமான ஆசைகாட்டும் பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு காம சம்பந்தமானவற்றைப் பற்றி பயப்பிராந்தியை ஊட்டி விடுவதாலும் வாலிபர்களிடம் நபுஞ்சகத்தன்மை ஏற்படக் கூடும். உதாரணமாக, பால்யத்தில் இளைஞர்கள் ஈடுபடும் தாதுவிரயத்தைப் பற்றி அவர்கள் தம் பிள்ளைகளைப் பயமுறுத்தி விடுகிறார்கள். தாது விரயத்தால், பைத்தியம், மலட்டுத் தனம், வளர்ச்சியின்மை, எலும்புக் கட்டுலைதல், பருக்கள் ஏற்படுதல் முதலிய கோளாறுகள் ஏற்படக்

கூடும் என்ற உணர்ச்சியை ஊட்டி விடுகிறார்கள். இந்தத் தப்பான மனப்பான்மை அவனது வாழ்க்கை முழுதும் ஆக்ரமித்து அவனது காமசக்தியைப் பல வீனப்படுத்துகிறது.

நபுஞ்சகத் தன்மை, மனசுக்குள் காதல் சம்பந்தமான போராட்டங்கள் இருந்தாலும் ஏற்படக்கூடும். ஒரு மனிதன் எப்போதும் தன் மனசுக்குள் வேறொருத்தியைச் சேர எண்ணலாம்; அல்லது தான் அநேகமாக மறந்துவிட்ட ஒரு யுவதியோடு ஆத்மார்த்தமாகச் சேர்க்கை கொள்ளுவதாகக் கனவு கண்டு கொண்டிருக்கலாம். இந்த இரு நிலைகளிலும், அவன் தன் மனைவியிடம் காதல் கொண்டவனயிருந்தாலும்கூட, சேர்க்கையின்பத்தை அனுபவிக்க இயலாது.

வெளிக்குத் தெரியாத ஓரினச் சேர்க்கை மனப் பான்மையினலும் நபுஞ்சகத்தன்மை கடூரமாக உண்டாகக் கூடும். ஓரினச் சேர்க்கையைப் பற்றி உள்மனசில் எங்காவது ஓரளவு ஆசை உறங்கிக் கொண் டிருந்தாலகூட, இல்லற இன்பம் கிட்டாமல் போய்விடும்.

தன்னைத்தானே அதிகமாக விரும்பும் மனிதனிடமும் நபுஞ்சகத் தன்மை தலைகாட்டக்கூடும். தற்பெருமையும் தன்னைவிட்டால் நிகரில்லை யென்று தன்னைத் தானே விரும்பும் சுயநலமும் கொண்ட மனிதன் தனது மனைவியிடம் காதலும், சரசமும், இங்கிதமும் காட்டாமல் இருந்து விடுகிறான்; சேர்க்கை யின்பம் என்பது கொடுப்பதன்றி எடுப்பதல்ல என்ற மனப்பான்மையும் அற்றுப் போய் விடுகிறான். அதன் காரணமாக அவன் காதலின்பத்தை நுகரமுடியாமல் நபுஞ்சகத்தன்மை பெறக்கூடும்.

விபசார விடுதிகளில் காமசுகம் அனுபவித்தவனுக்கும் பிற்காலத்தில் நபுஞ்சகத்தன்மை ஏற்படக்கூடும். வியாபாரார்த்தமாகப் பழகும் விபசாரிகளிடம் அவன் நடந்து கொண்ட விதம் வெறுப்பும், எதிர்ப்பும் கொண்டதாகத்தான் இருக்க முடியும். காதல், சரசம், இங்கிதம் முதலியன எல்லாம் அவனிடத்தில் காண்பது அரிதாகி விடுகின்றன. அவனுக்கு உணர்ச்சி ஏற்படுவதானல், சரீர பூர்வமாக ஏற்பட்டால்தான் உண்டு; அதுவும் நிச்சயமில்லை.

கலியாணத்துக்குப்பிறகு இம் மாதிரியான மனிதனிடம் உணர்ச்சி வசமிழந்த எண்ணங்களேநிறைந்து விளங்கும்; அதனல் அவன் தன் மனைவியிடமும் உணர்ச்சி வசப்பட முடியாது. அவனது உள்மனம் அவனது முந்திய சேர்க்கையை மறப்பதே இல்லை. தன்னையறியாமலேயே தன் மனைவியையும் விபசாரியின் ஸ்தானத்தில் வைத்தே அவன் பார்க்கிறான்; அதேவேளை பழைய செய்கையின் குற்றமுள்ள நெஞ்சும் குறுகுறுப்பும் சேர்ந்து அவனைச் செயலற்றவனக்கிவிடக் கூடும்.

இவைதான் நபுஞ்சகத் தன்மைக்கு காரணமென்றல் அதற்கு நிவாரணம்தான் என்ன? தாது சுரப்பியின் சீர் கேட்டையோ, மர்ம உறுப்புக்களின் வளர்ச்சிக் குறைவையோ வைத்தியர்களின் உதவி கொண்டு எளிதில் நிவாரணம்

செய்துகொள்ள முடியும். உடம்பில் ஜீவதாதுவில் உயிரணுக்கள் அற்றுப் போயிருந்தால், வைத்தியர் அதற்கென்று உரிய ஊசிமுறைகளின் மூலம் உடம்பில் மருந்தேற்றிக் குணப்படுத்தமுடியும். ஆனால், உடம்பில் உயிரணுக்கள் நிரம்பியிருந்தும், சரீர விகாரமற்றவர்களாயிருந்தும் நபுஞ்சகம் அடைபவர்களின் கதி என்ன? அவர்களது நோயெல்லாம் மனநோய்தான். அவர்களைக் குணப்படுத்துவதற்கு முதலில் அவர்கள் மனத்தைக் குணப்படுத்தியாக வேண்டும். இந்தச் சிகிச்சை முறையில் இளமையில் மனசில் வேரூன்றிய பயத்தையும் காமத்தைப் பற்றிய தப்பான முடிவுகளையும் கல்லியெறிய வேண்டும். டாக்டரின் உதவியினால், நோயாளி தன்மனத்தின் அதல பாதாளத்தில் நுழைந்து அங்கு உறங்கும் தவறான எண்ணங்களையும், வேண்டாத நினைவுகளையும் களைந் தெறிய முனையவேண்டும். அதன் பிறகுதான் அவன் தனது பால்யத்தில் அமுங்கடிக்கப்பட்ட உணர்ச்சிகளை உணர்ந்து கொள்ளமுடியும். அவற்றைப் பரிபூரணமாக உணர்ந்து கொண்டால், நபுஞ்சகத்தனத்தையும் போக்கி விடமுடியும்.

மனத்தத்துவ வாதிகள் நபுஞ்சகத்தன்மையைச் சீக்கிரமே குணப்படுத்த முனையவேண்டும் என்று சொல்கிறார்கள். அதைப் புறக்கணிப்பது மேலும் அதிகப்படியான சீர் கேட்டைத்தான் விளைவிக்கும் என்றும், இந்தநோய் புற்று நோயைப் போல மனித உள்ளத்தை அணு அணுவாகத் தின்று தீர்த்து, நோயாளியை ஒரு உதவாக்கரை ஆக்கிவிடக்கூடுமென்றும் கூறுகிறார்கள்.

*

பெண்ணின் அதிசயம்!

(வீனஸ், ரோமானியர்களின் காதல் கடவுள். அந்தத் தேவதையின் பெயருள்ள கிரகம் ஒன்று உண்டு. அதன் பெயரும் 'வீனஸ்' தான். வீனஸ் என்ற கிரகம் பெண்பால்; வியாழக்கிரகம் ஆண்பால். இதை மனதில் வைத்துக்கொண்டு மேலே படியுங்கள்.)

பிரபல விஞ்ஞானியாகிய ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன் ஒரு வீட்டுக்கு விருந்து சாப்பிடப் போயிருந்தார். விருந்து முடிந்ததும், அந்த வீட்டு அம்மாளும் ஐன்ஸ்டைனும் வீட்டுத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அப்போது நிலவொளி மட்டுமின்றி, ஆகாயத்தில் நட்சத்திரங்களும் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

வானத்திலுள்ள கிரகம் ஒன்றைக் காட்டி வீட்டு அம்மாள் சொன்னாள்:

"இன்று வியாழக் கிரகம் மிகவும் பிரகாசமாக இருக்கிறது அல்லவா?"

"அது வியாழன் அல்ல; வீனஸ்" என்றார் ஐன்ஸ்டைன்.

"ஆ, என்ன ஆச்சரியம்! நட்சத்திரம் ஆணா, பெண்ணா என்பது கூட உங்களுக்குத் தெரியுமா!"

—ஈ. ஈ. எட்கார்

ஊரார் பிள்ளைக்கு பாலூட்டும் செவிலித் தாயாக வாழ்ந்து வரும் ஒரு பெண்ணுக்குத் தன் குழந்தையைப் பற்றியுள்ள ஆதங்கம், ஆர்வம் முதலியவற்றை நாசூக்கான முறையில் எழுதுகிருர் இந்த எஸ்தோனிய நாட்டுக் கதாசிரியை. தமிழாக்கம்: 'அசோகன்'

தாய்

○

ஐனேகலாஸ்

ஸார்வே பிராந்தியத்தி விருந்து வந்து, செவிலித்தாயாக இருக்கும் இங்கெல், படிக்கட்டில், மடியில் ஒரு குழந்தையுடன் அமர்ந்திருந்தாள். ஸார்வே வாசிகள் அணியும் அலங்காரத் தொப்பி அவள் தலையில் சரிவாக, ஒரு காதை மூடியவண்ணம் இருந்தது. தொப்பியின் பல வர்ணக் குஞ்சம் அவள் தலை யசைவிற்கிணங்க நடனம் பயின்றது. விசித்திரமான தொப்பி அது. கையிலே தாராளமாகக் காசு புரண்ட வேளையில், உள்ளம் உற்சாகத்திலே திளைத்த சமயத்தில் உல்லாசி எவனுவது, அத்தகைய 'ஐடியா' உதயமாகிக் கண்டுபிடித்த தொப்பியாக இருக்கவேண்டும் அது. அவளது மேலங்கி ஸார்வே நாட்டுச் சம்பிரதாயத்திற்கிணங்க, மடி மடியாகத் தொங்கி அவளது தோள்பட்டை வரை வந்திருந்தது. அதன் கறுப்பு உடலிலே சிவப்பும் வெளுப்புமாகப் பட்டை பட்டையாக குறுக்குக் கோடுகள் ஓடின. அது அவளது அங்க அமைப்பிற்குத் திரையிட்டு எடுப்பான எழில் அதிகமாக வெளியே தெரிய வொட்டாமல் மூடிக் கிடந்தது.

கட்டு மஸ்தான உடல்; எடுப்பான மார்பகங்கள், மகிழ்வு துள்ளும் வதனம் எல்லாம் பொருந்தியவள் இங்கெல். இத்தகைய அங்க அமைப்புகள் அவளது உடலிலே ஸ்வீடிஷ் ரத்தக் கலப்பு இருக்கிறது—அவள் ஒரு ஸ்வீடிஷ் பிறவி—என்பதை விளம்பரப் படுத்தியது. சோம்பிய நிலையில், தலையைச்சாய்த்து, தோளைத் தலைக்கு முட்டுக்கொடுத்து, கண்களைப் பாதி மூடியபடி அமர்ந்திருந்தாள் அவள். கிறக்கும் வெயில். ஒரே நிதானமாக குழந்தை மார்பைச் சுவைப்பது இரண்டுமாகச் சேர்ந்து அவளைக் கிட்டத்தட்ட உறக்கத்தில் ஆழ்த்தின. வெயிலின் கரோம் தாங்காத அழகிய பெரிய கொடி ஒன்று இலைகள் துவள வாடி நிற்கும் நிலையை நினைவூட்டுவதாய் இருந்தது அவள் தோற்றம்.

மெதுவாக, தடைப்படாமல், எஸ்தோனிய சக்தி அவளிடமிருந்து வெளிப்பட்டு அந்த அன்னிய ஜாதிக் குழந்தையின் ரத்தத்தோடு சங்கமமாகிக் கொண்டிருந்தது. அவளது ரத்தம் அச் சிசுவின் ரத்தநாளங்கள் வழியாக ஓடி அதற்குப் புதிய நரம்புகள், தசை நார்கள், சதைப் பற்று எல்லாம் உருவாக உதவியது. சிசுவின் மூளைக்கு—சிந்தனை எதுவும் இன்னும் தடம் பதிக்காத அந்த மென்மையான ஜவ்விற்கு - பாய்ந்தது. அவள் தனது சுத்த ரத்தத்தை, விரயமாகாத அவளது சக்திச் சுரங்கத்தை, வம்சவாரியாக ரத்தம் பச்சைத் தண்ணீராக மாறிக் கொண்டிருக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த குலக்கொழுந்து ஒன்றிற்கு உரமேற்ற உபயோகித்தாள்.

துவேஷம், குற்றச்சாட்டு, அடிமையின் மனதில் இயல்பாக எழும் குரோதம் ஆகிய எதுவும் அவள் குழந்தைக்கு ஊட்டிய பாலோடு கலக்கவில்லை. பழம் பயன்படுவது யாருக்கு — எஜமானனுக்கா அடிமைக்கா—என்ற கவலை இல்லாமல் கனிவர்க்கங்களை விளைவிக்கும் பூமியின் பொறுமை அவளிடம் பரிணமித்தது. தான் பால் கொடுத்து வளர்ப்பது யாரை என்பதைப் பற்றிய சிந்தனையே இல்லை அவளுக்கு. அந்தச் சிசு நாளை அவளது வர்க்கத்தினரை வாட்டி வதைக்கும் கொடூர வைரியாக மாறலாம். பூப்போன்ற அதன் மென்கரங்கள் நாளை அவள் வர்க்கத்தினரை ஒடுக்க ஒங்கும் கொடுங்கரமாக மாறலாம். இந்த எண்ணமே உதிக்கவில்லை அவளுக்கு.

குழந்தை கண்களைத் திறந்துகூடப் பார்க்கவில்லை. சொக்கு நிலையில் இருந்து தன் உணவை மொக்கியது தனது உரிமையில் அசாத்திய நம்பிக்கை கொண்டு சிறிதும் சஞ்சலமின்றி யிருக்கும் ஒரு சக்கரவர்த்தியின் அமைதிதான் அதற்கும். பசி என்றால் 'கறுப்பா, சிவப்பா' எனக் கேட்கும் வர்க்கக் குழந்தைகளின் நிம்மதி அதற்கும். அதன் சின்னஞ் சிறு ரோஜா வண்ணக் கன்னங்களெல்லாம் அதை அலங்கரித்த உடையின் ரிப்பன்கள், 'லேஸ்'களுக்கிடையே ஒளிந்து கிடந்தன. சில்க் சட்டை, கால் சட்டை, கலைத் திறமையோடு பின்னப்பட்ட காலுறைகள்; தலையில் மென்மையாகப் படர்ந்திருக்கும் தலைமயிரை மறைக்கும் மெல்லிய ஜரிகை இழைகள் ஓடிய அலங்காரத் தொப்பி எல்லாம் அதற்கு அணி செய்தன. இத்தகைய வசதிகள், பாதுகாப்பு, கவனிப்பு எல்லாம் எழுப்பிய உணர்வு அதன் எட்டு மாத வளர்ச்சியுற்ற மண்டையிலே உறைந்திருந்தது. தனது சின்னஞ் சிறு தேவைகூடத் தங்குதடையின்றிப் பூர்த்தி செய்யப்படும் என்பது தெரிந்திருந்தால் அழவோ, அலட்டிக்கொள்ளவோ வேண்டிய அவசியமில்லை அதற்கு. முக்கியமாக அதன் உரிமைகளின் நிலைக்களனாக தாதி இருந்தாள். அவள் தனது தேவைகளைக் கவனிப்பதற்கென்றே இருப்பவள். அந்த ஒரு வேலையைத் தவிர வேறு முக்கியத்துவம் எதுவும் இல்லாதவள். தனது பிஞ்சுக் கரங்களின் பலம் முழுமையையும் கூட்டி அவளது கூந்தலைப் பற்றிப் பிய்த்தாலும் அவள் அழ மாட்டாள், சிணுங்கமாட்டாள் என்பதும், புதிதாய் முளைத்த பற்கள் நான்கும் பதிய அவள் மார்பகத்தைக் கடித்தால் கூட அசங்க அவளுக்கு துணிவு வராது என்பதும் அதற்கு நன்றாகத் தெரியும்.

மார்பை விட்டு குழந்தையின் முகத்தை விலக்கி, மிகுந்த ஜாக்கிரதையாகத் தனது மடியில் படுக்க வைத்தாள் செவிலித்தாய். பின்பு தனது ஆடையைச் சரிப்படுத்தி 'ஊக்'கை மாட்டினாள். யாரோ தன் மீது மூச்சுவிடுவதை உணர்ந்து நமுக்குவதைப் போன்ற ஒரு நடுக்கம். கண்ணயர்ந்து, ஒரு வேளை அத்தூக்கத்தின் நடுவே குளவி கொட்ட உணர்வு பெற்றிருக்கலாம். அல்லது 'சுள்'ளென அடித்த வெயிலை மறைத்து மேகம் படர்ந் திருக்கலாம். எப்படியோ விழிப்புற்று உணர்வெய்தினாள். இது வரை சூன்யமாய் இருந்த உள்ளத்தில் சூழ்நிலையின் தோற்றம் புதிய நினைவுகளை எழுப்பின.

பக்கத்துக் கிராமம் ஒன்றில் தங்கி வருவதெனப் போயிருக்கிறார்கள் எஜமானனும் எஜமானியும். அவளைச் சுற்றி நடப்பவற்றைக் கவனிக்கும் யாருக்கும் புலனாகக் கூடிய உண்மை அது. வேலைக்காரன் தட்டிக் கேட்க ஆளில்லாததால் தன்னைப் பெரிய எஜமானனாக எண்ணிக்கொண்டு நாலா புறமும் உலவி, ஆட்களை அதட்டுவதும், அட்டகாசம் செய்வதும்

வேலைக்காரியோடு சரசமாடுவதுமாகத் திரிந்தான். தோட்டக்காரன், சுவருக்கு மேலே உயரமாக வளர்ந்திருந்த குத்துச் செடிகளைச் சுவர் மட்டத்திற்கு வெட்டிவிடும் பணியில் ஈடுபட்டிருந்தவன், அடிக்கடி வேலையை நிறுத்துவதும் பொடிப் போடுவதுமாக இருந்தான். பண்ணையார் வீட்டிலில்லை என்பதற்கு அடையாளமாக வீட்டு முகப்பில் பறக்கும் கொடிகூட தாழ்வாகப் பறந்து கொண்டிருந்தது. தோட்டம் முழுவதுமே ஏதோ சுதந்திர உற்சாகத்தில் திளைப்பது போலிருந்தது. வண்டுகள் இரண்டு மடங்கு சப்தத்துடன் ரீங்கார மிட்டன. பாட்டிசைக்கும் பறவைகள் பயமின்றிப் பாடின.

இதய ஆழத்திலே பரவிய பலவீன உணர்ச்சியின் காரணத்தை அவளால் உணர முடியவில்லை. ஏதோ ஒன்று தனது சின்னஞ் சிறிய — ஆனுல் கூர்மையான—பற்களால் நெஞ்சைப் பிருண்டுவதுபோல் இருந்தது. அந்த இடத்தில் குழி விழுந்து, அதல பாதாளமாகி, வர வரச் சூன்யமாகிற மாதிரித் தோன்றியது.

அதைப் பசியென்று சொல்ல முடியாது. தாகமென்று சொல்ல முடியாது. இரண்டையு மொத்த ஏதோ ஒரு உணர்வு. இயற்கையின் உந்துதலால் ஜனித்த ஒரு உணர்ச்சி, தெளிவாகப் புலப்படாத ஒரு ஆசை, இன்னதென்று சொல்ல முடியாத எண்ணம் அவளுள் எழுவதாகத் தோன்றியது. உடல் முழுவதையும் ஒருவிதக் கொதிப்பும் அசதியும் கவ்வின. உடனே எழுந்து, விரைவாக ஓடி, குளிர்சுனை ஒன்றில் தலையை, வாயை, பொருத்துகளை, கழுத்தை, சகல அங்கங்களையும் ஜில்லென்று பனிக்கட்டிபோலக் குளிர்ச்சியுள்ள தண்ணீரில் முக்கவேண்டும் என்ற சபலம் எழுந்தது. தான் சூன்யமாகி விட்டதாக எழுந்த நினைவு அடங்காப் பிடாரியாக விசுவரூபம் எடுப்பதாகத் தோன்றியது. உடலைமட்டும் உறுத்தும் பசியைப் போலன்றி உள்ளத்தையும் சிந்தையையும் வாட்டும் நோயாக உருவெடுப்பதாகப் பட்டது.

அவளது ஆகம், ஆத்மா இரண்டோடும் இணைந்த ஏதோ ஒன்று அவளிடமிருந்து பறிக்கப் பட்டுவிட்டது. உடலிலிருந்து ஒரு கையைத் துணித்துப் பிரிப்பதைப்போல, குத்தூசி கொண்டு கண்ணைக் குத்திப் பிடுங்குகிறமாதிரி அவளிடமிருந்து அவள் உடைமையை அபகரித்துவிட்டார்கள். எதுவும் செய்ய இயலாததாக, வருத்தத்தால் வாடி வதங்குவதாக இருந்தது அவள் நிலை. அவளது உடலோடு ஒட்டிய உடலான ஒரு சிறுபாகம் அவளிடமிருந்து பறிபோய் விட்டது. இப்பொழுது அவள் சரீரம் முழுமையும் இழந்த அந்த அங்கத்திற்காக ஏங்கித் துடித்தது. அந்த ஏக்கம் கவர்ச்சி மிக்க காந்தம் போல் அவளைக் கவர்ந்து அந்த இழந்த பொருளை நோக்கி இழுத்தது. அவள் இருந்த இடத்திலிருந்து அசையாமல் தான் இருந்தாள். இருந்தும் ஓட்ட ஓட்டமாக ஓடுகிற மாதிரி, அவளது அந்த இழந்த சின்னஞ்சிறு பாகத்தைத் தேடி வேகமாக விரைகிற மாதிரி ஒரு பிரமை.

அவளுக்கு உண்ண உணவிற்குப் பஞ்சம் இல்லை. குளிருக்குப் பாதுகாப்பாக உடுக்க உடைக்கும் தட்டில்லை. வசதிகளுக்கும் குறைச்சல் இல்லை. இருந்தும் மனதில் கவிந்த சூன்ய உணர்வு, இவற்ருல் திருப்தியுறுவதாயில்லை. அனைத்தும் இருந்தும் இல்லாதவளாகவே இருந்தாள் அவள். அவள் புலன்கள் அதீத உணர்ச்சி பெற்றன. ஸார்வே கடற்கரையில் நின்று குழந்தை ஒன்று குழலூதும் ஓசையைக் கேட்பதாகத் தோன்றியது. அவளைச் சுற்றி அலைபாய்ந்த ஒலியலைகளி லெல்லாம் அந்த ஓசையை நிரவுவதாக—மழைகாலப் பறவையின் சோகக் கீச்சிடுதல்

களிலே, மரங்களின் இலைச் சரசரப்பிலே யெல்லாம் அக் குழந்தையின் அலறலைக் கேட்பதாக—உணர்ந்தான்.

சட்டென்று, அவளுக்குத் தன் வீட்டிலுள்ள பூனையின் நினைவு வந்தது. அந்தப் பூனையின் குட்டிகளை அவளது தந்தை கிணற்றில் வீசிவிட்டார். பூனை எப்படித் தரையோடு தரையாய் வயிற்றால் ஊர்ந்து, 'மியாவ், மியாவ்' எனச் சோகக் கதறல் எழுப்பி தன்னுடைய குட்டிகளைத் தேடித் திரிந்தது என்பது ஞாபகத்துக்கு வந்தது. குருவிகூட அப்படித்தான். ஒரு முறை இறைவாணத்தில் கூடு கட்டியிருந்த ஊர்க் குருவியின் கூட்டை கழுகு ஒன்று காலி செய்து விட்டது. குருவிபட்ட வேதனை! சிறகடித்து வந்து வந்து இறப்பிலே அமர்ந்து அலகால் ஓலைகளைக் கோதிக் கோதிப் பார்க்கும்; கூட்டைச் சுற்றி சுற்றி வட்டமிடும். விந்தைக் குரலில், விளங்காத பாஷையில், விவரமற்ற ஒலங்களில் எல்லாம் கதறிக் குஞ்சுகளை அழைக்கும்.

இரத்தபாசம் மிருகங்களுக்கிடையே கூட நிலவியது. ஆனால் கருணையுள்ள எஜமானி யம்மாளோ அவள் ஒரு முறைகூடக் குழந்தையைப் பார்க்கப் போகக்கூடாது எனக் கட்டளை போட்டு விட்டாள். ஒரே ஒரு முறை மட்டும் ரகசியமாகப் போய்விட்டுவர முடிந்தது. அப்பொழுதுகூட என்ன? சவுக்கடி தண்டனை கிடைக்கலாம் என்ற பயம் ஊசலாடிக் கொண்டிருக்க, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, யாராவது தொடர்ந்து வருகிறார்களா எனப் பின்னால் அடிக்கடி திரும்பிப் பார்த்தபடி, எல்லை போய்ச் சேரு மட்டும் பட்ட கஷ்டம்! கடவுள் செயல்! ஆபத்து இல்லாமல் தப்பித்தாள். குழந்தையோடு எவ்வளவு குதூகலமாக விளையாடினாள்; எப்படி எப்படிக் கொஞ்சினாள்! அதை இப்பொழுது நினைத்தால்கூட ஆனந்தக்கண்ணீர் அரும்புகிறது. அவள் நாயாகப் பாவித்து குழந்தையைக் கடிக்கிற மாதிரிப் பாசாங்கு செய்து விளையாடிய அந்த விளையாட்டு! 'வவ்...வவ்...வவ்'...எனக் குரைக்கிறாள்......குழந்தையின் பாதத்தையோ, கையையோ வாயினால் கௌவுகிறாள்; மிருதுவாகப் பற்களினால் அழுத்துகிறாள். குழந்தை குஷியாகக் கத்துகிறது. அவள் பார்த்து மகிழ்ந்த அதன் முதற் சிரிப்பு அதுதான். காக்கைக் குஞ்சு ஒன்று விசித்திரமாகக் கரைகிற மாதிரி இருந்தது. பின்பு கால் விரல்களையும், கைவிரல்களையும் குவித்துத் தானாகவே அவள் வாய்க்குள் திணிக்க முயன்ற அதன் செய்கை!

இப்பொழுதும் அந்தக் குழந்தை அவளிடம் பாலுண்ண விரும்புமா? அந்த நினைப்பே அவளுக்குக் கொதிப்பு உண்டுபண்ணியது. மூளையில் ரத்தம் உறைந்து கட்டியாவது போலிருந்தது. ஒரு தடவை முயன்று, சிறிது நாழிகூட இருந்து விட்டால் போதும், பின்பு ஒரு வருஷம் வரை வேண்டுமானாலும் பிரிந்திருந்து, மறுபடியும் அத்தகைய சந்தர்ப்பத்திற்குக் காத்திருக்கத் தயார். ஒரே ஒரு முறை தன்னைத் தனது குழந்தைக்கு அர்ப்பணித்து, அதோடு ஆகம் ஆத்மா இரண்டும் ஒன்றாக இணைந்து, ரத்தம் ரத்தத்தோடு கலப்பதை உணர்ந்தால் போதுமானது....

'டியூ—இங்கே வா.'

டியூ அவளை நோக்கி ஓட்டமாக வந்தாள்.

'டியூ, போய் என் மகளை எடுத்து வாம்மா. கொஞ்ச நாழிக்குத்தான். என்ன, நான் சொல்வது தெரிகிறதா?'

'நான் மாட்டேன், எஜமானிக்குத் தெரிந்து விடும்.'

'எஜமானி இன்னும் ஒரு வாரத்துக்கு வரமாட்டா. இந்தச் சேதி

செப்டம்பர் 16உ முதல் நடைபெறுகிறது
கோவை ... கர்னடிக்
திருச்சி ... உவெரைட்டி
சென்ட்ரல்
சேலம் ... உமுருகன்
ஓரியன்டல்
வேலூர் ... தாஜ்
கும்பகோணம் ... டயமண்டு
பாண்டிச் சேரி ... ரத்னு
திருப்பாப்புலியூர் நியூ சினிமா
சிதம்பரம் ... வடுகநாதன்
மாயவரம் ... சுந்தரம்
ஈரோடு வின்செண்ட் டவுன் ஹவுஸ் (17உ முதல்)
கூடிய சீக்கிரம் இன்னும் 50 நகரங்களிலும் வெளிவருகிறது
சியாமளாவின்
இன்பவல்லி
மந்திரிகுமாரனை காதலித்து, மந்திரிகுமாரனை பிரிந்து, மந்திரவாதியினிடம் சிக்கி, மதியால் மந்திரவாதியை வென்று, மந்திரிகுமாரனுக்கு மாலை சூட்டிய ஓர் ராஜகுமாரியின்....
காதல் சித்திரம்
(ரஸமான சம்பவங்கள் நிறைந்தது)
நடிகர்கள்:
மஹாலிங்கம் · சரோஜா
சரஸ்வதி · மேனகா கிருஷ்ணன்
மதுரம் · சாமிநாதன் மற்றும் பலர்....
சங்கீதம்: G. ராமநாதன் பாட்டு: P.R. ராஜகோபால அய்யர்
ஸ்டுடியோ: ரத்னா. சேலம்
செட்டிங்: வஸந்தராவ் ஜக்தப் ஒலிப்பதிவு: R.G. பிள்ளை
பின்னணி சங்கீதம்:
P.A. பெரியநாயகி
P. லீலா · T.V. ரத்தினம்
டைரக்ஷன்:
S. நொடானி
ஸூபர் ரிலீஸ்
SPC
ஸூபர் பிக்சர்ஸ் சர்க்யூட். மதராஸ் 7.

குணத்தில் தங்கம் போன்றது!

தங்க பஸ்பம்

புகையிலை

தந்தி: "சூரியன்" தபால் பெட்டி நெ. ௧௨. போன் நெ. ௩௯.

N. ஆறுமுகம் பிள்ளை, காரைக்குடி.

சக்தி ★ மாதப் பத்திரிகை

தனிப் பிரதி 'தபால்'	0 8	ஒரு வருஷம்	6 0
ஆறு மாதம்	3 8	2 வருஷம்	11 0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-4-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0 9	ஆறு மாதம்	4 0
ஒரு வருஷம்	7 0	2 வருஷம்	13 0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0 10	ஒரு வருஷம்	8 0
ஆறு மாதம்	4 8	2 வருஷம்	15 0

சக்தி காரியாலயம்

சென்னை 14

என்ற விலாசத்திற்குச் சந்தாத்தொகை அனுப்பவேண்டும்

யென்ன அவ இருக்க ஊருக்குப் பறந்தா போயிரப் போகுது!'

'மத்தவங்க சொல்விருவாங்க.'

'ஊஹூம். மாட்டாங்க. நாம குழந்தையை உள்ளே கொண்டுபோய் விடலாம். டியூ, நான் சொல்வதைக் கேளம்மா! நான் உனக்கு இந்த வெள்ளி ஊக்கைத் தருவேன்.'

தனது அங்கியிலிருந்து வெள்ளி ஊக்கைக் கழற்றினாள் இங்கெல். டியூ அவள் முன்னால் கட்டைவிரலை யூன்றி நின்று குதித்தபடி, இங்கெலின் கைவிரல்களையே கவனித்தாள்.

'குழந்தையைக் கொண்டு வந்தவுடன் பட்டுத் துணிகூடத் தருவேன்.'

'சுங்கடிப் பட்டா?'

'ஆமா, அதோடு ஜரிகைகள் கூடக் கொடுப்பேன். போ, போம்மா. போய் எவ்வளவு சீக்கிரமாத் திரும்பி வர முடியுமோ அவ்வளவு ஜல்தியா வா!'

'ஏதாவது பழி வந்தா பூரா உன் தலையிலேதான். நீயே போய் எடுத்து வந்ததாகத்தான் சொல்லணும். ஆமா. என்னைக் காட்டிக் கொடுத்துடக் கூடாது.'

டியூ குதிபோட்டுப் போனாள். பூனைபோல தோட்டத்துச் சுவரைத் தொத்தித் தாண்டி, வயல் வெளிகளில் மறைந்தாள். இங்கெல் அறைக்குள் போய் தன் கையிலிருந்த குழந்தையை ஒரு தொட்டிலில் கிடத்தினாள். தொட்டிலில் நீல வர்ணப் பட்டு, பஞ்சு மெத்தைகளால் மென்மையாக்கப்பட்டிருந்தது.

குழந்தை வந்த பின்பு, அது மார்பைச் சுவைக்க மறுத்துவிட்டால்—திரண்ட உதடுகளை இறுக்கமாக மூடி முகத்தை வேறுபுறமாகத் திருப்பிக் கொண்டால் — என்ன செய்வது? ஒரு வேளை இவ்வளவு நாட்களில் அது அவளை மறந்திருக்கலாம். இப்போது அடையாளம் புரியாமல் போய்விட்டால்! அல்லது, தகுந்த ஆகாரம், பராமரிப்பு முதலியன இன்றி அது செத்துப் போயிருந்தால்? அப்படியானால் கூட அவளுக்கு யார் சொல்லி யனுப்பப் போகிறார்கள்? பால் குடிக்க ஏங்கி, அது நோஞ்சானாகிச் செத்துக் குழியிலே போன பிறகு, எப்பவாவது போய் அதன் சமாதியைப் பார்க்கத்தான் அவளுக்கு அனுமதி கிடைக்கும். அதுவரை அவள் அதோடு உறவாடுவது என்பது முடியாது போலும்!

> ## கடைசி வார்த்தை
>
> வாழ்க்கையிலேயே ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் நல்ல முறையில் மயானத்தில் புதைக்கப்படுவதே.
>
> —சீனப் பழமொழி

அவளது அமைதியின்மை அதிகரித்தது. இப்படி அமைதியற்ற நிலையில் அவள் இருந்தது முன்பு ஒரே ஒரு தடவைதான். அவள் காதலன் கட்டாய ராணுவ சேவையினின்று தப்பி, அந்நிய நாட்டுக் கப்பல் ஒன்றை நோக்கி ஓடிய சமயம். அப்பொழுது ஸார்வே கடற்கரை மணலில் அங்குமிங்குமாக, ஆத்திரமும் அவமானமும் பிடுங்கித் தின்ன, தன்னந் தனியாக, கைவிடப்பட்டவள் என்ற கதியில், கப்பல் தொடுவானம் நோக்கி முன்னேறுவதைப் பார்த்தபடி நின்றாள்.

டியூ அவசர அவசரமாகக் கதவைத் திறந்தாள்.

'இந்தாம்மா உன் புத்திர பாக்கியம்.

அவள் அந்தச் சிறுமியின் கையிலிருந்த துணிப் பொட்டணத்தைப் பிடுங்கினாள். அதைக் கையிலேந்தியவாறே அறையில் குதியாட்டம்

போட்டாள். மார்போடு அணைத்தாள். குழந்தை உயிரோடு இருக்கிறது, அதைத் தன் மார்புறத் தழுவி மகிழ முடியும், மடியில் வைத்துக் கொஞ்ச முடியும் என்ற உண்மையை உணர்வதே அவளுக்கு அளவற்ற ஆனந்தமாக இருந்தது முதலில்.

ஆனால் கொஞ்ச நேரத்திற் கெல்லாம் சந்தேகமும், இயல்பாக உள்ளத்தில் உறையும் பயமும் சேர்ந்து அன்னிய ஆதரவு குழந்தையைப் பராமரித்திருக்கும் பண்பை ஆராய்ந்து எடை போடத் தூண்டின.

குழந்தை கனம் இன்றி காற்றுப் போல் இருந்தது அவளுக்கு வியப்பளித்தது. அவள் அதைச் சுலபமாகத் தலைக்கு மேலே உயர்த்தித் தூக்க முடிந்தது. கனமே தோற்றவில்லை. எடையை நிர்ணயிக்க விரும்புபவளைப்போல அப்படியும் இப்படியும் ஆட்டினாள்.

எவ்வளவு லேசாக ஆகிவிட்டான். குழந்தை இருபது பவுண்டுகள்கூட இருக்கமாட்டான் போலிருக்கே...... இறகுக் கட்டு மாதிரி......

வேதனை கப்பிய உள்ளத்தினளாய் இன்னும் குற்றங் கண்டுபிடிப்பதற்காக ஆராய்ந்தாள். வசை கூறினாள். கண்ணீர் சிந்தினாள். குழந்தையைச் சுற்றியிருந்த துணிகளைக் களைந்தெறிந்தாள். அதன் உடலை ஆராய்ந்து விமர்சித்தாள்.

'பாவம். அவன் சட்டைக் கிழிசலைக்கூடத் தைக்கவில்லை. ஒரே கந்தலா யிருக்கு.'

'தண்ணி கண்டு ஒரு வாரத்துக்கு மேலேயே இருக்கும் போலிருக்கு...'

குழந்தையின் ஆடை முழுவதையும் அகற்றிக்கால்களைப் பரிசோதித்தாள். முழங்காலில் கன்றிப் போயிருந்தது. அக்குள் அருகில் உடம்பிலும். பின்னங்கால் பக்கமும் அப்படித்தான்.

'அட கடவுளே, அவர்கள் குழந்தையைக் கிள்ளி இருக்கிறார்களா? அல்லது தானேதான் கீழே விழுந்து காயப்படுத்திக்கொண் டிருக்கிறதா?'

'பாவம். பையனின் கைகள் துரும்பாய்ப் போய்விட்டன. என்டா கண்ணே, உன்னை அவர்கள் பட்டினியாகப் போட்டுவிட்டார்களா? கவலைப் படாதே. அம்மா இருக்கிறேன். உனக்குப் பாலூட்டுகிறேன்.'

குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக ஒரு ஸ்டூலில் அமர்ந்தாள். அங்கியை அகற்றும்பொழுது, குழந்தை பாலுண்ண மறுத்துவிடுமோ என்ற பயத்தால் விரல்கள் நடுங்கின.

குழந்தை அவளை வியப்பாக, ஆனால் உன்னிப்பாகக் கவனித்தது. தனியாகக் கிடந்து, விட்டத்தைப் பார்த்து வீரிட்டழுது, கவனிப்பாரில்லாமல் ஓய்ந்து பழக்கப்பட்டது அது. இப்பொழுது தன்னோடு பேசிக் கொஞ்ச ஆள் கிடைத்த அனுபவம் முற்றிலும் புதுமையான இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன செய்யவேண்டும் எனப் புரியவில்லை. தலையை அப்படியும் இப்படியும் அசைத்தது. அன்னிய மனுஷியாகத் தோன்றிய அவளிட மிருந்து விடுபடக் காலையும் கையையும் உதறியது. முகத்தையும் வாயையும் சுழித்தது

'அதற்கு எதுவுமே வேண்டியிருக்கவில்லை போலும். அட, ஆண்டவனே! அதற்கு என்னைப் பிடிக்கவில்லையா?'

குழந்தையைப் பறிகொடுத்துவிட்ட மாதிரி—மறுபடியும் தன்னிடமிருந்து அதை யாரோ பிரித்து விட்டது போல—இருந்தது. குழந்தைக்கு அவளை அடையாளம் புரியவில்லை. அவளைக் கண்டு மிரள்கிறது. இப்பொழுது அவள் குழந்தை அன்பைப் பறிகொடுத்த தாயாகிவிட்டாள்.

'இந்த அங்கியைக் கழற்றி விடுகிறேன். ஒருவேளை அவன் இதைக் கண்டு பயப்படுகிறானோ என்னவோ? இதைத் தூர எறிந்துவிட்டுப் பழைய

ஆடையை அணிந்து கொள்கிறேன்... உம், இப்போ உன் சொந்த அம்மாவை உனக்கு அடையாளம் தெரியுதாடா, கண்ணே ?'

'குதிரை சவாரி செய்யணுமா...... டக், டக், ஸார்வேக் குதிரை...... கப்......கப்......கறுப்புக் குதிரை...'

வர வர, பையன் ஆராட்டுகளையும் உதறித் தள்ள ஆரம்பித்தான்.

அவள் என்ன செய்தும் குழந்தையின் முகத்தில் புன்னகை அரும்பச் செய்ய இயலவில்லை

சோகத்தின் உருவாய், பிஞ்சிலேயே வெம்பியதாய், குழந்தை அவள் மடியிலே கிடந்தது. அதன் வர்க்கத்திற்குரிய சுமை முழுவதையும் அது ஒனறே தாங்க முடியாமல் சுமக்கும் தோரணையில் கிடந்தது.

'என் கண்ணு வளர்ந்து சமர்த்தாகிப் பெரியவனுவானும். செம்படவனுகி ஆழ்கடலிலே போய் வெள்ளி நிற மீன்களை அள்ளி வருவானும். அம்மா நான், அவற்றைச் சுத்தம் செய்து வெயிலிலே காயப்போடு வேனும்.'

அவளது இந்தப் பாராட்டும் குழந்தைக்குப் பிடிக்கவில்லை. இங்கெ லுக்கு அழுகை பொங்கியது. பொருமினுள். திடீரெனப் புதிய யோசனை ஒன்று மின்வெட்டியது. கள்ளங் கபடற்ற சிறு யோசனை.

'அம்மா அவள் பையனை அழகிய ஆடைகளால் அலங்கரிக்கப் போகிருளாம். ஊதா ரிப்பன்களும், லேஸும் வைத்துத் தைத்த கவுன் போடப் போகிருளாம்.'

உவகை காரணமாக உடலிலே ஒரு கிளுகிளுப்பு, உற்சாகமாகக் கைதட்டல், எல்லாம் முடிந்து அவள் எழுந்து சின்ன எஜமானன் ஆடைகள் வைத்திருந்த டிராயர் கதவைத் திறந்து துழாவத் தொடங்கினுள். சின்னச் சின்ன உடைகளை எடுத்து எறிந்து தரையில் பெருங் குவியலாகக் குவித்தாள். பட்டு, உல்லன், பின்னல், ஜரிகை வைத்துத் தைத்த உடைகள், சிறு ஸ்டாக்கிங்குகள், துப்பட்டிகள், கால் சட்டைகள் எல்லாம் எடுத்தெறியப்பட்டன. அவற்றை எடுத்துக் குழந்தைக்கு அணிந்து பார்த்தாள். ஒன்றுவது மனதிற்குப் பிடிக்க வில்லை. டிராயர் முழுவதையும் கொட்டித் தீர்த்தாள். ஒரு ராஜா வீட்டுக் குழந்தைக்குப் போடுவது போல பொன்னிற ஆடை போட வேண்டும் என்று எண்ணினுள். கண்ணாடிமுன் நின்று அலங்கரித்துக் கொள்ளும் யுவதியைப் போல உற்சாகத்துடன் விளங்கினுள். தன்னுடன் விளையாட ஒரு பொம்மைக்கு அலங்காரம் செய்யும் சிறுமி மாதிரி குழந்தைக்கு அலங்காரம் செய்தாள்.

ஒரு வாறு ஆடை அணிவிப்பு முடிந்தது. போக்கிரிப் பயல்! எவ்வளவு ஒயிலாக, ஒய்யாரமாக விளங்குகிறன். அவள் கைகளுக்கிடையில் உல்லாச நடனமல்லவா ஆடுகிறன். அப்பொழுது அவனைப் பார்க்கும் யாராவது அவன் ஒரு அடிமையின் மகன்—வேலைக்காரியின் பிள்ளை— என்று சொல்ல முடியுமா? ஒரு ஏழை, சமூகத்தால் புறக்கணிக்கப் பட்டவன் என்று தீர்மானிக்க முடியுமா? சின்ன யஜமானனைப் போலல்லவா இருந்தான்! குழந்தைகள் இரண்டையும் தொட்டிலில் பக்கத்தில் பக்கத்தில் படுக்கவைத்து ஒப்பிட்டுப் பார்த்தாள். வித்தியாசம் எதுவும் புலப்படவில்லை. அசப்பிலே பார்த்தால் யாரும் ஏமாந்து போகக் கூடும். இரண்டு குழந்தைகளும் அவ்வளவு எழிலாகக் காட்சி யளித்தன.

தன் குழந்தையின் கரத்தை முத்தமிட்டாள். பவ்யமாகத் தலை வணங்கி, 'கருணைமிக்க பிரபுவே, குட்மார்னிங்!' என்றுள்.

இனி என்ன செய்வது? உடையை மாற்றுவதா? குழந்தையின் சொந்த உடைகள்—கந்தல் துணிகள்—படுக்கை முன்பு கிடந்தன. அவற்றைப் பார்க்க அருவருப்பாக இருந்தது. உடல் நழுக்கியது. அவற்றை விரல்களால் தீண்டக்கூட மனமில்லை. அவற்றின் நாற்றம்கூட சகிக்க முடியாததாக இருந்தது.

புதிய யோசனை ஒன்று உதித்தது. ஒரு குழந்தை கந்தலைக் கட்டிப் புரள, மற்றொன்று ஏன் பட்டுப் பட்டாடைகளிலே, பவிசாகக் காட்சியளிக்க வேண்டும்?

சிந்தனை உரம் பெறப் பெற மூளையே கிறங்குவது போலிருந்தது. இதற்கு முன் எப்பொழுதும் இத்தகைய எண்ணங்கள் எழுந்ததில்லை. கடவுளின் செயல்களை நிர்ணயிக்க யாரால் முடியும்? இருந்தும் ஒரு குழந்தைக்கு மிருதுவான பஞ்சணை, தொட்டில், வளர்ந்து ஓடியாடி விளையாட விசாலமான, வெளிச்சம் மிகுந்த ஹால்கள், உயர் ரகச் செருப்புகள்; ஒரு வாத்து ஈரலும் தேனும் வயிற்றை நிரப்பப் போதுமான நிலையில்கூட ஏராளமான உணவு எல்லாம் இருக்கும்போது, மற்றொன்று—அவளது சொந்தக் குழந்தை—புகைப் போக்கி இல்லாததால் புகை மண்டி, கரி அடைந்த சுவர்களுடன் கூடிய குச்சில் கிடந்து குமைய வேண்டியிருக்கும் நிலை ஏன்? இன்னும் சில வருஷங்களில் கொஞ்சம் பெரியவனான பின்பு,ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ ஸார்வே கடற்கரையில் ஆழமில்லாத இடங்களில் ஒதுங்கும் முள் முதுகு மீன்களை விரட்டி விளையாடலாம். பின்பு அடிமையாக வேண்டியதுதானே!

அடிமையாகி, முதலில் மேய்ச்சல் காடுகளில் ஆடு மேய்ப்பவனாகவோ, பண்ணைப் பசுக்களின் பின்னால் திரிபவனாகவோ, மழையில் நனைந்து, குளிரில் நடுங்கிக் காலங் கழிக்க வேண்டும். பின்பு பண்ணையில் வேலை செய்யவேண்டும். எல்லாம் பச்சைப் பாலகனா யிருக்கும்போதே, பூரண வளர்ச்சி பெறாத பருவத்தில், முழு ஆள் வேலையைச் செய்ய வேண்டும். கலப்பை ஓட்டுதல், குழி எடுத்தல், பரம்படித்தல் போன்ற வேலைகளைச் செய்யவேண்டும். அதற்குப் பிரதியாக குந்த ஒரு குடிசை, ஒரு குண்டு நிலம் எல்லாம் கிடைக்கும். ஆனால் சொந்தமாக அல்ல. பண்ணையாருக்கு அதிகமான வரி கொடுக்க வேண்டும். யஜமானுக்கு இஷ்டமானபோது அவன் வெளியே விரட்டப்பட்டு வேறு யாருக்காவது குடியானவனாக வேலைசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

திகைப்பு தேங்கிய கண்களுடன் இரு குழந்தைகளையும் வெறித்து நோக்கியபடி நின்றாள் அவள். தாய்மை உணர்வு எதிர்காலத்தை ஊடுருவி நோக்கும் ஒரு சக்தியை அளித்தது அவளுக்கு. அவள் ஒரு தீர்க்கதரிசி—ஞானியானாள். அவளது மைந்தனின் விதியை எண்ண அவளது இதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

சட்டென்று அவள் அந்தரங்கத்தில் வெறுப்புணர்ச்சி பீறிட்டது. என்னத்தை வெறுக்கிறோம் என்பது அவளுக்குத் தெரியாது. இருந்தும் ஒரு கடுமை யுணர்வு, பழி வாங்கவேண்டும் என்ற வெறி எழுந்தது. அவள் தனக்காக எதையும் கோரவில்லை. தான் புழுதியில் கிடந்து மிதியுண்ணத் தயாராக இருந்தாள். ஆனால் அவனுக்கு—அவள் மைந்தனுக்கு — தரமான வாழ்க்கை வேண்டுமென விரும்பினாள்.

உடனே, சட்டென்று, அவள் தனது யஜமானனது செல்வக் குழந்தையைத் தொட்டிலை விட்டுத் தூக்கி, அலங்கார உடைகளை இரக்கமற்ற உள்ளத்தினளாய், முரட்டுக் கரங்க

ளால் பற்றிக் கழற்றினுள். ஜன்னி வேகத்தில் கரங்கள் வேலை செய்தன. ஆகாய நீல வர்ண ஆடைகள், உள்ளங்கி எல்லாம் கழற்றி வீசப்பட்டன. அவன் பிடியில் சிக்கிய குழந்தை வீரிட்டது. அத்தகைய முரட்டுத்தனம் அதற்கு பழக்கமில்லை.

தன் குழந்தையின் கந்தல்களை அதற்குச் சூட்டினுள். அவை படு கந்தல். ஒன்றிரண்டு இடங்களில் மட்டுமே தொங்கின. கிழிந்த துணி, அழுக்கேறிய சட்டை எல்லாம் சின்ன யஜமானனை அலங்கரித்தன. இவளது சாந்த—சோக இயல்புகளெல்லாம் க்ஷண நேரத்தில் கொடுங்குணமாக, இரக்கமற்ற தன்மையாக மாறி விட்டது.

பிரபுவின் குழந்தையைப் பார்த்துக் குலுங்கக் குலுங்க நகைத்தாள்.

'கந்தத் துணி பொம்மை! சோளக் கொல்லை பொம்மை! காக்கை வெருளி! எப்படி இருக்கு சுகம்! ஒரு அடிமையினுடைய ஆடையை ஒரு நாளைக்கு அணிந்து தூங்கிப் பாரு!'

சின்ன யஜமானனின் சீரழிவைக் கண்டு பெரிதும் மகிழ்ந்து போனுள் அவள். தனது வர்க்கத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அனைத்திற்கும் பழிவாங்கி விட்டதாக, நஷ்டஈடு பெற்றுவிட்டதாகக் கருதினுள். அவள் வாயிலிருந்து ஆபாச வார்த்தைகள் கிளம்பின. அத்தகைய வார்தைகளைக் கேட்கவே அருவருப்பாக இருக்கும் அவளுக்கு முன்பெல்லாம்.

இப்பொழுது அவளுக்கு அடக்க முடியாத கோபம். அந்தச் சமயத்தில் டியூ வியர்த்து, விறு விறுத்து, முகம் வெளுத்து, பயந்த தோற்றத்துடன் பாய்ந்து வந்தாள்.

'எல்லாம் தொலைஞ்சுது. எஜமானர்கள் எதிர்பாரா வகையில் திரும்பி விட்டார்கள். மாடிப்படிக்கு வந்துவிட்டார்கள்'

இங்கெலின் சிந்தனையில் தெளிவு பிறந்தது. குளிர்ந்த ஜலத்தைத் தலை மீது கொட்டிய மாதிரி இருந்தது. வெறியும் கொதிப்பும் தணிந்து, க்ஷணமே மறைந்தன.

'இன்னெரு குழந்தையை எங்கே ஒளிப்பது?' எனப் பறந்தாள் டியூ. 'கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்ருள்.

சின்ன யஜமானைப் பார்த்ததும் அலறிவிட்டாள்.

'முதுகுத் தோல் பிஞ்சு போகும். இங்கெல், எனக்கு என்ன லாபம் வருவதாயிருந்தாலும் நான் உன்கூடச் சேரமாட்டேனம்மா!'

இங்கெல் படுக்கையில் விழுந்தாள். காது அடைத்தது. கண்கள் இருண்டன. சுற்றிலும் நடப்பதைப் பற்றிய பிரக்ஞை இழந்தாள். பாதி மூடிய கண்களுடன், நெற்றியில் வியர்வை அரும்ப, அவளுள் ஏதோ போராட்டம் நடத்துவதாகப் பட்டது.

'ஜல்தி. எஜமானி வருகிருள். வராண்டாவில் காலடிச் சத்தம் கேட்கிறது.'

இங்கெல் எழுந்தாள். ஒரு முடிவுக்கு வந்து விட்டாள் அவள்.

'எஜமானி வரட்டும்.' அவள் மெதுவாகவே பேசினுள். ஆனல் குரலில் பதட்டம் இல்லை. எஜமானி என்னை அடித்துத் தெருவில் துரத்தலாம். என்னைச் சவுக்கால் சாடலாம். வீட்டை விட்டு விரட்டலாம். நான் என் குழந்தையை எடுத்துக்கொண்டு வெளியேறி விடுவேன்.'

முதல் "குளோஸ் அப்"

சினிமாவில் முதல் முதலில் "குளோஸ் அப்" எடுத்த காட்சி, ஒரு மனிதன் தும்முவது தான்.

மற்ற சரக்குகளை ஆர்டர் பண்ணித் தருவித்துக் கொண்டது போல தமக்கு வேண்டிய மனைவியையும் ஆர்டர் பண்ணித் தருவித்துக் கொண்டார் ஒரு வியாபாரி.

பார்ஸலில் வந்த மனைவி

o

வி. பி. பி.

ஜமைக்கா தீவில், ஒரு வியாபாரி இருந்தார். அவர் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்து ஒரு மனைவி தேவை என்று லண்டனிலுள்ள தம் ஏஜெண்டுக்கு ஒரு ஆர்டர் கொடுத்தார்.

“விவரம்: நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன். இங்கே எனக்குத் தகுந்த பெண் கிடைக்கவில்லை. அதனால், அடுத்த கப்பலில் சுமாரான உயரமுள்ள, நல்ல கட்டு மஸ்தான பெண்ணை அனுப்பி வைக்கவும். அவள் முகம் சுமுகமாக இருக்கவேண்டும்; குணத்தில் சாதுவாகவும் நடத்தையில் களங்கமின்றியும், இங்குள்ள சீதோஷ்ண ஸ்திதியைத் தாங்கிக் கொள்ளும் சக்தியும் உள்ள பெண்ணாக இருக்கவேண்டும்.''

லண்டன் ஏஜெண்ட் பல இடங்களிலும் தேடி, கடைசியில் கௌரமான ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைப் பிடித்தார்.

தன்னுடன் ஏஜெண்டு கொடுத்த சர்டிபிகட்டையும் கொண்டு ஜமைக்காவுக்குச் சென்றாள் பெண்.

“விவரம்: ஆர்டர் படிக்கு நல்ல ரகமாகவும், ரூபலக்ஷணமாகவும், நல்ல நிலைமையிலும் உள்ள 21 வயதுப் பெண் அனுப்பப்பட்டிருக்கிறது. —ஏஜெண்ட்.''

அத்துடன் பாதிரியாரிடம் நன்னடத்தைப் பத்திரமும், பக்கத்து வீட்டாரிடம் அதை ஊர்ஜிதம் செய்யும் கையெழுத்துக்களும் வாங்கிக் கையோடு கொடுத்தனுப்பியிருந்தார் ஏஜெண்ட். அவளுடைய தேகநிலை நன்றாக இருக்கிறது என்பதற்கு நான்கு பெரிய டாக்டர்களும் சேர்ந்து சர்டிபிகட் கொடுத்திருந்தார்கள்.

கப்பலில் வந்து இறங்கினாள் பெண். வியாபாரியும் நேரில் வந்து வரவேற்றார். அவரிடம் “ஐயா, என்னிடம் தங்களுக்கு ஒரு பில் கொடுத்து அனுப்பப் பட்டிருக்கிறது. அதற்குரிய பணத்தைக் கட்டிவிடுங்கள்'' என்று சொன்னாள். மேலும் ஏஜெண்ட் கொடுத்தனுப்பியிருந்த கடிதத்தை காட்டினாள். அதன் மறுபுறத்தில் “இந்தக் கடிதம் கொண்டுவரும் நபர் தான் தாங்கள் தங்களுக்காக ஆர்டர் பண்ணிய மனைவி'' என்று எழுதியிருந்தது.

வியாபாரியும் பில்லுக்குரிய பணத்தைக் கட்டி மனைவியை எடுத்துக் கொண்டார்.

வாழ்க்கையைப் புரிய வைப்பதுதான் தத்துவம். கார்ல் மார்க்ஸ் இந்தத் தத்துவ விசாரணையில் புதிய கண்ணோட்டத்தைக் கண்டவர். ஊன்றிப் பார்த்தால் இந்தப் புதிய கண்ணோட்டத்தினால்தான் மனிதனை மனிதனாக வாழச் செய்ய முடியும் என்று தோன்றும்.

கலா சிருஷ்டி

○

கார்ல் மார்க்ஸ்

இயற்கையின் அசேதனப் பொருட்களைத்திரட்டி பிண்டமாக உருவாக்கி விடக்கூடிய மனிதத் திறமையின் மூலம், மனிதன் தன்னைச் சுற்றியுள்ள ஜீவராசிகளை சரியாக உணர்ந்து கொள்கிறான் என்பது தெளிவாகிறது; அதாவது தன்னிடம் பழகுவது போலவே, சுற்றியுள்ள ஜீவராசிகளிடம் பழகவும் ஜீவராசியோடு பழகுவது போலவே தன்னிடம் பழகவும் தெரிந்தவனே மனிதன் என்னலாம். மிருக வர்க்கமும் பொருள் உற்பத்தி செய்யத்தான் செய்கின்றது. தேனீ, எறும்பு முதலியவை கூடும், புற்றும் கட்டத்தான் செய்கின்றன; என்றாலும் அவை தமக்காகவும் தாம் பிறப்பிக்கும் ஜந்துக்களுக்காகவும்தான் கட்டுகின்றன. அதாவது அவை ஒரே காரணத்துக்காகவே இக்காரியத்தைச் செய்கின்றன. ஆனால் மனிதனோ சர்வாபீஷ்டமாகச் செய்கின்றான். தன் சரீரத் தேவைக்காக மட்டுமே மிருகங்கள் பொருள் உற்பத்தி செய்கின்றன. மனிதனோ தனது சரீர தேவைகளுக்குட்பட்டுச் செய்யவில்லை. அதற்கு மாறாக, அந்தத் தேவைகள் இல்



லாத போதுதான் இம்மாதிரி படைப்புத் தொழிலில் முனைந்து இறங்குகிறான். பிராணிகள் தம்மைத் தான் படைக்கின்றன; மனிதனோ இயற்கைக்கே புத்துயிர் கொடுக்கிறான். பிராணிகளின் படைப்பு அவற்றின் சரீரத்தையே சேர்ந்தவை. மனிதனால், தான் படைத்தவற்றையே எட்டநின்று காண முடிகிறது. மிருகங்களோ

தேவைக்கும் அளவுக்கும் தக்கபடி தான் படைக்கின்றன. மனிதனே ஜீவராசிகளையும், பிற பொருளையும் அளந்தறிந்துகொண்டுதான்படைக்கிறான். எனவே தான் மனிதன் அழகின் நியதிகளுக்கு உட்பட்டு படைப்புத் தொழில் புரிகிறான்.

என்வே குரங்கிலிருந்து மனிதனான பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நமது முன்னோர்கள் எப்படித் தமது கைகளை உபயோகிக்கக்கற்றுக்கொண்டார்கள் என்ற விஷயமும் லகுவில் தெளிவாகிவிடும். மிருகத் தன்மை பெற்ற பண்டைக் காட்டு மிராண்டி யிடம் கூட, மிருகங்களிட மில்லாத உயர்ந்த தன்மையை உணர முடியும். கட்டையைச் செதுக்கி முதன் முதல் கத்தியாக்கத் தெரிந்த காலத்துக்கு முன்பும், சரித்திரத்தால் உணர முடியாத ஒரு கால வரையறை கழிந்துபோ யிருக்க வேண்டும். என்றாலும் ஒன்று விளங்கிற்று: கைகள் விடுதலை பெற்றன. அதன் மூலம் படைப்பில் திறமையையும், சுத்தத்தையும் காணமுடிந்தது; பரம்பரை பரம்பரையாக இந்தப் படைப்புத் தொழில் மெருகேறி வந்தது.

ஆகவே கைகள் மட்டும் தான் தொழிலுக்குரிய கருவி என்பதல்ல. அதுவும் உழைப்பின் படைப்புத்தான். உழைப்பின் மூலமாகத்தான்—அதாவது தசைகளையும் மூட்டுகளையும் பலகாலமாக அசைத்து அசைத்துப் பார்த்து, அந்த அசைவில் முன்னேற்றம் கண்டு, அதிலுள்ள குறைகளை அனுபவப் பரீட்சை மூலம் களைந்துதான்—கைகளை உழைப்புக்குப் பயன்படுத்த முடிந்திருக்க வேண்டும். அப்படிப் பாரம்பரை பரம்பரையாய் கைகள் பழக்கப் பட்டு வந்ததாலேயே ராபேலின் படங்களையும், தோர் வால்ட்சன் சிலைகளையும் பகானினியின் சங்கீதத்தையும் சிருஷ்டிக்க முடிந்தது.

சங்கீதம் சங்கீத உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதுபோல், சுயம்பான சங்கீதம் சங்கீதம் தெரியாத காதுக்கு அர்த்தமற்றதாகப் படுவதுபோல், என் அறிவாற்றலின் சக்தியைப் பொறுத்தே பொருள்கள் எனக்கு அர்த்தமுள்ளதாகப் பட முடியும். எனவே சமுதாய உணர்ச்சி பெற்ற மனிதர்களின்

முகத்திலா?

ஒரு ஆங்கிலேயர் காட்டுப்புறத்துக்குப் பயணம் போயிருந்தார். போன இடத்தில் அவரது க்ஷவரக் கத்தி உடைந்து போய் விட்டது. எனவே அந்த ஊரிலுள்ள நாவிதனிடம் சென்றார். அவன், அவர் முகத்துக்குச் சோப்பு போடுமுன், பிரஷில் எச்சிலைத் துப்பிக் கொண்டான்.

இதைக் கண்ட அந்த ஆங்கிலேயர், "என்னப்பா. எல்லோருக்குமே பிரஷில் துப்பித்தான் க்ஷவரம் பண்ணுவாயா?" என்று கேட்டார்.

அதற்கு அவன், "இல்லையில்லை. இப்படிச் செய்வது வெளியூர்க்காரர்களுக்கு மட்டும் தான்—உள்ளூர்க்காராயிருந்தால், முகத்திலேயே துப்பி விடுவேன்!" என்றான்.

—காமன்ஸ் சபையில்
ஒருவர் சொன்னது.

சுந்தரி பாய் லக்ஸ் டாய்லட் சோப்பின்

புதிய பரிமளத்தை விரும்பும் இன்னுமொரு நட்சத்திரம்

அவர் கூறுவதாவது...

"மிக கவர்ச்சிகரமானது லக்ஸ் டாய்லட் சோப்பின் இந்த புதிய பரிமளம்"

சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

LTS. 209-50 TM

கேசரியின்
மூன்று பிரசித்த
மருந்துகள்

★

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

மலடு, சங்காதோஷம், கீல்வாயு தூக்கமின்மை, அஜீரணம், மலச் சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி, முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச் சிக்கல், மந்தமான மூளை, பல வீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல் குலைக்கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்

கேசரி குடீரம் லிட்,
ராயப்பேட்டை, மதராஸ் 14.

உங்களுடைய ஆரோக்கியத்திற்கு உதவியாக உள்ள நல்ல பழக்கங்களை விருத்தி செய்யுங்கள். பற்களையும் ஈறையும் நன்கு காப்பாற்ற முயற்சிப்பது நல்ல பழக்கம். இதற்கு ஓர் நல்ல பற்பசை தேடிக்கொள்வது அவசியம். **நீம் டூத் பேஸ்ட்** ஓர் உயர்ந்த பற்பசை. வேம்பின் சத்தும், மற்றும் உயர்ந்த மூலிகைகளும் கொண்டு தயாரிக்கப்பட்டது.

உணர்ச்சிக்கும், சமுதாய உணர்ச்சி யற்றமனித உள்ளத்துக்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. சங்கீத முணர்ந்த காதைப்போல், உருவ அழகை உணரத்தெரிந்த கண்ணைப் போல் தன்னுள்ளே தானியங்கும் புலனுணர்ச்சி, சுற்றுச் சார்பின் மூலம் வளம் படுகிறது. சுருங்கச் சொன்னால், மனிதன் ஆனந்திக்கக் கூடிய புலனுணர்ச்சிகளில் ஒரு பங்கு மனித சக்திகளால் வளர்க் கப்பட்டதும், மறுபங்கு படைக் கப்பட்டதும் ஆகும். ஐம்புலனும் போக, ஆறுவது புலன் என்று சொல்லப்படும் அறிவும், (மனோ பீஷ்டம், காதல் முதலியன) அதா வது மனிதப் புலனுணர்ச்சிகள் அனைத்தும், புலனுணர்ச்சிகளின் மனிதத்தன்மை அனைத்தும் மனி தன் சிருஷ்டித்த பொருள்களின் மூலம், மனிதத்தன்மை யென்ற இயற்கையின் மூலம் புலப் படுத்தப் படுகின்றன.

இந்த ஐம்புலன்களின் படைப் புத்தான் இன்றுவரை உள்ள உலக சரித்திரத்தின் படைப்பு. அனுப வார்த்தமான தேவைகளால் கட் டுப்படுத்தப்பட்ட புலனுணர்ச்சிக்கு அதிகப்படியான அர்த்தம் கிடை யாது. பட்டினி கிடக்கும் மனித னுக்கு சோறு, சோறு போல் தோன்றாமல், உணவு என்ற புலப் படாத அருவமாகத் தோன்று கிறது. இதனால், மிருகங்கள் உணவுண்ணுவதற்கும், பட்டினி கிடக்கும் மனிதன் உணவுண்ணுவ தற்கும் வித்தியாசமிருப்பதாகவும் கருத முடியாது. கவலைதோய்ந்து பட்டினி கிடக்கும் மனித உள்ளத் தில் ஆர அமரத் தின்னும் தன்மை இருக்காது. உலோக வியாபாரி எப்படி உலோகத்தின் அழகைக் கவனிக்காமல் மார்க்கெட் நிலவரக் கண்கொண்டு பார்க்கிறானோ அது போலத்தான். அவனுக்குத் தனிப் பொருள் ஞானமும் கிடையாது. எனவே மனித வாழ்விலும் இயற்கை வாழ்விலும் மனித உணர்ச்சிகளை வளர்ப்பதும் உணர்ச் சிகள் மனிதத்தன்மையைப் பெறச் செய்வதும்தான், லட்சிய, லோகா யத வாழ்வு இரண்டிலும் மனி தன் செய்ய வேண்டிய காரிய மாகும்.

*

இலக்கிய சேவை

"நான் இப்போது கதை எழுதுவதைத் தொழிலாகக் கொண்டிருக் கிறேன். தெரியுமா ?"

"அப்படியா ? ஏதாவது விற்றிருக்கிறாயா ?"

"ஆமாம். என் கடிகாரம், புத்தகங்கள், கோட் எல்லாவற்றையும் விற்று விட்டேன் !"

செய்யுங்கள்

கலைஞன் : நான் தங்கள் குடிசையை வர்ணத்தால் தீட்டலாம் என எண்ணுகிறேன். உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணையுண்டா?

குடிசைக்காரன் : கிடையவே கிடையாது. அதற்கும் வர்ணம் தீட்டி முப்பது வருஷமாகிறது !

—எ. இ. ஐ. லண்டன்.

நம் நாட்டின் எல்லைப்புறத்திலுள்ள ஆப்கானிஸ்தானத்தைப் பற்றிய குறிப்புகளைப் படியுங்கள்.

ஆப்கானிஸ்தானம்

○

விஸ்தீரணம்: 2,50,000 சதுரமைல்கள். ஜனத்தொகை: சுமார் ஒரு கோடி இருபது லட்சம். தலைநகரம்: காபூல்

இயற்கை வளமும், பண்டைச் சிறப்பும் பெற்ற இந்த நாட்டின் வழியாக பழைய காலத்திய பிரதானமான யாத்திரா மார்க்கங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. இந் நாட்டின் நகரங்களெல்லாம் ஒரு காலத்தில் கலாசாரத்தின் மத்திய ஸ்தானங்களாக இருந்தன.

இந்தியாவுடன் பண்டைத் தொடர்பு கொண்ட நாடு இது. இங்கே பௌத்த மடங்கள் இருந்ததன் அடையாளங்களும், இந்திய நாணயங்களும், சிலைகளும் காணக் கிடக்கின்றன.

இந் நாடு கடல் மட்டத்துக்கு 20,000 அடி உயரத்தில் இருக்கிறது. எல்லாம் பனி மூடிய மலைப்பாங்கான பிரதேசம்தான். இரவும் பகலும் சீதோஷ்ண ஸ்திதி சம்பந்தமாகத் தலைகீழாக வேறுபட்டிருக்கும். தென் பகுதியிலும், தென்மேற்குப் பகுதியிலும் குளிர் காலம் தாங்க முடியாதபடி குளிராகஇருக்கும்.

இந்நாட்டில் ஆடு வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், குதிரை வளர்த்தல் முதலியன முக்கியமான தொழில்கள். ஆட்டின் மாமிசமும், அதன் வாலிலுள்ள கொழுப்பும், அதன் பாலிலிருந்து தயார் செய்யும் தயிரும், வெண்ணெயும் இவர்களுக்கு உணவாகப் பயன்படுகின்றன. கம்பளி மயிரையும், ஆட்டுத் தோல்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இந் நாட்டின் கம்பளங்கள் மிகவும் பேர் போனவை.

இந் நாட்டின் நிலப்பரப்பில் பத்தில் ஒரு பாகத்தில் மட்டுமே விவசாயம் செய்யப்படுகிறது. அமு என்ற நதியின் பாசனம் பெரிதும் விவசாயத்துக்குப் பயன்படுகிறது.

தலைநகரான காபூல் ஒரு முக்கியமான வர்த்தக நிலயம். இங்கே தீப்பெட்டி, பொத்தான் முதலியன செய்கிறார்கள். தோல் பதனிடல், செருப்பு தைத்தல் முதலிய பல தொழில்கள் செய்யும் தொழிற்சாலைகள் இங்குள்ளன. சர்க்காரின் ஆயுதத் தொழிற்சாலையும், நாணயங்கள் தயார் செய்யும் அச்சு சாலையும் இருக்கின்றன.

இந் நாட்டில் சுரங்கப் பொருள்கள் ஏராளமாக இருந்தாலும் அவற்றை நல்ல முறையில் வளம் படுத்தவில்லை. செம்பு, ஈயம், இரும்பு, நிலக்கரி, பெட்ரோலியம்,

வெள்ளி, தங்கம் முதலியன இங்கு கிடைக்கின்றன.

பெரும்பாலும் மக்கள் பேசும் பாஷைகள் புஷ்டுவும் பாரசீக பாஷையும்தான். பாடசாலைகளிலும் இவற்றைக் கற்றுக் கொடுக்கிறார்கள். இவை தவிர, அரபு, ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, துருக்கி முதலிய பாஷைகளும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. தொழிற் பள்ளிக்கூடம், சித்திரக் கலாசாலை, வர்த்தகக் கல்லூரிகள் முதலியன இங்குள்ளன. 1932-ல் ஸ்தாபிக்கப்பட்ட காபூல் சர்வ கலாசாலையில், வைத்தியம், சட்டம், இலக்கியம், விஞ்ஞானம் முதலியன கற்றுக் கொடுக்கப்படுகின்றன. பாடசாலைகளில் ருஷ்ய பாஷையும், உருதுபாஷையும் கற்றுத் தாரவிட்டாலும், மக்களில் பெரும்பான்மையினர், முக்கியமாக வியாபாரிகள் அவற்றைப் புரிந்து கொள்ளுகிறார்கள்.

ஒரு ரசமான பந்தயம்

ஒரு ஸ்காத்லாந்துக்காரனும் ஒரு இங்கிலாந்துக்காரனும் ஒரு பந்தயம் வைத்துக்கொண்டார்கள். இங்கிலாந்துக்காரன் தன் புத்திசாலித்தனத்தை நம்பி பந்தய நிபந்தனைகளைத் தானே விதித்தான். "நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு நீ பதில் சொல்லத் தவறினால் எனக்கு நீ 12 அணா கொடுத்து விடவேண்டும். நீ கேட்கும் கேள்விக்கு நான் பதில் சொல்லத் தவறினால் நான் உனக்கு 15 ரூபாய் கொடுக்கிறேன்" என்று இங்கிலாந்துக்காரன் சொன்னான். ஸ்காத்லாந்துக்காரன் இந்த நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டு பின் வரும் கேள்வியைக் கேட்டான்:

"நூறு கால்கள் உடையது. அது பின் நோக்கிப் பறக்கும். அதை மடித்து சட்டைப் பைக்குள்ளும் வைத்துக் கொள்ளலாம். அது என்ன?"

பதில் சொல்லத் தெரியாத இங்கிலாந்துக்காரன், 15 ரூபாயைக் கொடுத்து விட்டான். பிறகு, "நீதான் அது என்ன என்று சொல்லு" என்றான்.

"எனக்குத் தெரியாது" என்று சொல்லி பந்தய நிபந்தனைப்படி 12 அணாவைக் கொடுத்து விட்டான், ஸ்காத்லாந்துக்காரன்!

—எல். எச். ஜே.

உதவி

மூன்று சாரணச் சிறுவர்கள் தமது மாஸ்டரிடம், "ஒரு கிழவி தெருவைக் கடப்பதற்கு நாங்கள் உதவி செய்தோம்" என்று சொன்னார்கள்.

"நல்ல காரியம்தான். மூன்று பேருமா உதவினீர்கள்?" என்று கேட்டார்.

"ஆனால், அவள்தான் தெருவைக் கடக்க விரும்பவில்லையே!" என்றான் அவர்களில் ஒருவன்.

—லியானார்ட் லையான்ஸ்.

'காந்தி மகான் கதை' சக்தி வெளியீடாக வந்திருப்பதை வாசகர்கள் அறிவார்கள். விட்ட குறையையும் பூர்த்தி செய்து விட்டார், ஸ்ரீ கோத்தமங்கலம் சுப்பு. தொடர்ந்து வெளிவரும்.

காந்திமகான் கதை

உத்தரகாண்டம்

○

கோத்தமங்கலம் சுப்பு

கல்கத்தாவில் காந்திஜீ

எங்கும் சுதந்திரம் என்பது பேச்சாய் இருந்திடும் தேதியிலே
எங்கும் பாட்டும் கூத்தும் முழங்கி இருந்திடும் தேதியிலே
ஆனந்தம் பரமானந்தம்என இருந்திடும் தேதியிலே
அய்யன் மட்டும் தனியேவந்தார் வங்கத்து வீதியிலே

தேசதேசமும் டில்லியை பாக்குது சிரிச்ச முகத்தோடு
தேசத்தலைவர் வங்கம்வந்தார் வெறிச்ச அகத்தோடு
பழிக்குபழியே வாங்கும் எண்ணம் பரவுவதைக் கண்டார்
பகைவர்க்கருளும் காந்திமகாத்மா பாரத்துயர் கொண்டார்

அழிக்கும் கொள்கைக் கடிப்படையாகிய பழிக்குபழி வாங்கல்
ஆகாதையா ஆகாதையா என்று அலறி நின்றார்
கல்கத்தாவில் இந்துமுஸல்மான் கலகச் சீமையிலே
காந்திமகானும் வந்திறங்கி காவல் காத்திட்டார்

சுதந்திரதினத்தில் சண்டைகள்பெருகி சோரை யோடுமென்றே
சொன்னவரெல்லாம் திகைச்சு விட்டார்கள் சுவாமியவர்கண்டே
காந்தியின் சிந்தை கருவூலமுமாம் கருணை ராஜாஜி
கல்கத்தாவின் ஆட்சி பொறுப்பை கையில் ஏற்றுக்கொண்டார்

காட்டுக்குதிரையை ஒட்டலகானை கையிலெடுத்தாராம்
கருணை வழியில் குதிரையோட்டவே கையிலெடுத்தாராம்
கண்ணன் காட்டிய வழியில் ஓட்டவே கையிலெடுத்தாராம்
காந்திமகானின் வழியிலோட்டவே கையிலெடுத்தாராம்

காந்திமகானும் ராஜாஜியும் கல்கத்தாவரவே
கலகம் கொடுமை கொள்ளை கொலையும் கதறியோடிப்போச்சு
சாந்தமகானை தங்கள் நடுவில் ஜனங்கள் கண்டதுமே
தாயும் பிள்ளையும் ஆனர் கட்டித்தழுவிக் கொள்ளலானர்

இந்தியர் முஸ்லீம் இருவருங்கூடி சுதந்திரம் கொண்டாடி
ஏழைபங்காளன் காந்தியின் நெஞ்சுக்கின்பம் தந்தார்கள்.
மப்புபோட்ட மானம்போலே தோணுது வங்காளம்
மழையும்காணோம் வெய்யிலும் காணோம் மலங்குது வங்காளம்

காந்திமகானும் இஸ்லாமானவர் காவிசெய்த வீட்டில்
கத்திப்பழிக்கு பயந்து ஓடியே காவிசெய்த வீட்டில்
வீட்டைவிட்டு ஓடிப்போக விரட்டப்பட்ட வீட்டில்
வேதனைப்பட்ட முஸ்லீம்ஒருவர் விரும்பித்தந்த வீட்டில்

முஸ்லீம் லீக்குத் தலைவராகிய சாயபுதன்னோடு
முஸ்லீம் இந்துவும் இருவரும் ஒன்றாய் இருந்துவரலானார்.
இஸ்லாமானவர் தெருவுக்குள்ளே இருந்துவந்தார் காந்தி
இஸ்லாமானவர் வீட்டுக்குள்ளே இருந்துவந்தார் காந்தி

இந்துவின்பேரால் கொடுமைசெய்ய இடமும் கொடுக்காமல்
இஸ்லாமானவர் தெருவுக்குள்ளே இருந்துவந்தார் காந்தி
இனத்தார் என்னைக் கொன்றதன் பின்னே இஸ்லாமைக்கொல்லும்
என்றே சொல்லி காந்திமகாத்மா இங்கிருக்க லானார்

மப்புபோட்ட மானம் குமுமறி மடமடமடவெனவே
மண்டைவெடிக்க இடியும் இடிச்சது மழையும் கிடையாது
தப்புந்தவறும் செஞ்சே பழகிய சண்டைக்காரக்கூட்டம்
தர்மரூபனை தாக்கிடவந்தது சண்டைக்காரக்கூட்டம்

காந்தியிருந்த வீட்டுக்குமேலே கல்லை யெறிஞ்சிட்டார்
கண்ணாடிக் கதவெல்லாம் உடைச்சு கலகம் செய்திட்டார்.
இங்கே நீயும் ஏன்வந்தாய் என இறைந்து கூச்சலிட்டார்
இஸ்லாமானவர் கையாளெனவே ஏந்தலை வைதார்கள்

நொந்த புள்ளைக்கு தாயைப்போலவே நோக்கமுள்ள காந்தி
நோப்பாளத்தைக் கண்டார் மனசு நொந்துபோகலானார்
என்னையடிச்சுக் கொன்றுபோடுங்கள் எதிரியென்றே கண்டால்
என்னவேண்டாலும் செய்யும் எனவே எதிரில் வந்துநின்றார்.

கோபக்காரக்கூட்டம் செங்கல் கொண்டே எறிந்தார்கள்
குணமலையாகிய காந்தியை செங்கல்கொண்டே எறிந்தார்கள்
மதின வழியில் நபி நாயகத்தை மக்கள் எரிந்தது போல்
மலரைத்தூவும் திருமுகமேலே கல்லாலெரிஞ்சிட்டார்

கடிமலர் தூவும் கருணைமுகத்தில் கல்லால் எரிஞ்சிட்டார்
காந்திமகானின் திருமுகமதிலே கல்லால் எரிஞ்சிட்டார்
கல்லும் பதறி துள்ளிஓடியே காந்தியைக்கொல்லாமல்
கண்ணாடிக் கதவின்மேல் மோதி கதறிவிழுந்ததுவாம்

கருணாமூர்த்தி காந்தியும் தன்னிரு கண்ணால் இதுதனையே
கண்டார் கண்டார் கல்லுச்சிலைபோல் நின்றார் நின்றாராம்
மதமும்கொண்ட யானைகிளம்பி மாவுத்தனைக்கொன்ற
மதவெறியிதனால் மானிடர் மாடாய் மாறுவதுங்கண்டார்

நாட்டிலே வாழும் மக்கள் எல்லாம் நல்லமுறை கெட்டே
நாயும் பூனைபோல வாழ நானும் சகிப்பேனே
பெத்தவளாகிய பாரதமாதா சித்தம்நோகாதோ
பெருமையைக்காண பிறந்த எந்தன் சித்தம் நோகாதோ

கல்கத்தாவில் என் கண்முன்னே காணும்கொடுமையெல்லாம்
காணச்சகியேன் உண்ணுவிரதம் கடைப்பிடிப்பேன் என்றே
உண்ணுவிரதம் பிடிச்சே நானும் கண்ணைமூடினலும்
உலகத்துயரம் காணுமல் நான் உயிர்விடுவேன் என்றே

அண்ணல் காந்தி புண்ணியமூர்த்தி ஆளப்பிறந்தமகான்
அகிம்சைவழியில் சுயராஜ்யத்தை ஆக்கித்தந்த மகான்
எண்ணங்குமுறி கண்ணுங் கலங்கி உண்ணுவிரதந்தான்
இருக்கத்துவங்க பொருக்குமோ தேசம் இருவரும் கூடினராம்

இந்தியர் முஸ்லிம் இருவரும்கூடி இழைந்து பலபேசி
இனியொருநாளும் வங்கந்தனிலே இல்லை சண்டையென்றே
தங்களுக்குள்ளே ஒத்துமைக்கமிட்டி தானுமமைத்தாராம்
ஷகீத் சாயபு முக்கர்ஜீயும் தானுமமைத்தாராம்

தூயவராகிய காந்திமகானும் துவங்கிய நாலாநாள்
நேயங்கண்டு உண்ணுவிரதம் நிறுத்திவிட்டோமென்றார்
உண்ணுவிரதந் தன்னை நிறுத்தி உடம்பு தேறுமுன்னே
ஓடிவந்தாராம் டில்லிப்பட்டணம் ஓங்கி எரியக்கண்டே

டில்லியில் கலகம்

ஆனைகுந்தி பட்டிணமென்பார் அஸ்தின புரியென்பார்
ஆண்டுபழகுமூர் என்றும் சொல்வார் அழகாபுரியென்பார்
அந்தநாள்முதல் இந்தியாவுக்கு அதுவே தலைநகராம்
அந்தவூர்தான் இன்றும் நமது அழகிய தலைநகராம்

அக்பர்பாதுஷா ஆண்டவூர் அது அஸ்தினபுரிநகரம்
அவுரங்கசீப்பும் தாண்டவம் போட்டதும் அஸ்தினபுரிநகரம்
இந்து முஸ்லிமும் ஒன்றாயிருந்தது அஸ்தினபுரிநகரம்
இரண்டுபிரிச்சி வெள்ளையராண்டதும் அஸ்தினபுரிநகரம்

சத்தியவாக்கு அரிச்சந்திரனும் தர்மபுத்திரன்தானும்
சாமிகோவிலை தகத்து எறிஞ்ச கஜினமுகமதுவும்
ஆண்டு இருந்த ஊராமையா டில்லிப்பட்டிணமும்
ஆயிரம் ஆயிரம் ராஜாங்கத்தை ஆண்டது அவ்வூரு

எத்தனை அரசோ பார்த்தது அய்யா இந்த டில்லிநகரம்
அத்தனைக்குமேல் அழியாதிருப்பது அந்த டில்லிநகரம்
ஆனை சேனையும் குதிரையும் கொடியும் ஆயிரலக்ஷமுமாய்
அழிந்துபோயும் பின் அழியாதிருப்பது அந்த டில்லிநகரம்

மணிமுடியெல்லாம் டில்லிப்பட்டிண மண்ணில் பார்த்திடலாம்
மன்னவர்வாழ்வை டில்லிப்பட்டிண மண்ணே கதைசொல்லும்
கோபுரமாயிரம் கண்டதுமுண்டு டில்லிபட்டிணமே
கோரிகளாயிரம் கண்டதுமுண்டு டில்லிபட்டிணமே

நாலுவேதமும் முழங்கினதுண்டு டில்லிபட்டிணத்தில்
நமாசு ஓதி வணங்கியதுண்டு டில்லிபட்டிணத்தில்
கிரந்தாசாகிப் முழங்கியதுண்டு டில்லிபட்டிணத்தில்
கிருஸ்தவவேதம் கேட்டதும் உண்டு டில்லிபட்டிணத்தில்

பாலியும் இந்தி நாகரி தமிழும் பாரதவடமொழியும்
ஆலிம் அரபு ஆங்கிலமொழியும் அரசுசெலுத்துமூராம்
துரியோதனனும் ஆண்டதுஉண்டு துச்சாசனனும் ஆண்டதுஉண்டு
விதுரமகானும் இருந்தது உண்டு வேதமுதல்வனும் வந்ததுண்டு

அந்த ஊரிலே இந்துமுஸ்லீமும் அடிச்சுக்கொண்டாகள்
அண்ணன் தம்பியுமாக இருந்தவர்கள் அடிசசுக்கொண்டார்கள்
வந்த இடத்தில் பழிக்குப்பழியே வாங்கநினைத்திட்டார்
வாழும் முஸ்லிம் பக்கள் பலரை வதைக்க நினைத்திட்டார்

வந்தமக்களின் கொடுமையைக்கேட்டு இருந்த மக்கள் தாமும்
வாழும் முஸ்லிம் மக்களையே பழிவாங்க நினைத்திட்டார்
பாகிஸ்தானை தாயென நம்பும் பாபிகள் சிலமுஸ்லிம்
பாலாஈட்டி கத்தி துப்பாக்கி பதுக்கிவைத்துக்கொண்டார்

எங்குபார்த்தாலும் இந்துமுஸ்லிம்கள் கலகம் கலகமய்யா
எரியுது கோயில் எரியுது பள்ளி எங்கும் எரியுதையா
நாளும் பொழுதும் கலகம் கலகம் நகரெங்கும் கலகம்
நமாசு இடத்தில் கோயில் குளத்தில் நடக்குதையா கலகம்

ஆளும் பணமும் பொருளும் பொன்னும் ஆயிரமாயிரமாய்
அடித்துக்கொண்டே அழிந்ததையா அஸ்தின புரிநகரில்
காந்தி மகானும் டில்லிப்பட்டணம் கடுகி ஓடிவந்தார்
சாந்தியுடன் தான் வாழும் என்று ஜனத்தைப்பார்த்துச்சொன்னார்

எந்தப்பக்கமும் இந்துமுஸ்லீமில் இணங்கிவராமல்தான்
இருவர் தானும் காந்தியின் கண்முன் இடும்புபேசலானார்.
ஹைதிராபத்தில் இந்துமுஸ்லீம்கள் அடித்துக் கொண்டார்கள்
அஹமதாபாத்தில் இந்துமுஸ்லீம்கள் அடித்துக் கொண்டார்கள்

காஷ்மீரத்தில் கள்ளக்கூட்டம் காட்டுமாடுபோல
கலகம் கொள்ளை செய்யப்புகுந்து கலக்கிப்போடலானார்
கொள்ளைக்காரன்கூட்டத்துக்கு குண்டுமருந்தெல்லாம்
கொடுத்தது பாகிஸ்தானம் ஆளும் கூட்டியனுப்பியதாம்

இந்தச் சேதியை இந்தியர் கேட்டு சிந்தை நொந்தார்கள்
இஸ்லாம் மக்களில் நல்லவர்கூட எதிரிகள் என்றார்கள்
எந்தப்பக்கம் திரிம்பிட்டாலும் இருதயம்குமிறிடவே
இந்துமுஸ்லீம்கள் அடித்துக்கொண்டார் இதனைக்கண்டதுமே

பிர்லா மாளிகைதன்னில் நடக்கும் பிரார்த்தனைக்கூட்டத்தில்
பெரியவராகிய காந்திமகானும் பித்தரைப்போல்நின்றே
சித்தம்நொந்து தேசமக்களை தீயவராகாமல்
சிந்தை களித்து வாழும் ஒன்றாய் சேர்ந்துவாழுமென்றார்

குரான்•ஓதக்கூடாதென்று கூச்சல்போட்டார்கள்
கோபங்கொண்டு காயிதமெழுதி குழப்பம் செய்தார்கள்
எம்மதமாயினும் சம்மதமப்பா ஈசன் ஒருவன்தான்
ஏசுவும் நபியும் எஜுரும் சாமமும் ஏற்றும்பொருள் ஒன்றே

*

மலேயாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து மக்கள் நடத்தும் போராட்டத்தின் சமீப காலத்திய வரலாறு இது. டாஸ் செய்தி ஸ்தாபன அறிக்கையின் சாரம்.

மலேயா போராட்டம்

○

பி. குரோவ்

மலேயா மக்கள் ஒரு வருஷகாலத்திற்கும் மேலாகவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடத்தி வருகின்றனர். ஆட்சியாளர்களின் முயற்சிகளை எல்லாம் முறியடித்துக் கொண்டு விடுதலைப் போராட்டம் மேலும் பல இடங்களிலும் பரவி வருகிறது. சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்குகிறது தொழிலாளர் வர்க்கம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் மலேயா ஒரு முக்கியமான காலனி (குடியேற்ற) நாடாகும். மலேயாவிலிருந்து ஏற்றுமதியாகும் தகரம், ரப்பர் முதலியவற்றின் விலைமதிப்பானது, இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதியாகும் சகல சரக்குகளின் விலைமதிப்பைவிட அதிகமாக இருக்கிறது என்பதை பிரிட்டிஷ் அதிகாரிகளே ஒப்புக் கொள்ளுகிறார்கள். 1948-ம்வருஷத்தில் மட்டும், மலேயாவிலிருந்து ரப்பர் ஏற்றுமதி செய்து பிரிட்டிஷ் வியாபாரிகள் பன்னிரண்டு கோடி டாலர் சம்பாதித் திருக்கிறார்கள். பிரிட்டிஷ் பத்திரிகைகளின் செய்திப்படியே பிரிட்டிஷ் முதலாளிக்கு மலேயா ரப்பர்த் தோட்ட வருமானத்தில் கிடைக்கும் லாபம் சமீபத்தில் இரட்டிப்பாகி யிருக்கிறது. சில கம்பெனிகளுக்கு 1947-ல் வாங்கிய டிவிடெண்டுகளைப் போல ஐந்து பங்கு கிடைத்திருக்கின்றன.

அதேசமயத்தில் மலேயாவின் பாட்டாளி மக்களுடைய வாழ்க்கை நிலைமையோ சகிக்க முடியாதபடி இருக்கிறது. வேலை செய்யவேண்டிய ஒப்பந்தக்காலமும், வாங்கும் சம்பளமும் சேர்ந்து, உடனடியாக முதலாளிகளிடம் தொழிலாளிகளைக் கடன் படும்படியாகச் செய்து விடுகின்றன. ஓய்வு என்ற நினைப்பே இல்லாமல், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கூடஇல்லாமல், தொழிலாளி ரப்பர்த் தோட்டத்திலோ அல்லது தகரச்சுரங்கத்திலோ முதலாளிக்கு அடிமைத் தொழில் செய்தாக வேண்டியிருக்கிறது.

இரண்டாவது மகாயுத்தம் முடிவதற்கு முன் மலேயா தன் உணவுக்குத் தேவைப்படும் அரிசியில் 40 சதவிகிதம் உற்பத்திசெய்தது; இப்பொழுதோ 30 சதவிகிதம் உற்பத்தி செய்கிறது. இதுமட்டுமின்றி, பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தங்கள் கொள்ளை லாபத்தை உத்தேசித்து, உணவு இறக்குமதியைக் கட்டுப்படுத்தி ரேஷன் அளவைக் குறைக்கமுயலுகிறார்கள். 1948 இறுதியில் பிரிட்டிஷ் காலனி மந்திரி சபை, நிலைமையைப் பரிசீலனை செய்துவிட்டு, பட்டினி கிடக்கும் ஜப்பானியர்களினுடைய உணவின் அளவைவிட மலேயா ரேஷன்

அளவு குறைவாக இருக்கிறது என்று தெரிவித்துள்ளது. 1938-ம் வருஷத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது, வாழ்க்கைபுள்ளி 400 சதவிகிதம் உயர்ந்துவிட்டது. ஆனல், கூலிவிகிதமோ 20 சதவிகிதம்தான் உயர்ந்திருக்கிறது. தரித்திரமும் பட்டினியும் பீடிக்க வருந்தும் மலேயா மக்கள் கஷ்டப்பட்டு உழைத்து வெள்ளை முதலாளிகளுக்கு செல்வம் சேர்க்கிருர்கள்.

மலேயாத் தொழிலாளிகள் இயக்கம் இரண்டாவது மகாயுத்தத்துக்குப் பின் மிகவும் விரிவடைந்திருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பின் முன்னணியில் கம்யூனிஸ்ட் கட்சி நிற்கிறது. யுத்தகாலத்தில் தோன்றிய அகில மலேயா தொழிற்சங்க சம்மேளனம் மலேயாவிலேயே மிகப் பெரிய ஸ்தாபனமாக இருக்கிறது. 1948-ம் வருஷமுடிவில் அதில் பல திறப்பட்ட இனங்களையும் சேர்ந்த தொழிலாளிகளின் பிரதிநிதிகளாக மொத்தம் ஐந்து லட்சம் அங்கத்தினர்கள் இருந்தார்கள்.

1946-ம் வருஷத்தில் மட்டும் சுமார் 3000 வேலை நிறுத்தங்கள் இங்கு நடைப் பெற்றிருக்கின்றன. 1948-ம் வருஷத் தொடக்கத்தில மற்றொரு பெரிய வேலைநிறுத்த அலைவீசியது. சிங்கப்பூர் துறைமுகத்தில் தொழிலாளர்களும், காரியாலய உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து நடத்திய வேலை நிறுத்தம் மிகவும் பெரியது. அதற்கு சிறிது காலத்திற்குப் பின் பிரிட்டிஷ் ரப்பர் கம்பெனிகள் இரண்டுக்குச் சொந்தமான ரப்பர்த் தோட்டங்களில் ஒரு வேலை நிறுத்தம் நடந்தது, சட்டபூர்வமான உரிமைகளுக்குப் போரா்டிய தொழிலாளிகளின் மீது கடுமையான அடக்குமுறையைப் பிரயோகித்தார்கள் பிரிட்டிஷ் அதிகாரிகள். அதற்குப்பதில் கூறும் முறையில் 24 மணி நேர பொது வேலை நிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்டது.

பொருளாதார நிலையைச்சீர்படுத்துவதற்காக மட்டுமின்றி காலனி ஆட்சியைத் எதிர்த்தும் மலேயாத் தொழிலாளி வர்க்கம் போராடுகிறது. 1948, பிப்ரவரியில், மலேயா மக்கள் மீது பிரிட்டிஷ் அதிகாரிகள் சுமத்திய காலனி அரசியல் முறைச் சட்டத்தை எதிர்த்து நிற்பதில், முன்னணியில் நின்றது தொழிலாளிவர்க்கம்.

1948, மே மாதம் முதல்தேதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைத்தது பொதுஜன எழுச்சிக்கு ஒரு சங்கேதமாகப் போய்விட்டது. தேசமெங்கும் பொது ஜனங்கள் எழுச்சி பெற்று இன்னும் போராடிக் கொண்டிருக்கிருர்கள். ஜனநாயகக் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் பாடுபடும் பாட்டாளி மக்களை பிரிட்டிஷ் காலனி ஆட்சியை எதிர்த்துப் போராட அழைத்தன. சிங்கப்பூரிலும், உள்நாட்டு ஜில்லாக்களிலும் வேலை நிறுத்தங்கள் நடந்தன. மலேயாத் தொழிலாளி வர்க்கத்தின் பிரதான ஆயுதமான ஒற்றுமையையும் ஸ்தாபனத்தையும் ஒழித்துவிட விரும்பி ஜனநாயக் கட்சிகள் மீதும், தொழிற் சங்கங்கள் மீதும், மிருகத்தனமான அடக்கு முறையை பிரிட்டிஷ் அதிகாரிகள் பிரயோகித்தார்கள். தொழிற் சங்கங்கள் சம்பந்தமாகப் பிறப்பிக்கப்பட்ட ஒரு புதுச்சட்டம் மலேயாத் தொழிலாளிகளின் உரிமைகளைப் பின்னும் அதிகமாகக் கட்டுப்படுத்தியது. கம்யூனிஸ்ட் கட்சி, அகில மலேயாத் தொழிற் சங்க சம்மேளனம், மற்ற ஜனநாயக ஸ்தாபனங்கள், முதலியவை சட்ட விரோதமாக்கப்பட்டன. தொழிற் சங்கத் தலைவர்கள் அங்கத்தினர்கள்—ஆகியவர்களுக்கு மரண தண்டனையும் சிறைவாசமும் வழங்கத் தலைப்பட்டனர். 1949-ம் வருஷத் தொடக்கத்தில் அரசாங்கக் கணக்குப்படியே, ஏழா

யிரம் தொழிற் சங்க அங்கத்தினர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். 1949, மார்ச்சு முதல் தேதியில் அகில மலேயா தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவர் கணபதியின்மேல் ஒரு கேஸை:ஜோடித்துக் கைது செய்தார்கள். மே மாதம் 4-ம் தேதியன்று குவாலாலம்பூரில் அவரைத் தூக்கிவிட்டார்கள். அதற்கு முதல் நாள், கணபதிக்குப் பிறகு தலைவராக வர வேண்டிய வீரசேனனை மிருகத்தனமாகக் கூர்க்கப் படைகளால் சுட்டுக் கொன்றார்கள். இந்த அடக்கு முறைகள், உலகெங்கும் ஜனநாயக உணர்ச்சியுள்ள பொதுமக்களின் கோபத்தைக் கிளறிவிட்டன.

ராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் மலேயாவின் முற்போக்கு சக்திகள்மீது அடக்குமுறைத் தாண்டவம் நடத்தும் அதே சமயத்தில், பிரிட்டிஷ் தொழிற் சங்கக் காங்கிரஸின் உதவியைக்கொண்டு, ஒவ்வொரு வழியிலும் தொழிலாளி வர்க்கத்தின் பலத்தைக் குறைக்க முயன்று வருகிறார்கள் பிரிட்டிஷ் அதிகாரிகள். போலித் தொழிற் சங்கங்களை சிருஷ்டித்து ஆதரவளிக்கிறார்கள். "தொழிற் சங்க கவுன்சில்கள்" என்று சொல்லப்படும் சங்கங்கள் இப்போது கிளம்பி யிருக்கின்றன. பிரிட்டிஷ் காலனி மந்திரி சபைக்குத் தானம் போடுகின்றன இந்தக் கவுன்சில்கள். இந்தத் தாக்குதல்களை எல்லாம் முறியடித்து, பிற்போக்கு சக்திகளை எதிர்த்துப் போராடி, அவர்களுடைய திட்டங்களைத் தகர்த்தெறியப் பாடுபடுகிறார்கள் தொழிலாளர்கள்.

மலேயாவின் பல ஜில்லாக்களில் உள்ள நிலைமை இன்னும் அபாயத்துக்கு இடம் கொடுப்பதாக இருக்கிறது என்று "டைம்ஸ்" பத்திரிகையே 1949, மே மாத மத்தியில் ஒப்புக்கொள்ளும்படி ஆகிவிட்டது. மலேயாவின் வடபகுதியில் பெரும் பகுதி பிரதேசம் புரட்சிக்காரர்களின் கீழ் இருந்து வருகிறது. இங்கே பிரிட்டிஷ் ஆட்சியாளரின் எஜமானத்துவம் என்றே குடி கிளம்பிவிட்டது. ஜோஹூர் பகுதி, வடக்கு போாக், பாஹாங் பிரதேம், மற்றும் பல ஜில்லாக்கள்—இங்கெல்லாம் ஆங்கிலேயர்களுக்கு நிலைமை சிரமமாக இருக்கிறது. மலேயா பெடரேஷனின் தலைநகரான குவாலாலம்பூருக்கருகே சண்டைகள் நடை பெறுகின்றன என்று பத்திரிகைகள் கூறுகின்றன. "பாதுகாப்புப் படைகள்" என்று சொல்லப்படும் படைகளுக்கு அந்த ஜில்லாவில் பெருத்த நஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் பாதுகாப்புக் கோட்டையாகிய சிங்கப்பூரிலும் கூட அவர்கள் நிலைமை பரிபூரணமான பாதுகாப்பாக இல்லை என்பதை அவர்களே உணருகிறார்கள்.

வெகுகாலமாகத் தங்களை நசுக்கிக் கொண்டுவந்த பிரிட்டிஷ் காலனி ஆட்சியாளர்களை எதிர்த்து, தங்கள் தேசீய சுதந்திரத்துக்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் மலேயா மக்கள் கஷ்டமான நிலைமைகளின் நடுவிலும் போராடிக்கொண்டு வருகிறார்கள்.

✲

அமெரிக்காவில் மூக்குப் பொடி

நியூ யார்க்கில் சிகரெட் விலை ஏற்றத்தை உத்தேசித்து மூக்குப் பொடி போட ஆரம்பித்திருக்கிறார்கள். முன்னால் விற்பனையானதை விட இப்போது மூன்று பங்கு பொடி செலவாகிறது. சிகரெட்டைவிட பொடி போடுவது ஆனந்தமாக இருக்கிறது என்கிறார்களாம் இரண்டையும் ருசித்த அனுபவ சாலிகள்.

வர்ணங்கள் மன உணர்ச்சிகளையும் பாதிக்கின்றன. வியாபார வளர்ச்சிக்கும் வர்ணங்கள் உதவி செய்கின்றன. வர்ண ஜாலத்தைப் பற்றிய இக்கட்டுரையில் அநேக விநோதமான உண்மைகளைக் காண்கிறோம்.

நிறங்களின் லீலா விநோதம்

ரோலண்ட் பிளாக்பர்ன்

சீன மக்களுக்கு சிவப்பு நிறத்தில் அபாரப் பிரியம்; ஏனெனில் அந்த நிறத்துக்கு நோயைக் குணப்படுத்தும் சக்தி இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் கருநீலமோ, வெள்ளை நிறமோ சீனர்களுக்குப் பிடிக்காது. ஏனெனில், அவை துரதிருஷ்டம் பிடித்தவை, துக்கமயமானவை என்பது அவர்கள் அபிப்பிராயம். இந்த வர்ண உணர்ச்சி உங்களுக்கும் எனக்குப் தெரியாமலிருக்கலாம். ஆனால், நமது வியாபாரிகளுக்கு நன்றாகத் தெரியும். உதாரணம் தருகிறேன். உலகத்திலேயே குண்டூசி செய்வதில் திறமை வாய்ந்ததும் பெயர் பெற்றதும் இங்கிலாந்துதான். ஆனால், சீனாவுக்கோ இங்கிலாந்திலிருந்து குண்டூசி போவதே அநேகமாக நின்றுவிட்டது. இங்கிலாந்துக் குண்டூசிகள் நல்லதாகவும் விலை சல்லிசாகவும் இருந்தாலும், சீனமக்கள் மட்டரகமான பிறநாட்டுக் குண்டூசிகளை அதிக விலை கொடுத்து வாங்கினார்கள். இந்தப் புதிருக்குக் காரணம் விளங்கவில்லை. கடைசியாக இந்தப் புதிர் விடுவிக்கவும்பட்டது. ஆங்கிலேயர் தமது குண்டூசிகளை கருநீலக் காகிதப் பட்டையில் குத்தி அனுப்பினார்கள்; பிறநாட்டாரோ சிவப்புப் பட்டையில் குத்தி யனுப்பிக் கொண்டிருந்தார்கள்—இந்த வர்ண பேதந்தான் சீனாவில் பிரிட்டிஷ் குண்டூசிகளுக்கு விற்பனை மந்தத்தை உண்டாக்கிற்று என்று கண்டு பிடித்தார்கள்.

வர்ணத்துக்கும் வர்த்தகத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. மங்கலான கருநீல நிறக்கார்களை தென் அமெரிக்காவில் விற்க முடியாது. அவர்களுக்கு பளபளப்பான கண்ணை உறுத்தும் சிவப்பு நிறமாவது, மஞ்சள் நிறமாவதுதான் பிடிக்கும். மிட்டாய் வியாபாரிகளுக்கு தமது மிட்டாய்களை சாதாரண வெள்ளைக் காகிதத்தில் சுற்றி வைத்தால் விற்பனையாகாது என்பது தெரியும். இதை முயன்று பார்த்து, தோல்வியும் கண்டார்கள். ஆனால், சர்க்கரை மிட்டாய் வியாபாரிகள் தமது மிட்டாய்களை சிவப்புத் தாளில் சுற்றி விற்றபோது நிறைய விற்பனையாயிற்று; ஏனெனில் சிவப்பு நிறம் செழிப்பையும், சத்தையும் புலப்படுத்துவது என்று ஜனங்கள் கருதுவதே காரணமாகும்.

வர்ணங்கள் உணவிலும், ஜீரண சக்திகளிலும்கூட தம் ஜாலவித்தைகளைச் செய்து விடுகின்றன. கண், மூளை, வயிறு மூன்றும் இது விஷயத்தில் ஒன்று சேர்ந்து உழைக்கின்றன. பார்க்கப் பார்க்க அழகாயிருந்தால், வயிறும் பசிப்பதுபோல் தோன்றும்; ஆனால் அதே வேளை உணவு எண்ணெய் பிழிந்த கூழ் போலத் தோன்றினால். [illegible] வயிறும்

அதை ஏற்பதில்லை; கண்ணும் மூளையும் ஏற்பதில்லை. ஒரு ஆலையின் உணவுண்ணும் அறையின் சுவரில் இளம் நீல வர்ணம் பூசப்பட்டிருந்தது. ஆனால் அங்கு சாப்பிட வந்தவர்கள் அங்கு மிகவும் குளிருவதாகச் சொல்லி, அதற்காக கம்பளிச் சட்டைகள் போட்டுக் கொண்டார்கள். ஆனால் அங்கு குளிர்ச்சி ஏற்படுவதற்கே காரணமில்லை. உஷ்ணமானி வைத்து பார்த்தால்கூட சீதோஷ்ண நிலையில் வித்தியாசம் காண முடியவில்லை. கடைசியாக ஒரு வர்ண நிபுணர் வந்து சேர்ந்தார். அந்த அறைச் சுவர்கள் ஆரஞ்சு வர்ணத்தில் பூசப்பட்டன; மேஜை விரிப்புகளும் திரைகளும் ஆரஞ்சு வர்ணமாயின. அதன்பின் யாருக்குமே குளிரும் உணர்ச்சி ஏற்படவில்லையாம்.

வர்ணத்துக்கு நமது திடமனத்தையும் அசைத்துவிடும் தன்மை உண்டு. மனத்தின் சந்துஷ்டிக்கும், சாந்திக்கும் வர்ணம் பெரிதும் உதவ முடியும். நமக்கு ஓய்வுவேண்டும் போது, நாம் பச்சை வயல் வெளிகளுக்குச் செல்கிறோம். பச்சை குளிர்ச்சியும் ஹிதமும் அளிக்கும் வர்ணம். பச்சை நிறத்தை கண்ணை உறுத்தாதபடி வெகுநேரம் பார்த்துக் கொண்டிருக்க முடியும்.

நவீன விஞ்ஞான வளர்ச்சியினால், செந்நீல வர்ணத்தின மூலம் தூக்கத்தை உண்டாக்க முடியுமென்றும், நீல வர்ணம் நரம்புகளை சமனப்படுத்தி இளமையையும் காத்துதவ முடியுமென்றும் கூறுகிறார்கள். சாதாரணமாக எட்டுநாள் கழித்து வளர ஆரம்பிக்கும் வித்துக்கள் நீல நிறத்தால், இரண்டே நாட்களில் வளர ஆரம்பித்து விடுவதாகக் கூறுகிறார்கள்.

நிறங்கள் சீதோஷ்ணத்தையும் உஷ்ணத்தையும்கூடப் பாதிக்கின்றன. ஒரு பெட்ரோல் கம்பெனி டாங்கியில், பல காலன் பெட்ரோல் எண்ணெய் ஆவியாகிக் குறைந்துவிட்டது. கோடை வெயிலால் இந்த நஷ்டம் ஏற்பட்டபோதிலும், டாங்கியில் எந்தவிதக் கோளாறும் இல்லை. எனவே வர்ண நிபுணர்கள் வரவழைக்கப்பட்டார்கள். அதன் பின்னர் அவர்கள் யோசனைப்படி டாங்கிகளை வெள்ளை வர்ணத்தால் பூசச் சொன்னார்கள். வெள்ளை வர்ணத்துக்கு சூரிய வெப்பத்தைத் திருப்பிவிடும் சக்தி இருப்பதால், அதன் பின்னர் பெட்ரோல் நஷ்டம் முக்கால் பங்கு குறைந்துவிட்டது. வர்ணத்தின் தன்மை பண்டைத் தெய்வ தத்துவங்களிலும் நம்பிக்கைகளிலும்கூட இடம் பெற்றிருக்கிறது. வெள்ளைப் பசுவைக் கண்டால், வட ஸ்காத்லாந்துக்காரருக்குப் பிடிக்காது; ஆப்பிரிக்காவில் வெள்ளைக் கோழிக் குஞ்சுகளை வனதேவதைகளுக்குப் பலி யிடுவார்கள். அராபியர்கள் எங்கேனும் புறப்படும்போது நெருப்பில் உப்பை எறிவார்கள்; அதனால் எழும் நீல நிறத்தீ நாக்குகள், துர்த்தேவதைகளை பக்கத்தில் வரவிடாமல் காப்பதாக நம்புகிறார்கள். பச்சை நிறத்துக்கு ஸ்காத்லாந்தில் மதிப்பு கிடையாது. கலியாணச் சமயத்தில் அது ஒரு அனுசாரமான நிறமாகக் கருதப்படுகிறது. கறுப்பு வர்ணம் பில்லி சூன்யத்தோடு ஒப்பிடப்படுகிறது.

இதேமாதிரி ஆண் பெண் பாலரிடமும் வர்ணப்பற்று வித்தியாசப்படுவதைக் காணலாம். ஆண்களுக்கு நீல நிறம்தான் அதிகம் பிடிக்கும்! அதற்கு அடுத்தபடியாக சிவப்பு பிடிக்கும். பெண்களுக்கோ சிவப்புத்தான் அதிகம் பிடிக்கும். நீலநிறம் அதற்கு அடுத்தபடியாகத்தான்.

*

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

ஆஸ்த்மாவை குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளவும்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY,

○ குழந்தைகள் முன்னேற்றத்திற்காக உலகத்திலேயே பெரு முயற்சி எடுத்துக் கொண்டவர் ஸ்ரீமதி மாண்டிசோரி.

○ இந்த வருடத்தில் சமாதானத்திற்கான நோபல் பரிசை மாண்டிசோரி அம்மையாருக்குத்தான் கொடுக்கும்படி உலகப் பேரறிஞர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீமதி மாண்டிசோரி

எழுதிய

குழந்தைமை ரகசியம்

★

விரைவில் வெளியாகும். ஸ்ரீ சி. ந. வைதீஸ்வரன் தமிழாக்கியது. ஸ்ரீ வைதீஸ்வரன் ஸ்ரீமதி மாண்டிசோரி கூட நெடுநாள் பழகி அனுபவம் பெற்றவர்.

★

இது சக்தி வெளியீடு

BOOKS IN ENGLISH

•

CAPITALISM, SOCIALISM OR VILLAGISM? By Dr. Bharatan Kumarappa, preface by Gandhiji Rs. 5, ECONOMY OF PERMENENCE By Dr. J. C. Kumarappa preface by Gandhiji Rs. 2, Studies in the Psychology of Sex by Havelock ELLIS Rs. 45, Rubaiyat of Omar Khayyam Rs. 1/8, Father Brown by G. K. Chesterton Rs. 1/8, Jeeves by P. G. Woodehouse, Rs. 1/8, Pride and Prejudice by Jane Austen Rs. 1/8, Freud His Dream and Sex Theoris by Joseph Jastrow Rs. 1/8, Treasure Island by R. L. Stevenson Rs. 1/8, Oliver Twist by Charles Dickens Rs. 1/8, Freedom Road by Howard Fast Rs. 1/8, Laugh with Leacock by Stephen Leacock Rs. 1/8, Four Great Comedies by Shakespeare Rs. 1/8, The Covered Wagon by Emerson Haugh Rs. 1/8, The Autôbiography of Benjamin Franklin Rs. 1/8, The Great Short Stories of de Mapassant Rs. 1/8, The Good Earth by Pearl Buck Rs. 1/8, The Pocket Treasury Rs. 1/8, Decameron by Boccaccio Rs. 1/8, Merriem - webster Pocket Dictionary Rs. 1/8, India and the International Crisis By Prof. K. J. M. Tharakan, M.A., As. 12, Cold Rice by K. Nagarajan Rs. 3, Five Plays by H. Chattobadyaya Rs. 1/8, Fancy Tales by Manjeri S.Isvaran Rs. 2, Angry Dust by Manjeri S. Isvaran Rs. 2, Naked Shingles by Manjeri S. Isvaran Rs. 2/8, Gandhism in the Atomic Age Rs. 2, Dedicated Life by Dr. Mrs. Muthulakshmi Reddi As. 8, The Fourth Avatar by Manjeri S. Isvaran Re. 1, Essentials of Gandhism by V. Swaminatha Sarma As. 12.

Postage Extra.

SHAKTI KARYALAYAM

P. B. No. 660. : : MADRAS - 14.

மகாகவி பாரதியார்

★

"...பாரதியாரை நேரில் பார்த்துப் பழகக் கொடுத்து வைக்கவில்லையே! என்ற வருத்தம் நம்மில் பலருக்கு உண்டு. இந்தப் புத்தகத்தைப் படித்தால் அந்தக் குறை பெரும்பாலும் தீர்ந்து விடும்"

— *கல்கி*

"உயிரோடு, உடலோடு, உள்ளத் துடிப்போடு கூடிய மகாகவி பாரதியாரை நாம் நேரில் தரிசனம் செய்து, பலவேறு வகைப்பட்ட அவருடைய அனுபவங்களை யெல்லாம் நாமும் கூட இருந்து பார்க்கும்படியாக ஆசிரியர் இந்நூலை இயற்றியிருக்கிறார்"

— *தினசரி*

"வாழ்க்கையைச் சித்தரிப்பதில் மகா நிபுணரான ஸ்ரீ. வ. ரா. அவர்கள் தமது வர்ணனைத் திறமையினால், பாரதியாரை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்"

— *ஆனந்த விகடன்*

விலை ரூ. மூன்று—மலிவுப் பதிப்பு ரூ. 1/8.
(தபால் செலவு தனி)

★

சக்தி காரியாலயம்
சென்னை–14

Regd. No. M. 4162. SHAKTI September, 1949

அழகும் மணமும் பொருந்திய
புஷ்பம் "ரோஜா"
சுவையும் மணமும் பொருந்திய
பாக்குத்தூள் "அசோகா"

தயாரிப்பவர் :
எம். கே. கிருஷ்ண செட்டு
'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூ